DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship
Super visa for parents and grandparents including health insurance
Citizenship
Permanent resident card renewal
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

TEAM SMART
REAL ESTATE PROFESSIONALS
VARATHAN ANUSHAN
THIRU GOBIRAJ
416.219.3333

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1417 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday June 2, 2023

## 'When Canadians invest in Sri Lanka, Sri Lanka's exports will grow and employment rates would rise there'

# "கனடிய முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலிடும் போது அங்கிருந்து கனடாவிற்கு ஏற்றுமதி அதிகரிக்க இலங்கையில் வேலை வாய்ப்புக்களும் உருவாகும்"

### கனடா — இலங்கை வர்த்தக அமைப்பு நடத்திய கலந்துரையாடலில் இலங்கைக்கான கனடிய உயர் ஸ்தானிகர் Eric Walsh தெரிவிப்பு

"கனடா வாழ் முதலீட்டாளர்கள் இலங்கையில் தொழில்களை ஆரம்பிக்கும் போது அந்த முதலீடுகள் மூலம் உற்பத்தி பெருகி. அங்கிருந்து கனடாவிற்கு ஏற்றுமதி அதிகரிக்க இலங்கையில் வேலை வாய்ப்புக்களும் உருவாகும். அழகியதும் நல்ல வளங்கள் நிறைந்ததுமான இலங்கையை மீண்டும் சகஜ நிலைக்கு கொண்டு வர வெளிநாட்டு முதலீடுகள் பக்கபலமாக அமையும்"

இவ்வாறு. கனடா வாழ் இலங்கை வர்த்தக அமைப்பு இன்று பிற்பகல் நடத்திய இலங்கையில் முதலீடு செய்தல் என்ற தலைப்பில் நடத்திய கலந்துரையாடலில் உரையாற்றிய இலங்கைக்கான கனடிய உயர் ஸ்தானிகர் **Eric Walsh** அவர்கள் தெரிவித்தார்.

(உள்ளே விபரமான செய்தி 11ம் பக்கத்தில்)



Sri Nadarajasundram
Real Estate Broker
416-276-6666 srinada21@gmail.com
RE/MAX ACE

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
ACCOUNTING
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service
Mobile: 416.710.9150

RE/MAX ACE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

## Eric Walsh- the Canadian High Commissioner to Sri Lanka, surprised us by reading Tamil Words

# தமிழ்ச் சொற்களை வாசித்து சந்தித்த அன்பர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்திய இலங்கைக்கான கனடிய உயர் ஸ்தானிகர் Eric Walsh



கடந்த செவ்வாய்க்கிழமையன்று மதியம் ரொறன்ரோ மாநகரில் கனடா வாழ் அன்பர்கள் சிலரை நட்பின் நிமித்தம் சந்தித்து உரையாடி உணவருந்திச் சென்ற இலங்கைக்கான கனடிய உயர் ஸ்தானிகர் **Eric Walsh** அவர்கள் மிகவும் நேசிப்புடனும் பொறுப்புணர்வுடனும் உரையாடினார்.

மேற்படி சந்திப்பை "விழித்தெழு பெண்ணே" அமைப்பின் இணை நிறுவனர்கள் நரேந்திரா-சசிகலா ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர். அவர்களுடன் வர்த்தகப் பிரமுகர் சங்கர் நல்லதம்பி-ஷகி தம்பதி, உதயன் பிரதம ஆசிரியர் லோகன்-பத்மா தம்பதி மற்றும் காப்புறுதி ஆலோசகர் லிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(உள்ளே விபரமான செய்தி 11ம் பக்கத்தில்)

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
Sales Representative
RE/MAX COMMUNITY

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East Mississauga, ON, L5A 1W7
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222
905-794-4404
online service: www.remitbee.com

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

CANADIAN HOME APPRAISALS INC.
FOR RESIDENTIAL & COMMERCIAL
SK BALES, CRA, MVA, FRI, CRES
CHAI
Bus: (416) 438-2200
Cell: (416) 801-3219
Website: www.chainc.ca
Email: skbales@hotmail.com
Ottawa Branch - Bus: (343) 698-8004

# UTHAYAN INTERNATIONAL AWARD FESTIVAL - 2023

# உதயன் சர்வதேச விருது விழா 2023

## PRESENTED BY

VIBRANT HOSPITALITY GROUP
DEVELOPMENT MANAGEMENT
OVER 25 YEARS IN THE HOSPITALITY INDUSTRY
OUR EXPERTISE
CONSTRUCTION & DESIGN
OPERATIONS
REVENUE MANAGEMENT
SALES & MARKETING
HUMAN RESOURCES
Shankar Nallathamby, CHA
Director
416 270 4343
shankar@vhgcanada.com
vibranthospitalitygroup.com
Toll Free 1 888 674 7770 Local: 905 769 1509

ARABI
RAGEEP SUBRAMANIAM PRESENTS
FINDER

Latika Gold House
(647) 996 5922
www.latikagoldhouse.ca
L7-2900 Markham Road
Scarborough ON M1X 0C8

WINSMART
FACILITY MAINTENANCE SERVICES
President:
Kamalraj Kathirkamanathan
416 821 7870

## CO-PRESENTED BY

K T GROUP
PRESIDENT & CEO
MR. KANA SELVA

Sugshe Finance Canada Inc.
Sugshi Group of Companies
Ganesan Sugumar
Tel: 416 363 2624
220 Duncan Mills Rd, Unit #83, North York, ON. M3B 3J5

SIVA & JOY REAL ESTATE TEAM
#1 HOMELIFE TEAM IN ONTARIO
KNOWLEDGE - EXPERIENCE - SUCCESS
Siva Shanmuganathan
Joy Selvanayagam
416.545.7482
HomeLife Future Realty Inc., Brokerage

BUY | INVEST | SELL
Happy Home Peace of Life
RECASH REALTOR
RAJEEV SEBARASHA
REALTOR
www.recashrealtor.com
905.226.8515 RE/MAX

CTS BUILDING SUPPLIES LTD
"providing the highest customer service"
416 840 4538
www.ctsbuildingsupplies.com
733 Progress Ave, Scarborough, On. M1H 2W7

UTHAYAN உதயன் விருது UTHAYAN AWARD Uthayan International Awards 2023

President & C.E.O
Kula Sellathurai
Netwyn.Place

## JUNE 18TH 2023

## Sunday, 6.00 PM

## THIS YEAR'S AWARDS ARE...

## இவ்வருடத்திற்குரிய விருதுகள்...

- UTHAYAN LETERARY AND ARTISTIC EXUBERANCE AWARD
- UTHAYAN INTER - COMMUNAL RELATIONSHIP AWARD
- UTHAYAN BUSINESS ENTREPRENEUR AWARD - ONTARIO
- UTHAYAN LEADERSHIP AWARD - ONTARIO
- UTHAYAN YOUTH ICON AWARD - ONTARIO
- UTHAYAN LIFETIME ACHIVEMENT AWARD - EUROPE
- UTHAYAN LIFETIME ACHIVEMENT AWARD - TAMIL NADU

## ASSOSIATE SPONSORS

MAHAANS PICK & PRESS OIL MILL INC AND BULK FOOD STORE TEL:416-293-4010

Chapel Ridge
Funeral Home & Cremation Centre
Vilosan Sivatharman
Funeral Director
8911 Woodbine Avenue
Markham, Ontario L3R 5G1
Telephone: (416) 993-0826
Fax: (905) 305-8128
E-mail: vilosan9@hotmail.com

Residential & Commercial Real Estate Services
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
Sales Representative
RE/MAX COMMUNITY

Remitbee
ONLINE MONEY TRANSFER

AGA BEAUTY LEARNING ACADEMY & SPA
Sasi Naren
Managing Director
Lecturer / Instructor
647.716.5252
3 LOCATIONS TO SERVE YOU
agabeautyacademy@gmail.com
agabeautylearningacademycanada.com
A14, L5 - 2900 Markham Road, Scarborough ON M1X 0C8

## Scarborough Metropolitan Centre

3840 Finch Ave E, Scarborough, ON M1T 3T4

FOR TICKETS : 416 732 1608

Canada

We acknowledge the financial support of the Government of Canada

உதயன் கதிரோட்டம்

# விடுமுறையில் வந்தாலும் கனடியத் தமிழர்களை விருப்பத்துடன் சந்தித்த கனடிய உயர் ஸ்தானிகர் எரிக்

சுமார் நாற்பது வருடங்களுக்கு கனடா என்னும் இந்தக் குளிர் தேசத்தை நாடி வந்தவர்கள் எமது ஈழத் தமிழர்கள். நம் தேசத்தின் மாங்காய் நுனி போன்ற பாகத்தில் நம்மவமர்கள் வாழ்ந்து வந்தோம். இதே போன்று கிழக்குக் கரைகளில் எம் மொழியின் சிறப்புக்களையும் கலாச்சாரத்தை காத்து வந்தார்கள் எமது உறவுகள்.

இனப்படுகொலை ஒன்று நடைபெறுவதற்கு முன்பாக எத்தனையோ வருடங்களுக்கு முன்பாகவே எம் இளைஞர்களை குறிவைத்த இனவாத சிங்கள அரசியல் தலைவர்களும் இராணுவக் கொடியோருக்கும் அஞ்சிய பெற்றோர்கள் தம் பிள்ளைகளை கடல் கடந்து எங்கு சென்றாலும் ஏதோ ஒரு நாட்டுக்கு சென்று தம் பிள்ளை உயிரைக் காப்பாற்றிக் கொள்ளட்டும் என்ற நோக்கோடு பொருட் செலவில் அவர்களை 'கப்பல்' ஏற்றிவிட்டனர்.

எமது பழகி வந்த பாரம்பரிய வாழை இலைகளுக்கு விடை கொடுத்து விமானமேறி இங்கு வந்து கால்பதித்த எம்மவர்களை. இந்த நாட்டின் மேப்பிள் இலைகள் சிரித்த முகத்துடன் வரவேற்றன.

இவ்வாறாக பிறந்த நாட்டின் ஆட்சி அதிகாரத்தில் இருந்தவர்களாலும் அவர்களின் காவல் நாய்களாகத் திரிந்த இராணுவத்தாலும் துரத்தப்பட்ட எம் உறவுகள் இந்த மண்ணில் கால் பதித்து கல்வியிலும் வர்த்தகத்திலும் தொழிற்துறைகளிலும் உயர்ந்த வண்ணம் உலகெங்கும் நன்கு அறியப்பெற்ற ஒரு இனமாக எமது இனம் பெருகப் பெருக. நான்கு திசைகளிலும் அங்கீகரிக்கப்பட்ட ஒரு இனமாக கனடாவில் தமிழர்கள் 'தமிழ்க் கனேடியர்கள்' என்ற அடையாளத்துடன் வாழ்வின் பல தடைகளைத் தாண்டி வெற்றி நடைபோடத் தொடங்கினர்.

இந்த வேளையில் தான் நமது உறவுகள் தம் தாயகத்தை விட்டு துரத்தப்பட்டவர்களாக நீங்கி வநதாலும் பிறந்த மண்ணிற்கும் இந்த குளிர் நாட்டுக்கும் பாலம் அமைக்கும் பணிகளில் தொடர்ச்சியாக செயற்பட்டு வருகின்றனர். அவ்வாறான பணிகளில் வலிகளுக்கு மத்தியில் வாழ்ந்து வரும் எம் தாயக உறவுகளுக்கு உதவிடும் பணிகளிலும் எம்மவர்கள் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றனர்.

கடுமையாக உழைக்கும் பணிகளுக்கு மத்தியில் செயற்பட்டு வரும் எம் தமிழ் அன்பர்களை கொழும்பில் உள்ள கனடிய உயர் ஸ்தானிகர் அலுவலகத்தில் உள்ள அதிகாரிகள் சந்தித்தும் சந்திக்காமலும் தங்கள் வாழ்த்துக்களையும் ஆதரவையும் தெரிவித்து வருகின்றனர். இது நல்லதோர் அங்கீகாரமாக விளங்கி வருகின்றது.

இவ்வாறான அங்கீகாரம் கிட்டிய வகையில் அதிகாரிகள் சிலரும் கனடா என்னும் தங்கள் தாயகம் வரும் போது எம்மவர்கள் சார்ந்த அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் தனிப்பட்டவர்களையும் சந்தித்து உரையாடிச் செல்வதை நாம் கடந்த பல வருடங்களாக நேரடியாகப் பார்த்து வருகின்றோம்.

இந்த வரிசையில் தற்போது தனது தாயகமான கனடாவிற்கு இலங்கையிலிருந்து விடுமுறையில் வந்திருந்தாலும் தனது கனடிய உயர் ஸ்தானிகர் என்ற அந்தஸ்த்தையும் இறக்கி வைத்துவிட்டு கனடியத் தமிழர்களை விருப்பத்துடன் சந்தித்து உரையாடிய கனடிய உயர் ஸ்தானிகர் எரிக் வால்ஸ் அவர்கள் தற்போது எம் மக்களால் போற்றப்படும் ஒருவராக தெரிவாகியுள்ளார். எம்மவர்களின் எப்போதும் சரியானதாகவே இருக்க வேண்டும் என்பதை சுட்டிக்காட்டி அவர் இங்கு சந்தித்து எமது பிரதிநிதிகளோடு உரையாடிய விடியங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து செயற்படுவோம் என்ற வார்த்தைகளோடு அடுத்த வெள்ளி வரும் வரை விடைபெறுகின்றோம்.

**Business for Sale**

Scarborough வில்
30 வருடங்களாக இயங்கிவரும்
Auto Parts Rebuilding Company
விற்பனைக்கு உண்டு.

Call:
(416) 543-8170

**Help Wanted**

**Workers needed for renovation company. Must have experience in one of the following:**

- Drywall Installation
- Painting
- Hardwood Installation
- Bathroom Reno
- Kitchen Reno

Call - Siva
**416-706-8160**

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

# நீதிபதி மா.இளஞ்செழியனின் மற்றுமொரு அதிரடி தீர்ப்பு!

கடந்த 2013 ஆம் ஆண்டு முச்சக்கர வண்டி சாரதியான சதாசிவம் குகானந்தன் என்பவரை கொலை செய்த குற்றச்சாட்டின் கீழ் பிறிதொரு முச்சக்கர வண்டி சாரதியான வவுனியா, தோணிக்கல் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவருக்கு மரண தண்டனை விதித்து வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் இன்று தீர்ப்பளித்தார்.

கடந்த 2013 ஆம் ஆண்டு தை மாதம் 28 ஆம் திகதி வவுனியா, மருக்காரம்பளை பகுதியில் உள்ள முச்சக்கர வண்டி சாரதி ஒருவரின் வீட்டில் புதுமனை புகுவிழா இடம் பெற்றுள்ளது.

குறித்த நிகழ்வு முடிந்ததும் இரவு இடம்பெற்ற விருந்துபசாரத்தின் போது குறித்த அங்கு கலந்து கொண்டவர்களுக்கிடையில் கைகலப்பு இடம்பெற்றுள்ளது. பின்பு அவரவர் தமது வீடுகளுக்கு சென்றுள்ளனர்.

மறுநாள் 29 ஆம் திகதி காலை 7 மணியளவில் வவுனியா இலங்கை வங்கியில் இருந்து 100 மீற்றர் தூரத்தில் புகையிரத கடவையில் சடலம் ஒன்று காணப்படுவதாக பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

இதனையடுத்து குறித்த சடலம் தடயவியல் பொலிஸாரின் உதவியுடன் மீட்கப்பட்டதுடன், முச்சக்கர வண்டி ஒன்றில் இரத்தக்கறை காணப்படுவதாகவும் பொலிஸாருக்கு தகவல் கிடைத்திருந்தது.

இதையடுத்து முதலாம் சந்தேக நபரான வவுனியா, தோணிக்கல் பகுதியைச் சேர்ந்த முச்சக்கரவண்டி சாரதி ஒருவர் கைது செய்யப்பட்டதுடன், இரண்டாம் சந்தேக நபரான பிறிதொரு முச்சக்கர வண்டி சாரதி சந்தேகத்தில் கைது செய்யப்பட்டார்.

வழக்கு விசாரணைகள் நடைபெற்று தடுப்பு காவலில் இருந்து இருவரும் விடுவிக்கப்பட்டு, கடந்த 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 07 குறித்த கொலை சம்பவம் தொடர்பில் முதலாம் மற்றும் இரண்டாம் எதிரிகளுக்கு எதிராக சட்டமா அதிபர் திணைக் களத்தால் அரச சட்ட வாதியான தர்சிகா திருக்குமரநாதன் அவர்களின் நெறிப்படுத்தலில் வவுனியா மேல் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வந்த போது முச்சக்கர வண்டியில் பெறப்பட்ட ரத்த மாதிரியும், கொலை செய்யப்பட்ட நபரின் இரத்த மாதிரியும் ஒன்றுடன் ஒன்று ஒத்துப் போவதை தடயவியல் பொலிஸார் சாட்சியத்தின் மூலம் வெளிப்படுத்தினர்.

அத்துடன், மொட்டை விசை பாவித்ததன் மூலம் வெளிக்காயம் மற்றும் உட்காயம் ஏற்பட்டு குறித்த மரணம் ஏற்பட்டுள்ளதாக சட்ட வைத்திய அதிகாரி மன்றில் சாட்சியமளித்தார்.

சந்தர்ப்பம், சூழ்நிலை, சாட்சியம் மூலம் முதலாம் எதிரியான பொதுக் கிணறு வீதி தோணிக்கல்லைச் சேர்ந்த ஜேசுதாசன் இலங்கேஸ்வரன் தான் குறித்த கொலையை நிகழ்த்தியுள்ளார் என்பதை அரச சட்டவாதியால் நியாயமான சந்தேகத்திற்கு அப்பால் நிரூப்பிக்கப்பட்டுள்ளதால், முதலாம் சந்தேக நபருக்கு மரண தண்டனை வழங்கி வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் தீர்ப்பளித்தது டன், இரண்டாம் எதிரியான சந்தேக நபரை விடுவித்து மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

**TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE**

எல்லாவிதமான வலிகளுக்கும்
ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை
மனத்தளர்ச்சி, தலைவலி,
நீரிழிவு நோய், வயிற்றுவலி,
மாதவிடாய் சம்மந்தமானவையும்
உடற்பருமன் குறைத்தல்

All Pain & Achos, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
தொடர்புகொள்ளவும்

**Tel: (416) 754-4024**

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC
D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# கிழக்கு மாகாணத்தின் மருதமுனை கடற்கரையில் தென்னை மரங்களை நடும் நிகழ்வு





(29-05-2023)

மரநடுகை செயற்திட்டம் இரண்டாம் கட்டத்தின் கீழ் பயன்தரு தென்னை மரங்களை நட்டு கடலரிப்பை தடுத்து மருதமுனை கடற்கரையின் அழகினைப் பேணுவோம் எனும்தொனிப்பொருளில் ஞாயிற்றுக்கிழமை (28) மாலை மற்றும் திங்கட்கிழமை (29) காலை தொடர்ச்சியாக மருதமுனை கடற்கரை லைட் ஹவுஸ் அருகில் இடம் பெற்றது.

பெரிய நீலாவணை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அப்துல் கபூர் தலைமையில் இந்நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப்பின் கல்முனை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவிற்கான இணைப்பாளர் பி.எம். முகம்மட் ஜ.ஃபரின் ஏற்பாட்டில் மருதமுனை கடற்கரைப் பிரதேசத்தில் இடம்பெற்றது. இதன் போது மருதமுனை பகுதியை நேசிக்கின்ற பல்வேறு சமூக ஆர்வலர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

அம்பாரை மாவட்டத்தில் பசுமைப்புரட்சியை ஏற்படுத்துவதற்காக பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப்பினால் முன்னெடுக்கப்பட்டு வரும் ஒரு மில்லியன் மரங்களை நடும் வேலைத்திட்டத்தின் கீழ் இவ்வாறு மருதமுனை பகுதி கடற்கரை பிரதேசத்தை கடல் அரிப்பிலிருந்து தடுப்பதற்கும் கடற்கரையின் அழகினை பேணுவதற்குமாக தென்னை மரங்கள் நடப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் இதன் முதல் கட்டமாக பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப்பினால் மருதமுனை பகுதி கடற்கரையில் இந்நிகழ்வு முன்னெடுக்கப்பட்டிருந்ததுடன் மரங்களை வளர்க்கும் மனங்களை வளர்ப்போம் எனும் தொனிப்பொருளின் கீழ் எதிர்வரும் ஐந்து வருடத்திற்குள் ஒரு மில்லியன் மரங்களை அம்பாரை மாவட்டத்திலுள்ள சகல பிரதேசங்களிலும் நடுவதற்கான நோக்கோடு இவ்வேலைத்திட்டம் இடம்பெற்று வருகின்றது.

அம்பாரை மாவட்டத்திலுள்ள அட்டாளைச்சேனை, இறக்காமம், திருக்கோவில், நிந்தவூர், சம்மாந்துறை, கல்முனை, மருதமுனை, பானமை, அக்கறைப்பற்று, சாய்ந்தமருது, பாலமுனை, ஒலுவில், நாவிதன்வெளி, மாவடிப்பள்ளி, வரிப்பத்தான்சேனை ஆகிய பிரதேசங்களில் இவ்வேலைத்திட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

வீடுகள், பொது இடங்கள், கடற்கரைப் பிரதேசங்கள், அரச நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், மத ஸ்தாபனங்கள்,வயல் காணிகள் உள்ளிட்ட சகல இடங்களிலும் பொதுமக்களின் பங்களிப்புடன் இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது.

# மன்னார் மாவட்டத்தில் பராமரிப்பின்றி காணப்படும் காணிகள் தொடர்பாக மன்னார் அரச அதிபரின் முக்கிய அறிவித்தல்



(28-05-2023)





மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி மாணவனும், ஜனாதிபதி சாரணர் விருது பெற்றவருமான தேவேந்திரன் மதுஷிகன் (வயது-20) பாக்குநீரிணையை நீந்திக் கடந்து சாதனை படைத்துள்ளார்.

ஞாயிற்றுக்கிழமை (28) அதிகாலை 1 மணியளவில் தனுஷ்கோடியிலிருந்து தலை மன்னாரை நோக்கி தனது நீச்சல் பயணத்தை ஆரம்பித்த தேவேந்திரன் மதுஷிகன் பிற்பகல் 03.05 மணியளவில் தலைமன்னாரை வந்தடைந்தார்.

தனுஷ்கோடிக்கும் தலைமன்னாருக்கும் இடையே உள்ள சுமார் 30 கிலோ மீற்றர் தூரத்தை பாக்கு நீரிணையை நீந்திக் கடந்து சாதனை படைத்துள்ளார்.

இதன் போது அருட்தந்தையர்கள், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ஏ. ஸ்ரான்லி டிமேல், மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. கலாமதி பத்மராஜா, மன்னார் மாவட்ட சாரணர் இயக்க ஆணையாளர் ஸ்ரான்லி டிமேல் லெம்பேட், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ். வினோ நோகராதலிங்கம், சாள்ஸ் நிர்மலநாதன் கிழக்கு மாகாண பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் (ஜனா) மற்றும் ஈ.பி. ஆர்.எல்.எப் கட்சியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன், மன்னார் நகர சபையின் முன்னாள் தவிசாளர் ஞ. அன்ரனி டேவிட்சன், பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் செயலாளர் டானியல் வசந்த, ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியின் மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆர்.குமரேஸ், தமிழீழ விடுதலை இயக்கம் ரெலோ கட்சியின் மாவட்ட அமைப்பாளர் லுஸ்ரின் மோகன்ராஜ், ஏ.கே.ஆர். நிறுவன பணிப்பாளர் றொஜன் உட்பட பலரும் கலந்து கொண்டு வரவேற்றனர்.

# எங்களுடைய காணிகளை எங்களிடம் ஒப்படைப்பதில் என்ன பிரச்சனை?

## பொலிகண்டி நலன் புரி நிலையத்தில் வாழ்ந்து வரும் யாழ் வலி வடக்கு மக்கள் கேள்வி

## மெசிடோ நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தலைமையிலான குழுவினர் விஜயம்

- மன்னார் நிருபர் (30-05-2023)





நீண்ட காலமாக யாழ் வலி வடக்கு மக்களாகிய நாங்கள் முகாம் வாழ்க்கையை வாழ்ந்து வருகின்ற நிலையில் குறித்த முகாம் வாழ்க்கைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும் என வலி வடக்கு பொலிகண்டி நலன் புரி நிலையத்தில் வாழ்ந்து வரும் மக்கள் கூட்டாக கோரிக்கை வைத்துள்ளனர்.

வலி வடக்கு பொலிகண்டி நலன் புரி நிலையத்தில் வாழ்ந்து வரும் மக்களை மெசிடோ நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தலைமையிலான குழுவினர் திங்கட்கிழமை (29) மாலை நேரடியாக சென்று சந்தித்தனர்.

இதன் போது அவர்கள் குறித்த கோரிக்கையை முன் வைத்துள்ளனர்.

இதன் போது வலி வடக்கு பொலிகண்டி நலன் புரி நிலையத்தில் வாழ்ந்து வரும் மக்கள் மேலும் தெரிவிக்கையில், நாங்கள் தொடர்ச்சியாக எமது சொந்த இடங்களை விட்டு அகதி முகாமில் 30 வருடங்களுக்கு மேலாக அகதி வாழ்க்கை வாழ்ந்து வருகின்றோம். மாரி மாரி வருகின்ற அரசாங்கம் 30 வருடங்களுக்கு மேலாக எங்களை ஏமாற்றி வருகின்றனர்.

நாங்கள் முகாமில் அவல வாழ்க்கை வாழ்ந்து வருகின்றோம்.

மழை காலங்களில் நாங்கள் பல்வேறு கஷ்டங்களையும் துன்பங்களையும் அனுபவித்து வருகிறோம்.

எனவே எங்களுடைய காணிகள் உடனடியாக எங்களின் கைகளில் ஒப்படைக்கப்பட வேண்டும். அதற்கு உரிய அதிகாரிகள் துரித நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். பிரதேச செயலகம் மற்றும் அதிகாரிகள் வந்து தவறாது பதிவுகளை மேற்கொண்டு செல்லுகின்றனர். ஆனால் காணி விடுவிப்பு கான எவ்வித முன்னேற்றமும் இல்லை.

நாங்கள் தற்போது உள்ள முகாமில் இருந்து எங்களை உடனடியாக எழும்புமாறு குறித்த காணி உரிமை யாளர்களினால் கோரப்படுகின்றது.

ஆனால் எங்கள் சொந்த இடங்களில் அரச படைகள் முகாமிட்டு உள்ளனர்.எங்களுடைய காணிகளை எங்களிடம் ஒப்படைப்பதில் யாருக்கு என்ன பிரச்சனை?

யுத்தம் முடிந்து இன்று சுமார் 15 வருடங்கள் கடந்து விட்டது. ஆனால் எமது காணிகள் விடுவிக்கப்படவில்லை.

எமது காணிகளை விடுவிக்கக்கோரி தொடர்ந்து பல போராட்டங்களை முன்னெடுத்து வருகிறோம்.

எமது காணிகள் எங்களிடம் ஒப்படைக்கப்பட்டு நாங்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட வேண்டும்.

நாங்கள் தொடர்ந்து இந்த நாட்டில் அகதியாக வாழ முடியாது. எனவே எமது காணியை மீட்டுத்தர அனைவரும் ஒத்துழைப்பு வழங்குங்கள் என குறித்த மக்கள் கோரிக்கை முன் வைத்தனர்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# சர்வதேச சூழல் பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு மர நடுகை

- மன்னார் நிருபர் (30-05-2023)

சர்வதேச சூழல் பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு “மரம் நடுவோம் மழை பெறுவோம்” எனும் கருப்பொருளில் கறிராஸ் வாழ்வுதயம் நிறுவனத்தின் சூழல் பாதுகாப்பு பிரிவினால் திங்கட்கிழமை (29) காலை 9.30 மணி தொடக்கம் 11.30 மணி வரை பன்னவெட்டுவான் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கும், ஊழியர்களுக்கும் விழிப்புணர்வும் மர நடுகையும் இடம்பெற்றது.

இந்நிகழ்வானது வாழ்வுதய சூழல் பாதுகாப்பு பிரிவின் இணைப்பாளர் யேசுதாசன் அவர்களின் ஒழுங்கமைப்பில் இடம்பெற்றது.







தொழில்நுட்பக் கல்லூரியின் இணைப்பாளர். எஸ். திருப்பரன், வாழ்வுதய இயக்குனர் அருட்பணி அன்ரன் அடிகளார், மத்திய சுற்றாடல் அதிகார சபையின் மாவட்ட அதிகாரி திருமதி. ஜே.எம். மேரி அன்ரனிரா இ வனவிரிவாக்கல் பிரிவின் அதிகாரி. வினோத் டபரேரா ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கினர்.

வ ி ழ ி ப ் பு ண ர ் வு நிகழ்வின் பிற்பாடு மரங்கள் நடப்பட்டன. இந்நிகழ்வில் 25 மாணவர்களும் 10 ஊழியர்களும் கலந்து பயன் பெற்றுக்கொண்டனர்.

# மன்னார் மாவட்ட முச்சக்கரவண்டி சங்கத்தின் தலைவர் சுவதீசன் மீது தாக்குதல் – பலத்த காயத்துடன் வைத்தியசாலையில் அனுமதி



- மன்னார் நிருபர் (30-05-2023)

மன்னார் மாவட்ட முச்சக்கரவண்டி சங்கத்தின் தலைவர் சசி என அழைக்கப்படும் சுப்பிரமணியம் சுவதீசன் (வயது-44) என்பவர் மீது செவ்வாய்க்கிழமை (30) மாலை 5 மணியளவில் மன்னார் பேருந்து தரிப்பிடத்திற்கு முன் உள்ள முச்சக்கர வண்டி தரிப்பிடத்தில் வைத்து குழு ஒன்றினால் கடுமையாக தாக்கப்பட்ட நிலையில் பலத்த காயமடைந்த நிலையில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்விடயம் குறித்து பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் மன்னார் மாவட்ட முச்சக்கரவண்டி சங்கத்தின் தலைவர் சுப்பிரமணியம் சுவதீசன் தெரிவிக்கையில், மன்னார் பேருந்து தரிப்பிடத்திற்கு முன் உள்ள முச்சக்கர வண்டி தரிப்பிட பகுதியில் செவ்வாய்க்கிழமை (30) மாலை சிலர் முரண்பாட்டுக் கொண்டிருந்தனர்.

இவ்விடயம் குறித்து முச்சக்கர வண்டி தலைவர் என்ற வகையில் குறித்த முரண்பாடு குறித்து மன்னார் பொலிஸாருக்கு தெரியப்படுத்தும் வகையில் தொலைபேசி ஊடாக தொடர்பை ஏற்படுத்திக் கொண்டிருந்தேன்.

இதன் போது எமது சங்கத்தைச் சேர்ந்த 4 முச்சக்கர வண்டி சாரதிகள் மற்றும் அழைத்து வரப்பட்ட சுமார் 20 பேருக்கு மேற்பட்ட நபர்கள் என் மீது முச்சக்கர வண்டியில் வைத்து கொலை வெறி தாக்குதலை மேற்கொண்டனர்.

எமது சங்கத்தின் முன்னாள் செயலாளரின் செயல்பாடு சரி இல்லாத நிலையில் அவர் பொறுப்பில் இருந்து நீக்கப்பட்டார்.

முன்னாள் செயலாளருக்கு எதிராக முச்சக்கர வண்டி சங்கத்தினாலும் மன்னார் பொலிஸாரினாலும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதனால் அவருடன் சேர்ந்த ஒரு சிலர் எங்களுடன் முரண்பட்ட நிலையில் இத் தாக்குதலின் பின்னணியில் என்னுடன் முரண்பட்ட 4 முச்சக்கர வண்டி ஓட்டுனர்கள் சுமார் 20 பேருக்கு மேற்பட்டவர்களை அழைத்து வந்து என் மீது கடுமையாக தாக்கியுள்ளனர்.

தற்போது நான் பலத்த காயங்களுடன் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளேன்.

என்னை கொலை செய்யும் நோக்குடன் அவர்கள் என் மீது தாக்குதலை மேற்கொண்டனர்.

இது எனக்கும் எனது குடும்பத்திற்கும் பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது.

எனவே சம்பவத்துடன் தொடர்புடைய எமது சங்கத்தை சேர்ந்த முச்சக்கர வண்டி ஓட்டுனர்கள் 4 பேரையும் அவர்கள் அழைத்து வந்தவர்களையும் பொலிஸார் கைது செய்து சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.


MORTGAGE

- ⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- ⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- ⇒ Private Mortgage (No Income Verification)
- ⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- ⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- ⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- ⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC



www.mortgageclinicanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP

Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி

1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



RIGHT AT HOME REALTY INC.

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE

Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

# மத்திய கிழக்கு நாடுககளில் சிக்கித் தவிக்கும் பெண் தொழிலாளர்களின் பாதுகாப்பை வலியுறுத்தி மன்னாரில் கவனயீர்ப்பு போராட்டம்

இலங்கை செய்திகள்
Sri Lanka News



- மன்னார் நிருபர் (01-06-2023)

மத்திய கிழக்கு நாடுகளில் சிக்கிக் கொண்டிருக்கும் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காக சென்ற பெண் தொழிலாளர்களின் பாதுகாப்பை வலியுறுத்தி, வடகிழக்கு பெண்கள் கூட்டின் ஏற்பாட்டில் வியாழக்கிழமை (1) காலை 10 மணியளவில் மன்னார் பஜார் பகுதியில் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஓமான் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்கு இலங்கையில் இருந்து வேலை வாய்ப்புக்காக சென்று நாடு திரும்ப முடியாத நிலையில் சிக்கி தவிக்கும் பெண் தொழிலாளர்களை பாதுகாப்பாக நாட்டிற்கு திருப்பி கொண்டு வாருமாறும், அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு கோரி மன்னாரில் குறித்த கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பல்வேறு வசனம் எழுதிய பதாகைகளை ஏந்தியவாறு ஈடுபட்டனர்.

இதன் போது போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மத்திய கிழக்கு நாடுகளில் பலவிதமான சித்திரவதைகளை அனுபவித்த இலங்கைப் பெண்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்குமாறும் கோரிக்கை விடுத்தனர்.

இதன் போது போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் இலங்கை அரசின் கவனத்திற்கு கொண்டு வரும் வகையில் மகஜரும் வெளியிட்டனர்.

குறித்த கவனயீர்ப்பு போராட்டத்தில் மெசிடோ நிறுவன பணியாளர்களும் கலந்து கொண்டிருந்தனர்.



# ஆயுர்வேத வைத்திய நியமனத்தில் யூனானி வைத்தியர்கள் புறக்கணிப்பு — மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் ஜனாதிபதியிடம் எடுத்துரைப்பு!



- மன்னார் நிருபர் (01-06-2023)

ஆயுர்வேத வைத்தியர்களை நியமனம் செய்யும் போது ஆயுர்வேத, சித்த மற்றும் யூனானி வைத்தியர்களை உள்ளடக்கி நியமனம் வழங்கப்படுவது வழக்கமானதொன்றாக இருந்து வந்தது.

தற்போது இந்த நடைமுறை மீறப்பட்டுள்ளது. இம்முறை 100க்கும் மேற்பட்ட ஆயுர்வேத வைத்தியர்களுக்கு மட்டும் நியமனம் வழங்குவது, யூனானி வைத்தியர்களுக்கு இழைக்கப்படும் அநீதி ஆகும் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் ஜனாதிபதிக்கு வியாழக்கிழமை (1) எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி நியமனங்கள் தொடர்பில், பாதிக்கப்பட்டவர்கள் மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுதீனை தொடர்புகொண்டு கவலை தெரிவித்ததையடுத்து, அவர் ஜனாதிபதிக்கு இது தொடர்பில் அவசர கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

ஆயுர்வேத வைத்தியர்கள் நியமனங்களின் போது, ஒரே முறையில் 7 ஆயுர்வேத வைத்தியர்களும் இரு யூனானி வைத்தியர்களும் ஒரு சித்த வைத்தியரும் உள்வாங்கப்பட்டு, இந்த நியமனங்கள் வழங்கப்பட்டு வந்தன.

ஆனால், இம்முறை வழங்கப்பட இருக்கின்ற ஆயுர்வேத வைத்தியர்களுக்கான நியமனங்களில், யுனானி வைத்தியர்கள் உள்ளீர்க்கப்படாமையானது சந்தேகத்தை தோற்றுவித்துள்ளதுடன், இது யுனானி வைத்தியர்களுக்கு இழைக்கப்படும் அநீதி என தான் கருதுவதாகவும் குறித்த கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேற்படி ஆயுர்வேத வைத்தியர்களின் நியமனத்தில், யூனானி வைத்தியர்கள் புறக்கணிக்கப் பட்டுள்ளமை தொடர்பில் கவனம் செலுத்துமாறு பாதிக்கப்பட்டுள்ள யூனானி வைத்தியர்களுக்கு நியாயத்தை பெற்றுக் கொடுப்பதுடன், மேற்படி நியமனத்தில் யூனானி வைத்தியர் களையும் இணைத்துக் கொள்வதற்கு தேவையான பணிப்புரையை உரிய அதிகாரிகளுக்கு வழங்க வேண்டும் எனவும் அவர் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுதீன், ஜனாதிபதியின் செயலாளரை தொலைபேசியில் தொடர்புகொண்டு, யூனானி வைத்தியர்களுக்கு இழைக்கப்பட்டு இருக்கின்ற அநீதி தொடர்பில் தெளிவுபடுத்தி உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# "இந்திய மீனவர்களை தடுக்கும் வல்லமை இலங்கை கடற்படையினரிடம் இல்லை" டக்ளஸ் தெரிவிப்பு



- யாழிலிருந்து நடராசா லோகதயாளன்

இந்திய மீனவர்கள் எல்லை தாண்டி இலங்கை கடற்பரப்பில் பிரவேசித்து மீன் வளங்களை அபகரித்துச் செல்வதை தடுக்கும் வல்லமை இலங்கை கடற்படையிடம் இல்லை என்று கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வெளிப்படையாகத் தெரிவித்துள்ளார்.

தமது மீனவர்களின் நலன்களை பாதுகாக்க முடியாத கடற்படை எப்படி இலங்கை நாட்டை பாதுக்காக்கும் என்று தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

எல்லை தாண்டி தமது கடற்பரப்பில் அத்துமீறி பிரவேசித்து கடல் வளங்களை அபகரித்து, தமிழ் பேசும் மீனவர்களின் வாழ்வாதாரங்களை பாதிக்கும் வகையில் இந்திய மீனவர்கள் செயற்பட்டு கைது செய்யப்பட்டாலும் அவர்களின் விடயங்களை மனிதாபிமானமாக கையாள்கின்றோம் என்கின்றனர் கடற்படையினர்.

தமது கடற்படையிடம் இந்திய மீனவர்களின் வருகையை கட்டுப்படுத்தும் வல்லமை இல்லை என்பதை ஒப்புக்கொண்டுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இலங்கை கடற்படையினரின் டோறாப் படகையே இந்திய மீனவர்களின் படகுகள் சேதப்படுத்தக் கூடியன என்றும் அவர் குறிப்பிட்டார்.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் "அத்துமீறும் இந்திய மீனவர்கள் தொடர்பான விவகாரம்" நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அங்கஜனால் எழுப்பப்பட்டது.

"2004ஆம் ஆண்டிலிருந்து இந்தியாவுடன் இது தொடர்பில் பேசி வருகின்றோம். அவர்களும் இரண்டு ஆண்டுகள் தாருங்கள் என்று கேட்கின்றார்கள். ஆனால் செய்யவில்லை. அவர்களுக்கும் தாங்கள் செய்வது தவறு என்று தெரியும். ஆனால் எல்லை தாண்டி மீன்பிடிக்கும் விடயத்தை விடுகின்றார்கள் இல்லை. அத்துமீறும் இந்திய மீனவர்களின் பின்னால் தமிழக அரசியல்வாதிகள் இருக்கின்றார்கள். அதனால் இந்தப் பிரச்சினை தீர்க்கப்படவில்லை" என்றார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

தமது தரப்பிலுள்ள சிக்கல்கள் மற்றும் சவால்கள் குறித்தும் அவர் மாவட்ட ஒருங்கிணைப்பு கூட்டத்தில் பகிர்ந்து கொண்டார்.



"எமது கடற்படையினர் இரண்டு காரணங்களுக்காக இந்திய மீனவர்கள் விடயத்தில் தயக்கம் காட்டுகின்றனர். அரசியல் காரணங்களுக்காகவும், இந்திய மீனவர்களின் படகுகளைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் அவர்களிடம் இல்லை என்பதாலும் தயங்குகின்றனர். இந்திய மீனவர்களின் படகுகள் மோதினால் கடற்படையினரின் படகுதான் சேதமாகும்" என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த கடற்படையின் வடக்கு மாகாண இரண்டாம் நிலை அதிகாரி, இந்திய மீனவர்களின் படகுகளைக் கைது செய்கின்றோம். அவர்கள் பல நூறு படகுகளில் வரும்போது கட்டுப்படுத்துவதற்கான வளம் தம்மிடம் இல்லை என்றார்.

"இந்திய மீனவர்களை நாம் சுட்டுப்பிடிப்பதில்லை. அவர்களை மனிதாபிமானத்துடன் அணுகின்றோம். அத்துமீறும் மீனவர்கள் தொடர்பில் இராஜதந்திர ரீதியில் அணுகுவதே சிறப்பானது" என்று குறிப்பிட்டார்.

"இலங்கையின் பாதுகாப்பு அமைச்சுக்கு வரவு - செலவுத் திட்டத்தில் 20 சதவீதம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவது கடற்படையின் பொறுப்பு. எமது மீனவர்களைப் பாதுகாக்க முடியாத கடற்படை எமது பிரதேசத்தில் எத்தனையோ தனியார் காணிகளை ஆக்கிரமித்து இன்னமும் ஏன் நிலைகொண்டுள்ளது?" என்று நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கேள்வி எழுப்பினார்.

அவரது கருத்தை ஆமோதிக்கும் வகையில் பேசிய ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அங்கஜன், இப்படியான நிலையில் நாட்டை எப்படி கடற்படை காப்பாற்றும் என்று கேட்டார்.

"அத்துமீறும் இந்திய மீனவர்களைக் கட்டுப்படுத்த முடியாது என்றால் நீங்கள் எப்படி இன்னொரு நாட்டிடம் இருந்து எமது நாட்டைக் காப்பாற்றப்போகின்றீர்கள்?" என்று நாடாளுமன்ற உறுப்பினர் இ. அங்கஜன் கேள்வி எழுப்பினார்.

இந்திய மீனவர்கள் விவகாரம் தொடர்பில் இந்தியத் தூதுவருடன் அனைத்து கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துரையாடுவது என்று தீர்மானிக்கப்பட்டது. அத்துடன் கடற்படையின் ஊடாக எவ்வாறு கட்டுப்படுத்தலாம் என்ற திட்டத்தை சமர்ப்பிக்குமாறு கடற்படை அதிகாரிக்கு ஒருங்கிணைப்புக் குழுவால் பணிப்புரை விடுக்கப்பட்டது.



இலங்கை செய்திகள் Sri Lanka News

# மன்னாரில் சிறப்பாக இடம் பெற்ற பெண்கள் மரபு சார் உணவு கொண்டாட்டம்

27.05.2023

தமிழர் பாரம் பரிய உணவுகளை மக்கள் மத்தியில் பிரபலப்படுத்தும் முகமாக மன்னார் மாதர் அபிவிருத்தி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் அவுஸ்ரெலியன் எய்ட் நிறுவனத்தின் நிதி ஒழுங்கமைப்பில் ஏற்பாடு செய்யப்பட்ட மரபு சார் உணவு கொண்டாட்டம் மாதர் அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவி மகாலட்சுமி குருசாந்தன் தலைமையில் சனிக்கிழமை (27) மன்னார் நகர சபை மண்டபத்தில் இடம் பெற்றது.

மன்னார் மாவட்டத்தில் உள்ள பெண்கள் குழுக்களை ஒன்றினைத்து அவர்கள் ஊடாக இயற்கையான முறையில் தயாரிக்கப்பட்ட உணவுகளை







தயாரித்து காட்சிப்படுத்தி அதன் ஊடாக இயற்கையான முறையிலான உணவு தயாரிப்பை அதிகரிக்கும் முகமாக குறித்த நிகழ்வு எற்பாடு செய்யப்பட்டு ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது.

குறித்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ஸ்ரான்லி டிமேல் சிறப்பு விருந்தினராக மன்னார் பிரதேச செயலாளர் ம. பிரதீப், பெண்கள் ஒன்றிய செயற்பாட்டாளர்கள் கிழக்கு பல்கலைகழக விரிவிரையாளர்கள், முஸ்லீம் மாதர் அபிவிருத்தி ஒன்றிய குழுவினர் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

மன்னார் மாவட்டத்தில் உள்ள மாதர் சங்கத்தின் பெண் உறுப்பினர்களால் தயாரிக்கப்பட்ட 500 மேற்பட்ட உணவுகள் காட்சிப்படுத்தப்பட்டதுடன் மாதர் ஒன்றிய இளைஞர் குழுவினரால் பல்வேறு கலை நிகழ்வுகளும் இடம் பெற்றது.

அதே நேரம் மாதர் ஒன்றியத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட தோட்ட செய்கையை சிறப்பாக மேற்கொண்ட பெண்களுக்கான ஊக்குவிப்பு பரீசில்களும் குறித்த நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட பெண்களுக்கு வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வாக்காளர் கணக்கெடுப்புக்கான காலக்கெடு – மே 31

## பதிவை உறுதிசெய்யுமாறு பசுமை இயக்கம் வேண்டுகோள்



இலங்கைத் தேர்தல்கள் ஆணையம் 2023ஆம் ஆண்டுக்கான வாக்காளர் கணக்கெடுப்பின் மே மாதம் 31ஆம் திகதி என அறிவித்துள்ளது. இக்காலப்பகுதிக்குள் கிராம சேவையாளர்கள் கணக்கெடுப்பை மேற்கொள்வதற்கு வீடுகளுக்கு வருகை தராவிடில் வாக்காளர்கள் உடனடியாகத் தங்கள் பகுதிக்குரிய கிராம சேவையாளரைத் தொடர்புகொள்ள வேண்டும் என்றும் தேர்தல் ஆணையம் கேட்டுக்கொண்டுள்ளது. தேர்தல் ஆணையத்தின் இந்த அறிவிப்பை உதாசீனம் செய்யாது வாக்காளர்கள் அனைவரும் இந்த ஆண்டுக் கணக்கெடுப்பில் தங்கள் பெயர் பதிவு செய்யப்படுவதை உறுதிசெய்துகொள்ள வேண்டும் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதுதொடர்பாகத் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் பொதுச்செயலாளர் மகேசன் கஜேந்திரன் அவர்கள் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்திருக்கும் அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில், வாக்காளர் கணக்கெடுப்பில் ஒருதடவை பெயர்களைப் பதிவுசெய்தால் போதுமானது எனக்கருதிப் பலர் தொடர்கணக்கெடுப்புக் குறித்து அக்கறை செலுத்துவதில்லை. இதனால், புதிய தேருநர் இடாப்பில் அவர்களது பெயர் நீக்கப்பட்டு விடுகிறது. இதைக் கருத்திற்கொண்டு கிராமசேவையாளர்கள் தற்போது மேற்கொண்டுவரும் 2023ஆம் ஆண்டுக்கான கணக்கெடுப்பில் வாக்காளர்கள் ஒவ்வொருவரும் தங்கள் பெயர் இடம்பெறுவதை உறுதிசெய்வது அவசியமாகும்.

இலங்கையில் வாக்காளர் தினம் கொண்டாடப்பட்டுவரும் யூன் 01 ஆம் திகதியன்று 18 வயது பூர்த்தியடைந்த இலங்கைக் குடிமகனாகவுள்ள எவரும் வாக்களிக்கும் உரிமை பெற்றவர்களாகக் கருதப்படுவார்கள். வாக்காளர்களாகத் தகுதி பெற்றுள்ள புதியவர்களும் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தித் தேருநர் இடாப்பில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துகொள்ள வேண்டும். இதன்மூலம் மாத்திரமே வாக்களிக்கும் உரிமை உறுதி செய்யப்படும்.

ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலேயே பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும். உதாரணமாக, 1989ஆம் ஆண்டு யாழ்-கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தில் 11 பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவுசெய்யப் பட்டிருந்தனர். தற்போது வாக்காளர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்ததன் காரணமாகப் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 7ஆகக் குறைவடைந்துள்ளது.

வாக்காளர்களின் எண்ணிக்கை குறைந்து செல்லுதல் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆசனங்களில் மாத்திரம் குறைவை ஏற்படுத்தும் ஒன்றல்ல. மாவட்டத்தின் அபிவிருத்திக்கு ஒதுக்கப்படும் நிதி, மாவட்டத்திலிருந்து பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகும் மாணவர்களின் எண்ணிக்கை போன்றவற்றிலும் குறைவை ஏற்படுத்தும். அந்தவகையில், வாக்களிக்கத் தகுதி பெற்ற அனைவரும் தங்களை வாக்காளராகப் பதிவு செய்தல் ஒரு தேசியக் கடமையாகும்.

எனவே, வாக்காளர்கள் அனைவரும் தாமதமின்றித் தமது கிராமசேவையாளருடன் தொடர்பு கொண்டு இந்த ஆண்டுக்கான வாக்காளர் கணக்கெடுப்பில் தங்கள் பெயர் இடம்பெறுவதைத் தவறாது உறுதிசெய்துகொள்ள வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.


THANA INSURANCE Inc.

# Thana Insurance Inc

## NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |

20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி

மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி

சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்

உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்



Call us Today

Cell : 416-728-5772
Office : 416-519-3896

**Thana Manickavasagar**
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4

# யாழ்ப்பாணத்தில் குடிநீர் பிரச்சனைக்கான "தீர்வு 2024 இறுதியில் தான்" என அறிவிப்பு

**- யாழ்ப்பாணத்திலிருந்து நடராசா லோகதயாளன்**

யாழ்ப்பாணத்து மக்கள் தமது குடிநீர் பிரச்சனைகள் பகுதியளவிலும் தீர்வதற்கு அடுத்த ஆண்டுவரை காத்திருக்க வேண்டும் என்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது அடுத்த ஆண்டு - 2024-டிசம்பர் அல்லது 2025 ஜனவரி மாதக் காலப்பகுதியிலேயே தீர்வு ஒன்று சாத்தியப்படும் என்று இப்போது வெளிப்படையாக கூறப்பட்டுள்ளது.

"யாழ் குடாநாட்டுக்கான குடிதண்ணீர் விநியோகத் திட்டம் அடுத்த ஆண்டு டிசெம்பர் மாதம் அளவிலேயே ஆரம்பிக்கக் கூடிய சாத்தியம் உண்டு. அந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டாலும் குடாநாட்டின் தேவையின் 50 சதவீதத்தையே பூர்த்தி செய்ய முடியும்" என்று தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் முகாமையாளர் என். ஜெகதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் கடந்த புதன்கிழமை (மே 31) இடம்பெற்றது. இதன்போது அச்சுவேலியில் அமைந்துள்ள கைத்தொழில்பேட்டையின் குறைபாடுகள் தொடர்பில் ஆராயப்பட்டன. அங்கு முதலிட்டுள்ள முதலீட்டாளர்களுக்கு உற்பத்திகளை மேற்கொள்ள குடிநீர் தேவை என்று சுட்டிக்காட்டப்பட்டது.

இதன்போது பதிலளித்த முகாமையாளர் ஜெகதீஸ்வரன், "வடக்கு ஆளுநர் அலுவலகத்தில் முதலீட்டாளர்கள் சிலருடன் சந்திப்பு நடைபெற்றது. அவர்களும் குடிநீர் கேட்கின்றார்கள். வடமாராட்சி கிழக்கில் கடல் நீரை சுத்திகரித்து நன்னீராக்கி விநியோகிக்கும் யாழ்ப்பாண குடிநீர்த் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னரே அவர்களுக்கு குடிநீர் விநியோகிக்க முடியும். அதுவரை எம்மால் குடிநீரை விநியோகிக்க முடியாது" என்று திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

260 மில்லியன் அமெரிக்க டொலரில் முன்னெடுக்கப்படும் அந்தத் திட்டம் அடுத்த ஆண்டு டிசம்பரே நடைமுறைக்கு வரக்கூடும். அந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டாலும் குடாநாட்டின் தேவையின் 50 சதவீதத்தையே பூர்த்தி செய்யமுடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதற்கு மறுமொழியளித்த நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், "அப்படியானால் எஞ்சிய தேவையைப் பூர்த்தி செய்வதற்கு இன்னொரு திட்டம் தேவைதானே" என்று கேள்வி எழுப்பினார். அதற்கு முகாமையாளர் ஜெகதீஸ்வரன் "ஆம்" என்று பதிலளித்தார்.

நாடு கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கி அதிலிருந்து மீள்வதற்கு தத்தளித்துக் கொண்டிருக்கும் வேளையில், முதலீட்டாளர்களுக்கு அடிப்படை தேவைகளில் ஒன்றான குடிநீரை கூட உரிய காலத்தில் தேவையான அளவில் அரசால் வழங்க முடியாவிட்டால், வடக்கு பகுதியின் பொருளாதாரம் மற்றும் வேலைவாய்ப்புகள் எப்படி பெருகும் என்று யாழ் மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

தடையற்ற வகையில் குடிநீரை அரசால் விநியோகிக்க முடியாவிட்டால், முதலீடுகளை உறுதி செய்து உள்ளூர் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில், வேலை வாய்ப்புகளை









கொண்டு வருவதில் கடும் சிக்கல்கள் எழலாம் என்று பொருளாதர வல்லுநர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதேநேரம் யாழ்ப்பாணத்திற்கு குடிநீர் கொண்டு வருவதில் அரசியல்வாதிகள் அசமந்தனம் காட்டுவதாக வடக்கு மாகாண சபையின் அவை தலைவரும் இலங்கைத் தமிழரசு கட்சியின் சிரேஷ்ட உப தலைவருமான சி வி கே சிவஞானம் குற்றச்சாட்டினார்.

யாழ். மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற அந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் யாழ்ப்பாணத்திற்கான குடிநீர் விநியோகம் தொடர்பில் கருத்துரைக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"யாழ்ப்பாணத்திற்கு குடிநீர் கொண்டுவதற்கான வேலை திட்டங்களின் ஆரம்ப பணிகள் தற்போதும் இடம்பெற்று வருகின்றது. குறிப்பாக குழாய்கள் புதைக்கப்பட்டு வருகின்றன. ஆனால் அந்த குடிநீர் வழங்குவதற்கான குழாய்களை புதைக்கும் திட்டமானது நீண்ட காலமாக இடம் பெற்று வருகின்ற போதும் புதைக்கப்பட்டுள்ள குழாய்களின் ஊடாக தற்போது காற்றுக் கூட வருகிறதோ தெரியவில்லை ஆனால் குடிநீரை கொண்டு வருவதில் அரசியல்வாதிகள் அசமந்த போக்கினை காட்டுகிறார்கள் இதுதான் உண்மை" என்று அந்த கூட்டத்தில் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார் சி வி கே சிவஞானம். அதிலும் குறிப்பாக இந்த அரசியல்வாதிகள் யாரும் யாழிற்கான குடிநீர் பிரச்சினை தொடர்பில் கதைத்ததாகவும் இல்லை என்று மேலும் விசனம் வெளியிட்ட அவர், அண்மையில் புதிதாக கடமையேற்ற ஆளுநரிடமும் தாம் இந்த விடயம் தொடர்பில் பேசியதையும் சுட்டிக்காட்டினார். எனவே குடிநீரை கொண்டு வருவதற்கு யாழ் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு ஏதாவது நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார்.

"ஏற்கனவே நாங்கள் வடக்கு மாகாண சபையில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி தீர்மானத்தை பிரதமர் அலுவலகத்திற்கும் அனுப்பி இருந்தோம் எனவே கிடப்பில் கிடக்கின்ற அந்த தீர்மானத்தை நடைமுறைப்படுத்த ஒருங்கிணைப்புக் குழு நடவடிக்கை எடுக்க வேண்டும்" எனவும் அவர் கோரினார்.

இதனையடுத்து யாழ்ப்பாணத்திற்கான குடிநீர் விநியோகம் தொடர்பில் ஆராய வடக்கு மாகாண சபையின் அவை தலைவர் சி வி கே சிவஞானம் தலைமையில் ஐவர் கொண்ட விசேட குழு ஒன்று நியமனம் செய்யப்பட்டது. இந்தக் குழுவில் வடக்கு மாகாண சபையின் அவை தலைவர், ஜனாதிபதியின் வடக்கு அபிவிருத்திக்கான இணைப்பாளர், மாகாண பிரதம செயலாளர், நீர்பாசன பொறியியலாளர், களப்பணிப்பாளர் ஆகியோர் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர்.

இந்தக் குழு- நீர் விநியோகத்தினை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் விரிவாக ஆராய்ந்து அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்க உள்ளதோடு தமது முதலாவது கூட்டத்தை வெள்ளிக்கிழமை (2 ஜூன்) நடத்தவும் தீர்மானிக்கப்பட்டது.

## மூத்தோர் மேம்பாட்டுக் கழகம் (கட்டளைக் கலிப்பா)

மூத்தோர் வந்திங்கு முகமும் பூரித்து
முன்னிலைச் செயலை மகிழ்வாய்ச் செய்வார்
ஊத்தை இல்லா உளமுடன் சேர்ந்திங்கு
ஒற்றுமை ஓங்க ஒன்றாய் கூடுவோமே
நீத்தோர் தினத்தையும் நினைவில் கொண்டே!
நிகழ்ச்சிகள் நடாத்தி நிறைவு செய்வோம்
கூத்தும் ஆடியே கும்மியும் அடிப்போம்
காத்திரம் குறையாக் கல்வியும் கற்போமே!

அகணி என்றொரு அன்பான ஆதவன்
அறிவு புகட்ட அமைப்பை ஆக்கியே!
முகமன் பாராது மூத்தோர் எங்களுக்கு
முத்தான கணினிக் கல்வியைக் கற்பித்தும்
பகவன் போலவே பண்போடு பழகி
புகட்டிய மரபு மாறாக் கவியும்
பகவான் போன்றே புதுக்கவி தையையும்
புரிய வைத்துப் புண்ணியம் தேடினாரே!

நன்றாய்ப் பழகும் நாகேந்திர ஆசான்
நட்பாய் ஆங்கிலம் நயமாய்க் கற்பித்து
அன்பு அழகு அமைதி மேலிட
ஆத்ம சுத்தியாய் அறிவைப் போதிப்பார்
பொன்னைப் போன்றொரு பரிசுத்த ஆத்மா
பண்பாய்ப் பணிவாய்ப் பாடம் நடாத்துவார்
அன்னார் எமக்கு அருளால் வாய்த்தது
ஆன்றோர் அளித்த அருமைக் கொடையே!

சயானா என்னும் சிங்காரச் சிற்றிடையாள்
சிறப்பாய் நாங்கள் சுற்றுலா போவதற்கு
தயாராய் இடங்கள் தரமாய்த் தேர்ந்துமே!
துணையாய் எம்முடன் சேர்ந்தே வந்தாரே!
அயரா மனத்துடன் ஆவல் மேலிட
அனைத்து இடமும் அழகாய்க் காட்டினார்
உயரா இல்லா உறுதி மனத்துடன்
உவப்பாய் ஒன்றாக ஊர்வந்து சேர்ந்தோமே!

**ஆக்கம்... கவிஞர் மார்க்கம் சந்திரன்**
(416) 844-7453

# யாழ்ப்பாணத்தில் பாடசாலையை விட்டு மாணவர்கள் இடைவிலகுவது அதிகரிப்பு

- எமது யாழ் செய்தியாளர்



யாழில் பாடசாலையை விட்டு மாணவர்கள் இடை விலகல் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு அதிகரித்துள்ளதாக அரச தரவுகள் காட்டுகின்றன. கடந்த ஆண்டு இந்த இடைவிலகல் எண்ணிக்கை 355ஆக காணப்பட்டபோதும் இந்த ஆண்டின் முதல் 4 மாதங்களில் அந்த எண்ணிக்கை 200ஐ தாண்டி விட்டதாக வடக்கு மாகாண கல்வி அமைச்சு தெரிவிக்கின்றது.

யாழ். மாவட்டத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது இதன்போதே மேற்படி விடயமும் சுட்டிக் காட்டப்பட்டது.

இதில் மாணவர்கள் இடைவிலகளிற்கு நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடியே பிரதான காரணியாக காணப்படுகின்றது. ஏனெனில், இடை விலகும் மாணவர்கள் தொழிலிற்குச் செல்கின்றனர் என யாழ்ப்பாணத்தின் 5 கல்வி வலயங்கள் சார்பிலும் சுட்டிக் காட்டப்பட்டது.

இதேநேரம் அதிக மாணவர்கள் இடைவிலகும் கல்வி வலயமாக காணப்படும் வலிகாமம் கல்வி வலயத்துல் கடந்த ஆண்டு முழுமையாக 170 மாணவர்கள் இடை விலகிய நிலையில் இந்த ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் மட்டும் 137 மாணவர்கள் இடைவிலகியுள்ளனர்.

இதேநேரம் தென்மராட்சி கல்வி வலயத்தில் கடந்த ஆண்டு 7 மாணவர்கள் மட்டுமே இடை விலகியபோதும் இந்த ஆண்டின் முதல் 4 மாதங்களில் 14 மாணவர்கள் இடை விலகியுள்ளனர். யாழ். வலயத்தில் கடந்த ஆண்டு 60 மாணவர்களும் தற்போது 20 மாணவர்களும் இடைவிலகியுள்ளதோடு வடமராட்சியில் கடந்த ஆண்டு 72 மாணவர்களும் இந்த ஆண்டு இதுவரை 25 மாணவர்களும் இடைவிலகியுள்ளதோடு தீவக வலயத்தில் கடந்த ஆண்டு 46 மாணவர்கள் இடைவிலகியபோதும் இதுவரை 4 மாணவர்கள் இடைவிலகியமை கண்டறியப்பட்டுள்ளது.

பாடசாலைக்கு செல்லும் மாணவர்கள் பொருளாதர நெருக்கடிகள் காரணமாக கல்வியை கைவிட்டு இடைவிலகுவது அவர்களுக்கு மட்டுமல்ல, அவர்கள் சார்ந்துள்ள சமூகத்திற்கும் எதிர்காலத்தில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும், என்று கல்வியாளர்கள் கூறுகின்றனர்.

யாழ்ப்பாணம் ஒரு காலத்தில் நாட்டிலிலேயே ஆகச்சிறந்த கல்விசார் சமூகமாக இருந்த நிலையில், அது காலவோட்டத்தில் படிப்படியாக குறைந்து இப்போது கவலையளிக்கும் நிலைக்கு வந்துள்ளது என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

# யாழில் மேலும் 2 ஆயிரம் ஏக்கர் நிலத்தை வனவளத் திணைக்களம் அபகரிக்கவுள்ளது

- எமது யாழ் செய்தியாளர்



யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் புதிதாக மேலும் 2 ஆயிரம் ஏக்கர் நிலத்தை வனவளத் திணைக்களம் அபகரிக்கும் நோக்கில் வரைபடம் தயார் செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் நல்லூர், சாவகச்சேரி, வேலணை, மருதங்கேணி, சண்டிலிப்பாய், சங்கானை ஆகிய நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளிலுமே இந்த நிலை ஏற்படுவதோடு கடல் அரிப்பு மற்றும் இயற்கை வளம் பேணல் என்பவற்றிற்காக நாட்டப்பட்ட கண்டல் தாவரங்கள், (மைங்கோஸ்) நிற்கும் பிரதேசங்கள் அனைத்தும் வனவளத் திணைக்களத்திற்கு உரியது என அவர்கள் உரிமை கோருகின்றனர்.

இதற்கமைய இவ்வாறு புதிதாக கோரப்படும் பிரதேசங்களில் 800 ஹெக்டேயர் அல்லது 2 ஆயிரத்து 400 ஏக்கர் வரையிலான நிலங்களை தமது ஆளுகையென வர்த்தமானி வெளியிடுவதற்கான புதிய முயற்சியினை வனவளத் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் 25 ஆம் திகதி இடம்பெற்ற கலந்துரையாடலில் வனவளத் திணைக்கள அதிகாரிகள் மற்றும் வடக்கின் அதிகாரிகள் கலந்துகொண்ட கூட்டத்திலேயே நிலங்களை இவ்வாறு கையகப்படுத்த முனையும் இடங்கள் வரைபடத்துடன் வனவளத் திணைக்கள அதிகாரிகளினால் காண்பிக்கப்பட்டபோது ஏற்கனவே வனவளத் திணைக்களம் அபகரித்துள்ள நிலத்தை விடுவிக்குமாறு கோரும் சமயம் மேலும் நிலத்தை பிடிப்பதனான செயல் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தும் என அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

வனவள திணைக்களத்தின் இந்த முன்னெடுப்பு வடக்கில் ஏற்கெனவே இருக்கும் சூழலை மேலும் மோசமாக்கும் என்றும், அந்த நடவடிக்கை உறுதியாகும் பட்சத்தில் மக்கள் போராட்டமும், சட்டப் போராட்டமும் தவிர்க்க இயலாததாகும் என்று தமிழ் அரசியல் கட்சிகள் எச்சரித்துள்ளன.


MANIPAY HINDU COLLEGE - MANIPAY LADIES COLLEGE
OLD STUDENTS ASSOCIATION - CANADA (ESTD 1991)
மானிப்பாய் இந்துக் கல்லூரி - மானிப்பாய் மகளிர் கல்லூரி
பழைய மாணவர் சங்கம் - கனடா (ஸ்தாபிதம் 1991)

**மானிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா**

**30வது பொங்கும் பொழுது விழா - June11, 2023.**

மானிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா நடாத்தும் பொங்கும் பொழுது விழா ஜூன் 11 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை, மாலை 5:30 மணி தொடக்கம் இரவு 10:30 மணி வரை 1120 Tapscott Road Unit 3, Scarborough, வில் அமைந்துள்ள தமிழிசைக்கலா மண்டபத்தில் நடைபெற உள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினர் உரை, விழா சஞ்சிகை வெளியீடு, திரையிசைப் பாடல்கள், வீணை இசை, நடன நிகழ்ச்சிகள், ஆகிய நிகழ்சிகளோடு பழைய மாணவர் கலந்துரையாடுவதற்குரிய சந்தர்பங்களுக்கும் இடம் அளிக்கப்படும்.

இவ்விழாவிற்கு பழைய மாணவர்கள், மாணவிகள் அவர்தம் வாழ்க்கைத் துணைவர்கள், பிள்ளைகள், நண்பர்கள், நலன்விரும்பிகள் யாவரும் சமூகமளித்து சிறப்பிக்குமாறு பழைய மாணவர் சங்க செயற்குழு அங்கத்தினர் அன்புடன் அழைக்கின்றார்கள்.


தொடர்புகட்கு:

| ராஜு கனகராஜா | ச.வசந்தராஜன் | செ.பார்த்திபன் |
|---|---|---|
| தலைவர் | உப தலைவர் | செயலாளர் |
| (416- 858 6316) | (416-289 9008) | (647-710-9404) |



அருள்மிகு
கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்
CANADA SRI AYYAPPAN HINDU TEMPLE
635 MIDDLEFIELD ROAD, SCARBOROUGH, ON, M1V 5B8 Tel: 416-321-6104 www.ayyappan.com
தமிழீழம் – முல்லைத்தீவு பிரசித்திபெற்ற
வற்றாப்பளை கண்ணகி அம்மன்
பொங்கல் விழா

**05-06-2023 திங்கட்கிழமை**

அன்பான அடியார்களே!
கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயத்தில், ஈழத்தில் பிரசித்தி பெற்ற வற்றாப்பளை கண்ணகி அம்மன் மிகப்பிரமாண்டமான தனிச் சன்னிதானமாக அமையப்பெற்று கடந்த 22 வருடங்களாக வெகு சிறப்பாக பொங்கல் நடைபெற்று வருகின்றது. இவ்வருடமும் இப்பொங்கல் விழா வழமைபோல் நிகழும் மங்களகரமான சோபகிருது வருடம் வைகாசித் திங்கள் 05-06-2023 திங்கட்கிழமை மாலை 4 மணியளவில் நடைபெறத் திருவருள் கூடியுள்ளது. நேர்த்திக்கடன் நிறைவேற்றும் அனைத்து அடியார்களும் நடைபெறவிருக்கும் விசேட அபிஷேகம், பொங்கல், பூஜையுடன் அம்பாள் மங்கள இசையுடன் உள்வீதி, வெளிவீதியுலாக் காட்சிதரும் இவ்வைபத்தில் கலந்து கொண்டு அம்மனின் இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் வேண்டுகிறோம்.

**நிகழ்ச்சி நிரல்**

**25-05-2023 தொடக்கம் –03-06-2023 வரை**
மாலை 6:00 தொடக்கம் 7:30 மணி வரை - கண்ணகி அம்மன் சிந்து பாடல் பூஜை
**04-06-2023 ஞாயிற்றுக்கிழமை – காட்டு விநாயகர் பொங்கல்**
காலை 8:00 மணிக்கு பிள்ளையார் அபிஷேகம் மற்றும் பூஜைகள் பொங்கல.



**05-06-2023 திங்கட்கிழமை - கண்ணகி அம்மன் பொங்கல்**
பிற்பகல் 4.00 மணிக்கு அம்பாள் அபிகேம் ஆரம்பம்
பிற்பகல் 4:30 மணிக்கு வளந்து வைத்து பொங்கல் பானையில் அரிசி இடல்
பிற்பகல் 5:00 மணிக்கு வெளிவீதியில் பொங்கல் ஆரம்பம்
பிற்பகல் 6:45 மணிக்கு பக்திப் பஜனை ஆரம்பம்
திருமதி யோகா பத்மநாதன் குழுமினர்



பிற்பகல் 7.30 மணிக்கு மங்கள தீபாதாரனை, வாத்திய இசையுடன் பூஜைகள் ஆரம்பம் அம்மன் உள்வீதி, வெளிவீதியுலா வருதல்

பிற்பகல் 9:00 மணிக்கு பூஜைகள் முடிவுற்று பிரசாதம் வழங்கப்படும்.
எநறுௌனும,மை

**வெளி வீதியில் பொங்கல்** மற்றும் நேர்த்திக்கடன் செய்பவர்களுக்கு பொங்கலுக்கு தேவையான பானை, அடுப்பு மற்றும் பால்குடம், கண்மலர் போன்றனவும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. பொங்கல் மற்றும் அபிஷேகத்துக்குரிய பால், அரிசி, தயிர், மலர்கள் முதலியபொருட்களை தந்துதவுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

முக்கிய குறிப்பு: குறிப்பிட்ட நேரத்தில் பொங்கல், பூஜைகள் ஆரம்பித்து குறிப்பிட்ட நேரத்தில் முடிவடையும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

வற்றாப்பளை பொங்கல் தொடர்புகளுக்கு:
சீலன்: 416-318-7875
தர்மினி: 647-575-9602
விஜய்: 647-202-8286
ஐயப்பன் கோவில் தொடர்புகளுக்கு:
416-321-6104

இறைசேவையிலுள்ள அறங்காவலர் சபையினர்

# பொது நினைவுச் சின்னம்

## - யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்



அரசாங்கம் போரில் உயிர்நீத்த அனைவருக்குமாக ஒரு பொதுவான நினைவுச் சின்னத்தை உருவாக்கப் போவதாக அறிவித்திருக்கிறது. தமிழ்க் கட்சிகளில் சில அதை எதிர்க்கின்றன்சில அதை ஆதரிப்பதாகத் தெரிகின்றது.

போரில் உயிர் நீத்த எல்லாருக்குமான நினைவுச் சின்னம் என்பது உலகில் ஏற்கனவே பல நாடுகளில் உண்டு. குறிப்பிட்ட நாட்டில் அல்லது குறிப்பிட்ட பிரதேசத்தில் போரில் உயிர்நீத்த அனைவருக்குமானதாக அது அமையும். அதற்கு முகம் இருக்காது. ஆளடையாளம் இருக்காது. அது போர் வெற்றியையும் பிரதிபலிக்காது; தோல்வியையும் பிரதிபலிக்காது. குறிப்பாக, நிலைமாறுகால நீதியின் ஒரு பிரிவாகிய இழப்பீட்டு நீதியின் கீழ் அவ்வாறு நினைவுச் சின்னங்களை உருவாக்குவதற்கு பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிமை உண்டு.

ஆனால் இலங்கைத்தீவைப் பொறுத்தவரையிலும் நிலை மாறுகால நீதி தொடர்பான வாதப்பிரதிவாதங்களின் போது ஒரு விடயம் சுட்டிக்காட்டப்படுவதுண்டு. இலங்கைத்தீவில் நிலை மாற்றம் ஏற்படவில்லை என்பதே அது. இலங்கைத்தீவில் ஆயுத மோதல்கள்தான் முடிவுக்கு வந்திருக்கின்றன. உளவியல் மோதல் இப்பொழுதும் உண்டு. ஆயுத மோதல் ஒரு காரணம் அல்ல. அது விளைவுதான். ஆயுத மோதல்களுக்கு காரணம் இன ஒடுக்குமுறைதான். எனவே இன ஒடுக்குமுறை முடிவுக்கு வரும்பொழுதே இலங்கைத் தீவில் நிலை மாற்றம் ஏற்படும். அதாவது போருக்கு பிந்திய, அல்லது பிணக்குக்கு பிந்திய, என்று அழைக்கத்தக்க ஒரு நிலை இலங்கைத்தீவில் இப்பொழுதும் ஏற்படவில்லை.

உதாரணமாக, தென்னாபிரிக்காவில் கறுப்பின மக்களுக்கு அரசியல் விடுதலை கிடைத்தது. பொருத்தமான பொருளாதார விடுதலை இன்றுவரை கிடைக்கவில்லை. ஆனாலும் கறுப்பின மக்கள் ஒப்பீட்டளவில் அரசியல் விடுதலையை அனுபவிக்கும் ஒரு சூழல் அங்கே உருவாகிவிட்டது. அதனாலதான் நிலைமாறுகால நீதியை அங்கே ஒப்பீட்டளவில் வெற்றிகரமாகப் பரிசோதிக்க முடிந்தது.

ஆனால் இலங்கைத் தீவில் நிலைமை அப்படியல்ல. இலங்கைத்தீவில் ஆயுத மோதல்கள்தான் முடிவுக்கு வந்திருக்கின்றன. மோதல்களுக்குக் காரணமான இன ஒடுக்குமுறை இப்பொழுதும் உண்டு. அதனால்தான் தமிழ் மக்கள் தொடர்ச்சியாக சிங்களபௌத்த மயமாக்கலுக்கு எதிராகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். சிங்கள பௌத்த மயமாக்கல் எனப்படுவது இனக் ஒடுக்குமுறையின் ஒரு பகுதிதான். தமிழ் மக்களை ஒரு தேசமாக வனையும் அம்சங்களை அழித்து ஒழிப்பது, தமிழ் மக்களை ஒரு தேசமாக இல்லாமல் செய்வதுதான் இனஒடுக்கு முறையின் பிரதான இலக்கு.

இலங்கைத் தீவைப் பொறுத்தவரையிலும் அரசாங்கம் கூறுவதுபோல 2009க்கு பின்னரான காலகட்டத்தை பிணக்கிற்குப் பின்னரான அதாவது இனப்பிரச்சினைக்குப் பின்னரான காலகட்டம் என்று அழைக்க முடியாது. அதுபோலவே அரசுசார்பற்ற நிறுவனங்கள் அழைப்பதுபோல போருக்கு பின்னரான காலகட்டம் என்றும் அழைக்க முடியாது. மாறாக நான் எனது கட்டுரைகளில் திரும்பத் திரும்ப வலியுறுத்துவதைப்போல, ஆயுத மோதல்களுக்குப் பின்னரான காலகட்டம் என்பதுதான் பொருத்தமாக இருக்கும். ஏனென்றால் உளவியல் மோதல்கள் இப்பொழுதும் உண்டு.

ஆயுத மோதல்களின்போது கைப்பற்றப்பட்ட நிலங்கள் இப்பொழுதும் அரசு படைகளின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்றன. அங்கெல்லாம் அவர்கள் விகாரைகளை அமைத்து சிங்களபௌத்த மயமாக்கலை முழுவதுமாக முன்னெடுத்து வருகிறார்கள். உயர் பாதுகாப்பு வலையங்கள் இப்பொழுதும் உண்டு. இலங்கைத்தீவின் மொத்த படைக் கட்டமைப்பில் மூன்றில் இரண்டு பகுதி வடக்குக் கிழக்கில்தான் உண்டு. போர் முடிவுக்கு வந்துவிட்டது என்றால் எதற்காக அளவுப் பிரமாணத்துக்கு அதிகமாக படையினரை தமிழ்ப் பகுதிகளில் பேண வேண்டும்? கண்ணுக்குத் தெரியாத ஒரு எதிரிக்கு எதிராக அரசாங்கம் தொடர்ந்தும் தன்னை தயார் படுத்தி வருகின்றதா?

அதுதான் பிரச்சினையே. அரசாங்கம் தமிழ்மக்கள் தேசமாக இருப்பதனை அச்சுறுத்தலாகப் பார்க்கின்றது. அதனால்தான் தமிழர்கள் தேசமாக இருப்பதை அழிக்கும் விதத்தில் சிங்கள பௌத்த மயமாக்கலை திணைக்களங்களுக்கூடாக முன்னெடுக்கின்றது. எனவே இலங்கைத்தீவில் கடந்த 14 ஆண்டுகளாக நிலவி வரும் அரசியற் சூழலை ஆயுத மோதல்களுக்கு பின்னரான ஒரு காலகட்டம் என்றுதான் அழைக்க வேண்டும். இங்கு நிலை மாற்றம் ஏற்படவில்லை.

அவ்வாறு நிலை மாற்றம் ஏற்படாத ஒரு நாட்டில், போரில் உயிர்நீத்த எல்லாருக்குமாக ஒரு நினைவுச் சின்னத்தை உருவாக்க முடியாது. அதை போரில் சம்பந்தப்பட்ட அனைவரும் அல்லது போரால் பாதிக்கப்பட்ட அனைவரும் ஏற்றுக் கொள்வார்கள் என்பதற்கில்லை. அவ்வாறு எல்லாரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு சூழல் எப்பொழுது தோன்றும் என்றால், மெய்யான பொருளில் நிலைமாற்றம் ஏற்படும் பொழுதுதான். இங்கு நிலை மாற்றம் எனப்படுவது இன ஒடுக்குமுறை முடிவுக்கு கொண்டு வரப்படுவதுதான். அதாவது இலங்கைத்தீவின் பல்லினத்தன்மையை ஏற்றுக்கொள்ளும் ஒரு யாப்பை உருவாக்குவதுதான்.

எனவே இப்பொழுது விடயம் தெளிவாகத் தெரிகிறது. இலங்கைத்தீவின் பல்லினச் சூழலைப்பல்மதச் சூழலைப்பல மொழிச் சூழலை உறுதிப்படுத்தாதவரை; நல்லிணக்கத்தை அதன் மெய்யான பொருளில் கட்டி எழுப்பாதவரை; எல்லாருக்கும் பொதுவான ஒரு நினைவுச் சின்னத்தை உருவாக்க முடியாது.

ஏனெனில் போரில் உயிர் நீத்தவர்கள் என்பது ஒரு பொதுவான வகை. அதற்குள் போராளிகள் வருவார்கள். படைத்தரப்பு வரும். பொதுமக்கள் வருவார்கள். சில சமயங்களில் வெளிநாட்டவர்களும் வருவார்கள். அதன்படி போருக்கு பின்னரான ஒரு பொது நினைவுச் சின்னம் எனப்படுவது கொன்றவர்களையும் கொல்லப்பட்டவர்களையும் காணாமல் ஆக்கப்பட்டவர்களையும் அவர்களைக் காணாமல் ஆக்கியவர்களையும்; இனப்படுகொலை புரிந்தவர்களையும் இனப்படுகொலைக்கு ஆளாகியவர்களையும் ஒன்றாக நினைவுகூரும் சின்னங்களாகவே அமைய முடியும்.

தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கும் பட்சத்தில் அப்படி ஒரு நினைவுச் சின்னத்தை குறித்து தமிழ் மக்கள் சிந்திக்கலாம். ஆனால் நீதிக்கான வாய்ப்புகள் மிகக் குறைவாக காணப்படும் ஒரு நாட்டில், யுத்த வெற்றி நினைவுச் சின்னங்களைக் கொண்டாடும் ஒரு நாட்டில், கொலை செய்தவரையும் கொல்லப்பட்டவரையும் ஒன்றாக ஒரு சின்னத்துக்குள் கொண்டு வருவது சாத்தியமே இல்லை. அதுமட்டுமல்ல பொத்தாம் பொதுவான ஒரு நினைவுச் சின்னம் எனப்படுவது இனப்படுகொலையால் உயிரிழந்தவர்களை போரில் உயிர் இழந்தவர்கள் என்ற ஒரு பொதுவான வகைக்குள் அடக்கிவிடும். இனப்படுகொலையால் உயிர் நீத்தவர்களை நினைவு கூரும்போது அங்கே இனப்படுகொலைக்கு எதிரான நீதியைக்கோரும் ஓர் அரசியல் இருக்கும். ஆனால் போரில் உயிர் நீத்தவர்கள் என்று வரும்பொழுது அது நீதிக்கான ஓர் அரசியலை குறிக்காது. இது தமிழ் மக்களைப் பொறுத்வரை அவர்களுடைய நீதிக்கான கோரிக்கையை மழுங்கடிக்கும் ஒரு நடவடிக்கை என்றே பார்க்கப்படும். ஏனென்றால் இனப்படுகொலைக்கு நீதி கிடைத்தால்தான் இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கம் சாத்தியப்படும். நல்லிணக்கத்தை உருவாக்கினால்தான் ஒரு பொது நினைவுச் சின்னம் சாத்தியப்படும்.

எனவே முதலில் மூன்று இனங்களுக்கும் இடையிலே மெய்யான பொருளில் நல்லிணக்கத்தை ஸ்தாபிக்கும் விதத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். இது முதலாவது விடயம். இரண்டாவது விடயம், தமிழ் மக்களைப் பொறுத்தவரை ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் என்ற அடிப்படையில் ஆயுதப் போராட்டத்தில் உயிர்நீத்த அனைவருக்குமாக ஒரு பொது நினைவுச்சின்னத்தை உருவாக்கக்கூடிய சூழல் இன்றுவரை உருவாகவில்லை என்பதனை இங்கே சுட்டிக்காட்ட வேண்டும். அப்படி ஒரு நினைவு சின்னத்தை உருவாக்குவது என்றால் அதற்கு முதலில் தமிழ் மக்கள் மத்தியில் போராட்டத்தில் ஈடுபட்ட அனைவருக்குமான ஒரு பொது நினைவு நாளை கண்டுபிடிக்க வேண்டும். ஆனால் இப்பொழுது தமிழ்த் தேசிய அரசியலில் ஒவ்வொரு இயக்கங்களுக்கும், கட்சிக்கும், தனிநபர்களுக்குமான நினைவு நாட்களும் நினைவுச் சின்னங்களுந்தான் உண்டு. ஒரு பொதுவான நினைவு நாளை கண்டுபிடிக்கும் அளவுக்கு தமிழ்த் தேசிய அரசியலின் ஜனநாயக இதயம் இனிமேற்றான் செழிப்படைய வேண்டியிருக்கிறது. அதனால் ஒரு பொது நினைவுச் சின்னத்துக்கு இப்பொழுதும் வாய்ப்பில்லை.

அவ்வாறான ஒரு பொது நினைவுச் சின்னத்தை குறித்து நான் ஏற்கனவே எழுதி உள்ளேன். அதை ஏற்றுக் கொள்ளாதவர்கள் முன்வைக்கும் வாதம் என்னவென்றால், தியாகிக்கும், துரோகிக்கும் ஒரேடியாக நினைவுச் சின்னத்தை அமைப்பதா என்பதுதான்.

அவர்களுக்கு பொது நினைவுச் சின்னம் என்றாலே என்னவென்று தெரியவில்லை. உலகில் இதுவரை உருவாக்கப்பட்ட இதுபோன்ற பொது நினைவு சின்னங்களுக்கு முகம் கிடையாது. தனிப்பட்ட கட்சி அல்லது இயக்க அடையாளம் கிடையாது. அந்நினைவு சின்னம் அரூபமானது. அது தமிழ் மக்களுக்காக போராட வந்த எல்லோருக்குமானது ஒரு இயக்கத்துக்கு உரியது அல்ல. ஒரு கட்சிக்கு உரியது அல்ல. அது பொதுவானது. ஒரு தேசத்துக்கானது. ஆனால் அப்படி ஒரு நினைவுச் சினத்தை சின்னத்தை தமிழ் மக்கள் இன்றுவரை கண்டுபிடிக்க முடியாதிருக்கிறார்கள்.

அப்படி ஒரு நினைவுச் சின்னத்தை குறித்து உரையாடும் பொழுது இங்கு தென்னாபிரிக்க உதாரணத்தைக் காட்டலாம். தென்னாபிரிக்காவில் "சுதந்திரப் பூங்காவில்" அவ்வாறான ஒரு சின்னம் உண்டு. அந்த நாட்டின் வெவ்வேறு பிராந்தியங்களில் இருந்து கொண்டுவரப்பட்ட அந்தந்த பிராந்தியங்களின் மண்ணின் இயல்பைப் பிரதிபலிக்கும் பாறைகள் அங்கே ஓர் ஒழுங்கிற்குள் வைக்கப்பட்டுள்ளன. அந்தப் பாறைகளுக்கு இடையிலான நிலப்பரப்பிலிருந்து புகை எழுந்தபடியிருக்கும். தென்னாபிரிக்கர்களைப் பொறுத்தவரை புகையானது இறந்தவர்களின் ஆத்மாக்களோடு தொடர்பு கொள்வதற்கான ஒரு ஊடகமாகக் கருதப்படுகிறது. தென்னாபிரிக்காவில் சுதந்திரப் பூங்கா என்று அழைக்கப்படும் நினைவு வளாகமானது இனப்படுகொலைக்கு எதிரான ஒரு நினைவுவளாகமாகவும் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. அந்த வளாகம் அமைந்திருக்கும் நிலப்பரப்புக்கு நேர் எதிராக தென்னாபிரிக்கர்களை அடிமை கொண்ட டச்சு ஆக்கிரமிப்பாளர்களின் நினைவுச் சின்னம் காணப்படுகிறது.

தென்னாபிரிக்காவில் கறுப்பின மக்களுக்கு அரசியல் விடுதலை கிடைத்துவிட்டது. அதைவிட முக்கியமாக அங்கே நெல்சன் மண்டேலா என்ற ஒரு மகத்தான ஆளுமை இருந்தது. அது நல்லிணக்கத்திற்கு தலைமை தாங்கியது. நிலை மாறு கால நீதிச் செய்முறைகளுக்கு தலைமை தாங்கியது. எனினும் அங்கே போரில் ஈடுபட்ட வெவ்வேறு இனக்குழுக்களுக்கு இடையே ஆறாத காயங்கள் இப்பொழுதும் உண்டு. பகையும் வன்மமும் பழிவாங்கும் உணர்ச்சியும் உண்டு. இந்த அடிப்படையில் சிந்தித்தால் தென்னாபிரிக்காவில் ஒரு சுதந்திரப் பூங்காவை உருவாக்கியது போன்று இலங்கைத்தீவில் தமிழ் மக்கள் ஒரு நினைவு வளாகத்தை உருவாக்க முடியுமா?

நிச்சயமாக இல்லை. ஏனென்றால் இங்கே நிலை மாற்றம் ஏற்படவில்லை. நிலை மாற்றம் மூன்று இனங்களுக்கிடையிலும் ஏற்படவில்லை மட்டுமல்ல, தமிழினத்துக்குள்ளும் இனிமேற்றான் ஏற்பட வேண்டியிருக்கிறது. இவ்வாறான ஓர் அரசியற் சூழலில் பொதுவான ஒரு நினைவுச் சின்னத்தை குறித்த உரையாடல்களுக்கு இலங்கைத் தீவும் தயாராக இல்லை தமிழரசியலும் தயாராக இல்லை.



கனடிய செய்திகள் Canadian News

# FRONTLINE COMMUNITY CENTRE சேவைகள் வழங்கும் நிறுவனத்தின் அர்ப்பணிப்பான பணிகளைக் கௌரவித்து ஒன்றாரியோ அரசு வழங்கியுள்ள நிதி உதவி

ஸ்காபுறோ நகரில் பல வருடங்களாக இயங்கிவரும் FRONTLINE COMMUNITY CENTRE இலாப நோக்கமற்ற நிறுவனத்தின் அர்ப்பணிப்பான பணிகளையும் அவற்றால் பயன்பெறும் தமிழ் பேசும் மூத்தோரின் தேவைகள் கருதியும். ஒன்றாரியோ மாகாணஅரசு நிதி உதவி வழங்கியுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமையன்று FRONTLINE COMMUNITY CENTRE நிறுவன அலுவலகத்தில் நடைபெற்ற விசேட வைபவம் ஒன்றில் மேற்படி நிதி உதவி தொடர்பான அறிவித்தலை ஒன்றாரியோ மாகாண அமைச்சரும் மாகாண பாராளுமன்ற உறுப்பினருமான கௌரவ றேமண்ட் சோ அவர்கள் வெளியிட்டார்கள்.

அவ்வமயம். ஏனைய மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர்களான திருவாளர்கள் விஜேய் தணிகாசலம். மற்றும் அரிஸ் பாபிகியன் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

அங்கு உரையாற்றிய ஒன்றாரியோ மாகாண அமைச்சரும் மாகாண பாராளுமன்ற உறுப்பினருமான கௌரவ றேமண்ட் சோ மற்றும் மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர்களான விஜேய் தணிகாசலம். மற்றும் அரிஸ் பாபிகியன் ஆகியோரும் FRONTLINE COMMUNITY CENTRE நிறுவனத்தின் சேவையையும் அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் திருமதி. விஜய குலாவின் சேவை மனப்பான்மையையும் பாராட்டி உரையாற்றினார்கள்.

அங்கு கலந்து கொண்ட உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் மற்றும் "யுகம்" வானொலி அதிபர் கணபதி ரவீந்திரன் ஆகியோரையும் திருமதி. விஜயா குலா தனது உரையின் போது பாராட்டி நன்றியையும் தெரிவித்துக் கொண்டார்.

**- படங்களும் செய்தியும்: சத்தியன்**













## Eric Walsh, the Canadian High Commissioner to Sri Lanka, surprised us by reading Tamil Words.

# தமிழ்ச் சொற்களை வாசித்து மகிழ்ந்து. சந்தித்த அன்பர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்திய இலங்கைக்கான கனடிய உயர் ஸ்தானிகர் Eric Walsh

30-05-2023 செவ்வாய்க்கிழமையன்று மதியம் ரொறன்ரோ மாநகரில் கனடா வாழ் அன்பர்கள் சிலரை நட்பின் நிமித்தம் சந்தித்து உரையாடி உணவருந்திச் சென்ற இலங்கைக்கான கனடிய உயர் ஸ்தானிகர் Eric Walsh அவர்கள் மிகவும் நேசிப்புடனும் பொறுப்புணர்வுடனும் உரையாடினார்.

மேற்படி சந்திப்பில் "விழித்தெழு பெண்ணே" அமைப்பின் இணை நிறுவனர்கள் நரோந்திரா-சசிகலா தம்பதி, வர்த்தகப் பிரமுகர் சங்கர் நல்லதம்பி-ஷகி தம்பதி, உதயன் பிரதம ஆசிரியர் லோகன்-பத்மா தம்பதி மற்றும் காப்புறுதி ஆலோசகர் லிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேற்படி சந்திப்பும் மதிய போசன விருந்தும் ரொறன்ரோ மாநகரத்தின் மத்தியில் அமைந்துள்ள உணவகம் ஒன்றில் இடம்பெற்றது.

அங்கு மிகுந்த நட்புடன் உரையாடி மகிழ்ந்த இலங்கைக்கான கனடிய உயர் ஸ்தானிகர் Eric Walsh, அவர்கள் இலங்கையில் தான் பதவிக்கு வந்த மிகக் குறைந்த காலத்தில். வடக்கு கிழக்கு ஆகிய பகுதிகளில் உள்ள கிராமங்கள் மற்றும் நகரங்கள் ஆகியவற்றும் பல தடவைகள் சென்று மக்களையும் மக்கள் பிரதிநிதிகளையும் சந்தித்து அவர்களின் பிரச்சனைகளையும் தேவைகளையும் அறிந்து கொண்டதாகவும் தெரிவித்தார்.

ஒரு சந்தர்ப்பத்தில். கனடா உதயன் பத்திரிகையின் பிரதியொன்றை பிரதம ஆசிரியர் அவரிடம் வழங்கிய பொழுது "உதயன்" என்ற சொல்லை அழகிய முறையில் உச்சரித்து மகிழ்ந்து அன்பர்களையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தினார்.



அத்துடன் மேலும் சில சொற்களையும் வாசித்து இலங்கையில் பல கிராமங்களுக்கும் பயணம் செய்யும் போது விளம்பர அறிவித்தல்கள் மற்றும் வீதிகளில் காணப்படும் கிராமங்கள் மற்றும் நகரங்களின் பெயர்களை படித்து படித்து தமிழ் எழுத்துக்களை வாசிக்கும் அறிவை தாம் தேடிக் கொண்டதாகவும் தெரிவித்தார்.

**- செய்தியும் படங்களும்: சத்தியன் (31-05-2023)**

## When Canadians invest in Sri Lanka, Sri Lanka's exports would grow and employment rates would rise there

# "கனடிய முதலீட்டாளர்கள் இலங்கையில் தொழில்களை ஆரம்பிக்கும் போது அங்கிருந்து கனடாவிற்கு ஏற்றுமதி அதிகரிக்க இலங்கையில் வேலை வாய்ப்புக்களும் உருவாகும்"

## கனடா வாழ் இலங்கை வர்த்தக அமைப்பு நடத்திய கலந்துரையாடலில் இலங்கைக்கான கனடிய உயர் ஸ்தானிகர் Eric Walsh தெரிவிப்பு

"கனடா வாழ் முதலீட்டாளர்கள் இலங்கையில் தொழில்களை ஆரம்பிக்கும் போது அந்த முதலீடுகள் மூலம் உற்பத்தி பெருகி. அங்கிருந்து கனடாவிற்கு ஏற்றுமதி அதிகரிக்க இலங்கையில் வேலை வாய்ப்புக்களும் உருவாகும். அழகியதும் நல்ல வளங்கள் நிறைந்ததுமான இலங்கையை மீண்டும் சகஜ நிலைக்கு கொண்டு வர வெளிநாட்டு முதலீடுகள் பக்கபலமாக அமையும்".

இவ்வாறு, கனடா வாழ் இலங்கை வர்த்தக அமைப்பு இன்று பிற்பகல் நடத்திய இலங்கையில் முதலீடு செய்தல் என்ற தலைப்பில் நடத்திய கலந்துரையாடலில் உரையாற்றிய இலங்கைக்கான கனடிய உயர் ஸ்தானிகர் Eric Walsh அவர்கள் தெரிவித்தார். கனடா வாழ் இலங்கை வர்த்தக அமைப்பின் தலைவர் குலா செல்லத்துரை அவர்கள் மேற்படி கலந்துரையாடலுக்கு தலைமை தாங்கி ஆரம்ப உரையாற்றினார். அத்துடன் இலங்கைக்கான கனடிய உயர் ஸ்தானிகர் Eric Walsh அவர்களையும் அறிமுகம் செய்தார். உயர் ஸ்தானிகள் விடுமுறையைக் கழிக்க கனடாவிற்கு வந்திருந்தாலும் நேரத்தை ஒதுக்கி எமது அழைப்பை ஏற்று வருகை தந்தமைக்கும் நன்றி தெரிவித்தார்.

தொடர்ந்து அங்கு உரையாற்றிய இலங்கைக்கான கனடிய உயர் ஸ்தானிகர் Eric Walsh அவர்கள் பின்வருமாறு தனது உரையை ஆரம்பித்து கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்.



"நான் கடந்த 2022ம் ஆண்டு இலங்கைக்ககான உயர் ஸ்தானிகராக நியமனம் செய்யப்பெற்றபோது, நான் கனடாவில் சந்தித்த பலர் என்னிடம் கேட்டுக் கொண்டது இதுதான். நீங்கள் கொழும்பில் மட்டுமே இருந்து வேலை செய்யாதீர்கள். வடக்கு கிழக்கு மற்றும் இலங்கையின் அனைத்துப் பகுதிகளுக்கு சென்று அங்குள்ள மக்களைச் சந்தியுங்கள். பின்னர் அவர்களின் உள்ளக்கிடக்கைகளை கேட்டு அறிந்து கொள்ளுங்கள். இதனால் அவர்களின் தேவைகளை அறியக்கூடியதாக இருக்கும். என்றார்கள்.



அவர்களின் வேண்டுகோளுக்கு ஏற்ப நான்மிகக் குறுகிய காலத்தில் பல இடங்களுக்கு பயணங்களை மேற்கொண்டேன். இலங்கையில் வளமான பிரதேசங்களைக் கண்டு ஆச்சரியப்பட்டேன்.

நான் அறிந்த வகையில் இலங்கை சுதந்திரமடைந்து சில காலம் வரைக்கும் அங்கிருந்த உள்நாட்டு அரசியல் வாதிகள் மக்களுக்கு பாதிப்புக்கள் ஏற்படாமல் சேவையாற்றியுள்ளார்கள். ஆனால் நாட்கள் செல்லச் செல்ல அங்கு இனப்பிரச்சனையும் பொருளாதாரப் பிரச்சனையும் அதிகரித்து இலங்கை வங்குரோத்து நிலைக்குச் சென்றது. எனவே இந்த நிலையை நிமிர்த்துவதற்கு கனடா போன்ற நாடுகளில் உள்ள முதலீட்டாளர்களின் வருகை அவசியமாகின்றது.

எனினும் அவ்வாறு முதலீடு செய்பவர்கள் தங்கள் தங்கள் சொந்த முயற்சி மற்றும் கவனிப்பு ஆகிவற்றை ஆகியவற்றில் அக்கறை செலுத்துவது மிகவும் அவசியம்" என்றார்.

தொடர்ந்து உரையாடல்களும் இடம்பெற்றன. கனடா வாழ் வர்த்தகப் பிரமுகர் கணேசன் சுகுமார் அவர்களிடம் உரையாடியதன் மூலம் Eric Walsh அவர்கள் அதிக தகவல்களைப் பெற்றுக் கொண்டார்.

**- படங்களும் செய்தியும்: சத்தியன்**

# மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய வருடாந்த மகோற்சவ பெருவிழாவையொட்டி இடம்பெற்ற தேர் திருவிழா

இலங்கை செய்திகள் Sri Lanka News

- மன்னார் நிருபர்







பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றான மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய வருடாந்த மகோற்சவ பெருவிழாவையொட்டி வியாழக்கிழமை (101-06-2023) தேர்த்திருவிழா இடம்பெற்றது.

திருக்கேதீஸ்வர ஆலய வருடாந்த மகோற்சவ பெருவ-ிழா கடந்த புதன்கிழமை (24) கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. இதன் போது உற்சவ மூர்த்திகளுக்கு வசந்த மண்டபத்தில் பூஜைகள் இடம் பெற்றது.

அதனை தொடர்ந்து உற்சவ மூர்த்திகள் உள் வீதி வலம் வந்து கொடித் தம்ப பூஜை இடம் பெற்று அதனை தொடர்ந்து கொடி தாம்பத்திற்கு அபிஷேகம் செய்து ஆராதனைகள் இடம்பெற்றது.

பின்னர் சுப வேளையில் கொடியேற்றம் இடம் பெற்றது.

திருக்கேதீஸ்வர ஆலய பிரதம குரு கருணாநந்த குருக்கள் தலைமையில் கொடியேற்றம் இடம் பெற்றது.

அதனைத் தொடர்ந்து வியாழக்கிழமை (1) தேர் திருவிழா இடம் பெற்றது. இத் திருவிழாவில் பல ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

வெள்ளிக்கிழமை (2) ஆம் தீர்த்த திருவிழாவில் இடம் பெற உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழ் பொதுநூலகம் எரிப்பின் நினைவு தினம் வவுனியாவில் அனுஸ்டிப்பு!

யாழ்ப்பாண பொது நூலகம் எரிக்கப்பட்ட 42 வது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் உணர்வு பூர்வமாக அனுஸ்டிக்கப்பட்டது.





வவுனியாவில் அவர்கள் தொடர்ச்சியாக போராட்டம் மேற்கொள்ளும் வீதி அபிவிருத்தி திணைக்களத் திற்கு முன்பாக உள்ள பந்தலில் குறித்த நிகழ்வு இன்று இடம்பெற்றது.

இதன் போது கருத்து தெரிவித்த அவர்கள் யாழ் பொது நூலக நிலைய எரிப்பானது தமிழ் இன அழிப்பின் ஒரு வடிவம் என குறிப்பிட்டனர்.



இலங்கை செய்திகள் Sri Lanka News

# வட்டுவாகல் சப்த கன்னியர் ஆலயத்தினர் எதிர்நோக்கி வந்த பாதை பிரச்சினையை தீர்த்து வைத்த பாராளுமன்ற உறுப்பினர்



- மன்னார் நிருபர் (31-05-2023)

முல்லைத்தீவு மாவட்டத்தின் வட்டுவாகல் சப்த கன்னியர் ஆலய நிர்வாகத்தினரின் வேண்டுகோளுக்கு அமைவாக பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் புதன்கிழமை (31) குறித்த பகுதிக்கு விஜயம் மேற்கொண்டார்.

ஆலயத்தின் உற்சவ காலத்தில் தீர்த்தம் எடுத்து செல்வதற்கான பாதை ராணுவ உயர் பாதுகாப்பு வலையத்தினுள் அமைந்துள்ளது.

அப்பகுதிக்குச் சென்று தீர்த்தம் எடுப்பதற்குரிய அனுமதி பல வருடங்களாக இராணுவத்தினரால் இடை நிறுத்தப்பட்டிருந்தது.

ஆலய நிர்வாகத்தினர் இது தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் கவனத்திற்கு கொண்டு வந்ததன் பிரகாரம் புதன்கிழமை (31) சம்பவ இடத்திற்கு முல்லைத்தீவு மாவட்ட இராணுவ கட்டளை அதிகாரி மற்றும் கரைத்துறைப்பற்று பிரதேச செயலாளர் மற்றும் ஆலய நிர்வாகத்தினர் பாராளுமன்ற உறுப்பினர் சகிதம் குறித்த பகுதிக்கு விஜயம் மேற்கொண்டனர்.

மக்கள் எதிர்கொள்ளும் இடர்கள் தொடர்பாகவும் இப்ப கதையின் தேவை தொடர்பாகவும் பாராளுமன்ற உறுப்பினர் இராணுவ கட்டளை அதிகாரிக்கு தெளிவுபடுத்தியதன் பிரகாரம் இனி வரும் காலங்களில் இடையூறு இன்றி தீர்த்தம் எடுப்பதற்குரிய அனுமதி மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி யாரால் வழங்கப்பட்டது.

இது தொடர்பான அனுமதி எழுத்து மூலம் வழங்கப்படும் எனவும் ராணுவ உயர் அதிகாரி தெரிவித்தார்.

மீள் குடியேற்றத்தின் பின்பு தொடர்ச்சியாக இப்பகுதி மக்கள் எதிர் கொண்டு வந்த இப்பிரச்சனையை பாராளுமன்ற உறுப்பினர் தீர்த்து வைத்தமைக்கு அப்பகுதி மக்கள் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனுக்கு நன்றிகளை தெரிவித்துக் கொண்டனர்.

# "சுயாதீன வேலை சூழலினை உருவாக்குதல்" எனும் தொனிப்பொருளில் மன்னாரில் சுய தொழில் பயிற்சியை பூர்த்தி செய்த பெண்கள் கௌரவிப்பு



- மன்னார் நிருபர் (01-06-2023)

"சுயாதீன வேலை சூழலினை உருவாக்குதல்" எனும் தொனிப்பொருளில் கடந்த மூன்று மாத காலம் இடம் பெற்ற தொழில் பயிற்சி நிகழ்வில் கலந்து கொண்ட பெண்களை கௌரவிக்கும் நிகழ்வு மன்னார் மாவட்ட பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தின் இணைப்பாளர் அருந்தவநாதன் நிரோஜன் வியாழக்கிழமை (1) காலை 11 மணியளவில் மன்னார் தனியார் விருந்தினர் விடுதியில் இடம் பெற்றது.

உரிமை சார்ந்த வேலை திட்டங்களை மேற்கொள்ளும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தின் நிதி ஒதுக்கீட்டில் பெண்களுக்கான தொழில் பயிற்சி செயற்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டது.





குறித்த செயற்திட்டத்தில் சிறப்பாக பயிற்சிகளை மேற்கொண்ட பெண்களுக்கு கௌரவிப்பு மற்றும் அவர்களுக்கான சான்றிதல்கள் இன்றைய தினம் வழங்கி வைக்கப்பட்டது.

மேலும் அவர்களுக்கான சுய தொழில் உபகரணங்கள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் முன்னெடுக்கப்பட்ட பனம் பொருள் உற்பத்தி பொருட்கள் சந்தைப் படுத்தப்பட்டு அதனூடாக கிடைக்கப்பெற்ற பணம் வங்கியில் வைப்பிலிடப்பட்டு, உரிய பயனாளிகளுக்கு வங்கி கணக்கு புத்தகம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த நிகழ்வில் விருந்தினர்களாக சட்டத்தரணி தர்மராஜ் வினோதன், மன்னார் நகர சபை முன்னாள் தவிசாளர் ஜான்சன், பனை வள அபிவிருத்தி சபையின் முகாமையாளர் ஜஸ்ரின் பெனில்டஸ், காணாமல் ஆக்கப்பட்டோர் சங்க தலைவில் இம்மானுவேல் உதயசந்திரா, உட்பட பலரும் கலந்து கொண்டு பயிற்சியை பூர்த்தி செய்தவர்களுக்கான கௌரவிப்பு மற்றும் சான்றிதழ்களை வழங்கி வைத்தனர்.

# அமெரிக்க விமானப்படை பயிற்சிக் கல்லூரியின் பட்டமளிப்பு விழாவில் சான்றிதழ்களை வழங்கும் சமயம் தடுமாறி விழுந்த ஜனாதிபதி ஜோ பைடன்



கொலராடோவில் உள்ள அமெரிக்க விமானப்படை பயிற்சிக் கல்லூரியின் பட்டமளிப்பு விழாவில் சான்றிதழ்களை வழங்கும் சமயம் தடுமாறி விழுந்த ஜனாதிபதி ஜோ பைடனை உடனடியாக தூக்கி நிறுத்தினார்கள் அவரது பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்.

இந்த சம்பவம் செவ்வாய்க்கிழமை (30) இடம்பெற்றது. அமெரிக்க வரலாற்றில் ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் மிக வயதான ஜனாதிபதி ஜோ பைடன். இந்த நிலையில் கொலராடோவில் அரச நிகழ்ச்சி ஒன்றில் மேடையில் தடுமாறி விழுந்த ஜோ பைடனை துரிதமாக செயல்பட்ட விமானப்படை அதிகாரிகள் உதவியுள்ளனர்.

ஆனால் தடுமாறி விழுந்த சம்பவம் இடம்பெற்ற பின்னர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் சூழ்ந்து நடந்து வர, உதவி ஏதுமின்றி, அவர் நடந்து சென்று தமது இருக்கையில் அமர்ந்தார். விழாவின் போது சுமார் ஒன்றரை மணி நேரம் ஜனாதிபதி ஜோ பைடன் நின்ற நிலையில் 921 பேர்களுக்கு பட்டமளித்துள்ளதுடன் அவர்களுடன் கைகுலுக்கி பாராட்டியுள்ளார். எனவும் இதனால அவர் களைப்படைந்திருக்கலாம் என்றும் ஊடகவியலாளர்கள் தங்கள் பக்கங்களில் பதிவிட்டுள்ளனர்.

இந்த நிலையில், வெள்ளைமாளிகை அதிகாரிகள் வெளியிட்ட தகவலில், ஜனாதிபதி நலமாக இருக்கிறார் என்றும் பாதிப்பு ஏதுமில்லை என குறிப்பிட்டுள்ளனர். விழா நடந்த மேடையில் மணல் மூட்டைகள் இருந்ததால் அவற்றில் ஒன்றில் கால் தடக்கி ஜனாதிபதி பைடன் அந்த மணல் மூட்டை ஒன்றில் மிதித்து கால் தடுமாறி விழுந்துள்ளார் என்றே வெள்ளை மாளிகை ஊடகப் பிரிவினர் தெரிவிக்கின்றனர். ஜனாதிபதி பைடன் தடுமாறி விழுந்த சில நிமிடங்களில் விழாவின் அனைத்து நிகழ்ச்சிகளும் நிறைவுக்கு வந்தன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.





# இலங்கையில் சட்டமும் ஜனநாயகமும் கேள்விக்குறியாகியுள்ளது வெட்கக்கேடானது

**- சிவா பரமேஸ்வரன்**

ஹலோ சார். யுவர் பாஸ்போர்ட் பிளீஸ்

யெஸ்

தாங்கஸ். வாட் இஸ் யுவர் பர்பஸ் ஆ்.ப் விசிட்டிங் ஸ்ரீலங்கா

பில்கிரிமேஜ், கோயிங் டு கோவில் அண்ட் மீட்டிங் பிரெண்ட்ஸ்

விச் கோவில் யூ ஆர் கோயிங் சார்?

நல்லூர் அண்ட் கீரிமலை சிவன் கோவில்

எனி ஸ்பெஷல் ரீசன் சார்

நோ ஸ்பெஷல் ரீசன். ஜஸ்ட் லார்ட் ஷிவா கால்ட் மீ. யூ ஆர் ∴பிரீ டு கான்செல் மை விசா அண்ட் ஐ டோண்ட் ஹாவ் எ பிராப்ளம் இன் கோயிங் பாக்...

சாரி சார், வெல்கம் டு ஸ்ரீலங்கா....

அந்த குடிவரவு அதிகாரியுடனான உரையாடல் மற்றும் அந்த 45-60 நொடிகளில் முடிவடைந்தது.

சுமார் 45-60 நொடிகள் உரையாடல், பின்னர் ஒரு முத்திரை, கதவு திறந்தது, அடுத்து வரியில்லாத விற்பனை நிலையம், பின்னர் சுங்கத்துறையில் பிரச்சனைகள் ஏதுமின்றி பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து வெளியே வர....எனது நண்பர் அனுப்பி உதவிய வாகனம் தயாராக இருக்க புறநகரிலிருந்து தலைநகர் கொழும்பு நோக்கிய பயணம் தொடங்கியது.

எனது இலங்கை பயணம் தொடர்பில் பின்னால் பார்ப்போம். ஆனால் கொழும்பு நோக்கி பயணிக்கின்ற அந்த சுமார் ஒரு மணி நேரமும் எனது எண்ணவோட்டம் அந்த குடிவரவு அதிகாரியுடனான உரையாடல் தொடர்பிலேயே இருந்தது. இதன் காரணமாக அந்த விசாலாம சாலை, அதன் இருமருங்கிலும் வாவியுடன் கூடிய அழகு, கட்டுநாயக்க ஏற்றுமதி வர்த்தக வலைய தொழிற்சாலைகள், இந்திய சிமெண்ட் கம்பெனியின் உற்பத்தி, சீராக செல்லும் வாகனங்கள், இந்தியா, இங்கிலாந்தைவிட சிறந்த சலைகள், தெளிவான அறிவிப்பு பலகைகள், சாலையின் இடையில் பூத்துக்குலுங்கும் மலர்ச்செடிகள் என்பவை எனது பார்வையில் பட்டாலும், சிந்தனை என்னவோ அந்த குடிவரவு அதிகாரி கேட்ட கேள்வியிலேயே தங்கியிருந்தது.

நகைச்சுவை நடிகர் கவுண்டமணி அவர்கள், "என்னைப் பார்த்து ஏண்டா இந்த கேள்வி கேட்டே" என்று கேட்ட அந்த கேள்வி தான் நினைவிற்கு வந்தது.

ஆனால், மறுபுறம் அவர் தனது கடமையைத்தானே செய்கிறார் என்றும் எண்ணத் தோன்றியது. எது எப்படியோ நகருக்கு வந்து சேர்ந்தாயிற்று.

உடனே ஓரிரு தொலைபேசி அழைப்புகள்.

"சார் பயணம் எப்படி? ஏர்போர்ட்டில் பிரச்சனைகள் ஏதுமில்லையே?"

"எந்தப் பிரச்சனையும் இல்லை"

அடுத்தடுத்த வேலைகளில் மூழ்கியதால் அந்த ஒரு நிமிடத்திற்கும் குறைவான உரையாடல் மறந்தே போயிற்று.

ஆனால் ஒரு செய்தியாளர் என்ற வகையில், அன்றாட நிகழ்வுகளை பல்துறை ஊடகங்கள் மூலம் அறிந்துகொள்ளும் உந்துதலில் இலங்கையில் தங்கியிருந்த போதும், அச்சு, மொழி புரியாவிட்டாலும் காட்சி ஊடகங்கள், சமூக ஊடகங்கள், இணையம் மூலம் வானொலி ஆகியவற்றை கண்டும் கேட்கவும் தேவை ஏற்பட்டது. அப்படியான சூழலில் தான் இரண்டு விடயங்கள் எனது மனதிற்கு நறுக்கென்று பட்டது. எனது சொந்த பணத்தை செலவழித்து, தனிப்பட்ட முறையில் இறைவனையும், நண்பர்களையும் சந்திக்க வந்த என்னிடம் கேட்கப்பட்ட கேள்விகள் எனக்குள் தாமதமாக எரிச்சலை ஏற்படுத்தியது. காரணம்?......

சட்டத்திற்கு புறம்பான வகையில் தங்கக்கட்டிகளைக் கடந்திய நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் மிகவும் சர்வசாதாரணமாக விமான நிலையத்திலிருந்து வெளியே வந்து, நாடாளுமன்ற கூட்டத்தில் பங்குபற்றி, பின்னர் அதே விமான நிலையத்திலிருந்து வெளியேற முடிகிறது. மற்றொரு சம்பவத்தில், போலிக் கடவுச்சீட்டில் நாட்டிற்குள் நுழைந்ததன் அடிப்படையில் தடுத்து வைக்கப்பட்ட மூவரை அமைச்சர் ஒருவரு கடிதம் கொடுத்து விடுவிக்கிறார். இந்த இரண்டு சம்பவங்களும் பல கேள்விகளை எழுப்புகின்றன.

அடிப்படையில் இவை இரண்டும் அயோக்கியத்தனமானவை என்பதே பொதுவான புரிந்தல் மற்றும் நிலைப்பாடு. இந்த விஷயத்தில் கட்சி, மதம், இனம் என்ற வித்தியாசம் எல்லம் இல்லை. எல்லம் ஒரே இனம். அவ்வளவே.

இதில் ஒருவர் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம். பொதுவாக நாடாளுமன்ற உறுப்பினரின் பெயருக்கு முன்னால் சம்பிராதய ரீதியாக "கௌரவ" என்று போடும் மரபு இலங்கையில் உள்ளது. ஆனால் அந்த மரியாதைக்கு அவர் பொறுத்தமானவரா என்பதில் கேள்விகள் இருந்தபடியால், அவர் பெயரை மட்டுமே சொல்லி கட்டுரையை தொடர்கிறேன். நாட்டை மேம்படுத்தி, திறமாக நிர்வகிக்க சட்டங்களை இயற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரான அலி சப்ரி ரஹீம் கடந்த மே மாதம் 23ஆம் திகதி துபாயிலிருந்து கட்டுநாயக்க விமானநிலையத்தில் வந்திறங்கிய போது அவரிடமிருந்து 80 மில்லியன் ரூபாய் பெறுமதியாக தங்கம் மற்றும் மொபைல் தொலைபேசிகள் கைப்பற்றப்பட்டன.

மிகவும் புத்திசாலித்தனமாகப் பேசுவதாக நினைத்துக்கொண்ட அவர், தனது பயணப் பொதியை தான் கட்டவில்லை, அது தனது நண்பர்களால் கட்டப்பட்டது, எனவே தனக்கு அது குறித்து ஒன்றும் தெரியாது என்று சிறிதும் வெட்கமின்றி விமான நிலைய அதிகாரிகளிடம் கூறினார். பொதுவாக அனைத்து விமான நிலையங்களிலும் கேட்க்கப்படும் கேள்வியானது, "உங்கள் பொதிகளை நீங்களே கட்டினீர்களா?" அதற்கான நோக்கம் என்பது ஒவ்வொரு பயணிக்கும் தான் எடுத்துச் செல்லும் பொதியில் என்ன இருக்கிறது என்பது தெரிந்திருக்க வேண்டும் என்பது மட்டுமல்ல, அது அந்த விமானத்தின் பாதுகாப்புடன் தொடர்புடையதும் கூட.

ஆனால், அலி சப்ரி ரஹீமால் வாய் கூசாமல் பொய் சொல்ல முடிந்தது மட்டுமல்லாமல், அவரால் வெளியே வந்து அடுத்த நாள் நடைபெற்ற நாடாளுமன்ற கூட்டத்திலும் பங்குபெற முடிந்துள்ளது. அதிலும் பெருமையாக தான் பொது சேவைகள் ஆனைக்குழுவின் தலைவரை பதவி நீக்குவது தொடர்பிலான தீர்மனத்திற்கு எதிராக வாக்களித்ததாகவும் கூறியுள்ளார். எதிர்கட்சி தரப்பிலிருந்து நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டு, பின்னர் ஆளும் கட்சி தரப்பில் ஐக்கியமாகி, விமான நிலையத்தில் சிக்குபட்ட நிலையில், ஆளும் தரப்பில் தனக்கு ஆதரவாகச் செயல்படவில்லை என்று கூறி, அரசிற்கு எதிராக வாக்களித்ததாக தம்பட்டம் அடித்துக்கொண்டார்.

என்ன அவலமான நிலை. மக்களிற்கு முன்னுதாரணமாக இருக்க வேண்டிய நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கடத்தல் வேலையில் ஈடுபட்டு மாட்டிக்கொண்ட பிறகு, தனக்கு அதற்கும் சம்பந்தம் இல்லை என்று "முழு பூசனிக்காயை சோற்றில் மறைத்து" இல்லாத தில்லாலங்கடி வேலைகளைச் செய்த பிறகு தான் உச்சகட்ட மோசடி இடம்பெற்றது. நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பு முடிந்த நிலையில், மீண்டும் அவரால் துபாய்க்கு திரும்ப முடிந்துள்ளது. இதைக்காட்டிலும் ஒரு ஜனநாயக கேலிக்கூத்து இருக்க முடியுமா?

அவர் இரண்டே நாளில் மீண்டும் துபாய் திரும்பியுள்ளது, அவர் மீதான சந்தேகங்களை உறுதிப்படுத்துவதாகவே உள்ளது.

அவர் செய்த செயலிற்காக நாடாளுமன்றத்திலிருந்து நீக்கப்பட வேண்டும் என்று யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான சுமந்திரன் ஒரு முன்மொழிவை செய்துள்ளார். அதற்கு பரந்துபட்ட ஆதரவும் கிடைத்துள்ளது. ஆனால், இந்த கட்டுரை எழுதப்படும் வரை, நான் அறிந்தவகையில் எந்த முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாரும் அந்த பிரேரணையில் கையெழுதிட்டதாக தெரியவில்லை. ஊழலுக்கு இனவாதம் துணை போகிறதா? யாமரியோம் பராபரமே! அலி சப்ரி ரஹீம் தொடர்பான இந்த சம்பவம் இலங்கையில் எப்படியான கலாச்சாரம் நிலவுகிறது என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டாக உள்ளது.

ஆனால், அவரை மட்டுமே இந்த மோசமான கலாச்சார சீரழிவிற்கு காரணமாக கூற முடியாது. சுமார் 45 ஆண்டுகளிற்கு முன்பு அதாவது 1978ஆம் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் துணை அமைச்சராகவும் இருந்த அநுர டானியேல் விமான நிலையத்தில் தங்கக்கட்டிகளுடன் பிடிபட்டார். இதில் மற்றொரு முக்கியமான விஷயத்தையும் கவனிக்க வேண்டுமென்று சில முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களும், மூத்த செய்தியாளர்களும் கூறுகின்றனர். அவர்கள் கூறுவதன் முக்கியச் செய்தி என்பது, பிடிபட்டவர்கள் சிலர் ஆனால் பிடிபடாமல் பிழைத்துக்கொண்டவர்கள் ஏராளம் என்பதே.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரின் விரும்பத்தகாத நடவடிக்கைகள் மற்றும் நேர்மையின்மை காரணமாகவே நாட்டில் மோசமான கொள்கை முடிவுகள் எடுக்கப்படுகின்றன, அது நாட்டை அழிவுப் பாதையில் இட்டுச் செல்கிறது என்பது உண்மை. எனினும் ஒரே வித்தியாசம், இப்படியான மோசமான செயல்களைச் செய்பவர்கள் ஒரு இனம் அல்லது ஒரு கட்சியை சேர்ந்தவர்கள் அல்ல. அதேவேளை அந்த இனம் அல்லது கட்சியைச் சேர்ந்த பல உறுப்பினர்கள் நேர்மையாகவும், மக்கள் நலனில் அக்கறை கொண்டவர்களாகவும் இருக்கின்றனர்.

இந்த கடத்தல் விவகாரம் தொடர்பில், அலி சப்ரி ரஹீம் பதவி நீக்கம் செய்யப்பட வேண்டும் என்பதில் நான் உடன்படுகிறேன். அப்படியான கடும் நடவடிக்கை இனியும் அவ்வாறான தவறுகள் இடம்பெறாமல் தடுக்கக் கூடும்.

அதே கட்டுநாயக்க விமான நிலையத்தில் இடம்பெற்ற மற்றொரு சமப்வமும் அரசியல்வாதிகளின் பித்தலாட்டத்தை வெளிச்சம் போட்டு காட்டியது. மேற்கு ஆப்ரிக்க நாடான கினி நாட்டுப் பிரஜை எனக் காட்டும் போலிக் கடவுச்சீட்டில் சீனர் ஒருவரும், அவருடன் அதே போன்று வேறு நாட்டின் பெயரில் போலிக் கடவுச்சீட்டுகளுடன் வந்தவர்களும் பிடிப்பட்டனர். வி'யம் வெளியே கசிந்தவுடன், ராஜாங்க அமைச்சர் அருந்திக ∴பெர்ணாண்டோ களத்தில் இறங்கி சட்டத்திற்கு புறம்பாக அவர்களை விடுவிக்குமாறு உத்தரவு பிறப்பிக்கிறார்.

அதற்கு அவர் கூறும் காரணம், அவர்களின் போலிக் கடவுச்சீட்டைவிட மோசமான பித்தலாட்டமாக உள்ளது. வந்தவர்கள் இலங்கையில் முதலீடு செய்ய வந்தவர்கள், எனவே அவர்களை பாதுகாக்க வேண்டியது தனது கடமை என்கிற வகையில் வியாக்கியானம் அளித்துள்ளார். இதில் அமைச்சர் அருந்திக ∴பெர்ணாண்டோ தலையிடுவதற்கான முகாந்திரம் ஏதுமில்லை. ஆனால் ஏன் தலையிட்டார்? கடவுச்சீட்டே போலியென்றால் அவர்களது முதலீடு எப்படி இருக்கும்? அதை உங்கள் சிந்தனைக்கே விட்டுவிடுகிறேன்.

சரி, தொடங்கிய இடத்திற்கே வருகிறேன். இலங்கையில் சுற்றுலா அல்லது வர்த்தம் ஆகிய நோக்கத்திற்காக நேர்மையான வழியில் வருபவர்களிடம் ஓராயிரம் கேள்விகள் கேட்கபடுகின்றன. நீங்கள் எதர்க்காக வந்துள்ளீர்கள். கோவில் என்றால் எந்த கோவில், எந்த பூசாரி, என்ன பூசை, என்ன வேண்டுதல் என்ற கேள்விகள். இதே சிந்தனையுடன் நான் எனது பயணத்தை முடித்துக்கொண்டு குடியகல்வு அதிகாரி முன்னர் நாட்டைவிட்டு வெளியேறுவதற்கான முத்திரக்காகச் சென்ற போது, அவரும் பழைய அதே பழைய பல்லவி. நீங்கள் எதற்காக இலங்கைக்கு வந்தீர்கள். மீண்டும் கோவில் கதையை கூற வேண்டியதாயிற்று. ஒரு வழியாக முத்திரை குத்தப்பட்டு விமானம் ஏறி முடிந்தது.




மின்சார வாகனங்கள் மற்றும் பற்றரிகளைத் தயாரிப்பது தற்போதும் எதிர்காலத்திலும் வேலைகளை உருவாக்கி வருகின்றது.

மேலும் அறிக ontario.ca/BuildingOurEconomy

ஒன்ராறியோ அரசாங்கத்தால் கட்டணம் செலுத்தப்பட்டது

Ontario



## "கனடா இந்து" வழங்கும் துர்க்கேஸ்வர மஹாயாக

# துர்க்கேஸ்வரத்தில்

# 18-6-2023 ஞாயிறு



## துர்க்கேஸ்வரம் ஸ்ரீதுர்க்காதேவி ஐந்து தள ராஜகோபுரத்துடன்

ரொறன்ரோ, துர்க்கேஸ்வரம் ஸ்ரீதுர்க்காதேவி அம்பாள் திருக்கோவிலின் மஹாயாக மஹாகும்பாபிஷேக மஹாவிழாவானது எதிர்வரும் 18-6-2023 ஞாயிற்றுக்கிழமை நடைபெற உள்ளது. கனடாவில் முதன் முதலாக 48 தின யந்திர பூஜையுடனும் 12 தினம் கிரியைகளுடனும் 12 கால யாகத்துடனும் 48 தின மண்டலாபிஷேகத்துடனும் இந்த மஹாகும்பாபிஷேகம் நிகழவிருக்கிறது. பல்வேறு நாடுகளில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க அருள்மிகு திருக்கோவில்களில் இருந்து சிவாச்சாரியர்கள் வருகை தருகின்றனர். ஆயிரக்கணக்கான மஹாகும்பபி'கங்களை உலகெங்கும் நிகழ்த்திய பிள்ளையார்பட்டி டாக்டர். கி.பிச்சைக் குருக்களின் தலைமையில் மஹாகும்பாபிஷேகம் நடைபெறஉள்ளது

## துர்க்கேஸ்வரத்தில் பக்தர் நிகழ்த்தும் தீபஸ்தாபனத்துடன் கூடிய தீபலட்சுமி பூஜை 16-6-2023 வெள்ளி

பாலரூபத்தில் ஸ்தாபிக்கப்பெற்று பாலாலயத்தில் வீற்றிருக்கும் தெய்வ சக்திகளை, கிரியைகள் மூலமாகவும் மத்திரபூர்வமாகவும் வியாபகமாக்கி, 48 தினங்கள் மந்திரங்களாலும் கிரியைகளாலும் பூஜிக்கப்பெற்ற சக்தி வாய்ந்த யந்திரங்களுடன் ஒன்று சேர்த்து, புதிதாக புனருத்தாரணம் செய்த ஆலயத்தினுள் வரவழைக்கும் போது, முதலாவதாக செய்யப்பெறும் தீபஸ்தாபனம் மேன்மைமிக்கது. சுமங்கலிப் பெண்களும் கன்னிப் பெண்களும் இணைந்து இவ்வழிபாட்டினைச் செய்யவுள்ளனர். பொதுவாக வரலட்சுமி விரத தினத்தில் பக்தர்கள் திருவிளக்குப் பூஜை செய்வார்கள். ஆனால், தீபஸ்தாபனத்தின் போது, தீபலட்சுமிக்கு பூஜையும் அத்துடன் தீபங்களை புதிய ஆலயத்தில் ஸ்தாபிக்கும் பேறும் கிடைக்கின்றது.




## யந்திரபூஜை ஏப்பிரல் 21ம் திகதி ஆரம்பமாகி நிகழ்ந்துகொண்டிருக்கிறது.

இந்தியாவில் இருந்து பிள்ளையார்பட்டி கற்பகவிநாயகர், சிக்கல் சிங்கார வேலவர், திருச்சி பூமிநாதர், நெடுங்குடி கைலாசநாதர் போன்ற ஆலயங்களில் வழிபடப்பெற்று குருமார்களின் ஆசிகள் பெறப்பெற்று, கனடா வந்தடைந்த "யந்திரங்களுக்கு" துர்க்கேஸ்வரத்தில் விஷேட குருமார்கள் தினமும் பகலும் இரவும் பூஜைகள் நடாத்தி வருகின்றனர். கர்ப்பக்கிரகத்தில் விக்கிரகங்களின் கீழே வைக்கப் பெற்று அருட்சக்தி வழங்கும் சக்திமிகு உலோகத் தகடுகளால் யந்திரங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மிக நேர்த்தியாகவும் பக்திபூர்வமாகவும் நிகழும் யந்திரபூஜையை தரிசித்து பக்தர்கள் அருள்பெற்றுவருகின்றனர்.

# யூன் 7ம் திகதி

## மஹாகும்பாபிஷேக கிரியைகள் ஆரம்பம்

7-6-2023 புதன் கிழமை காலை 8.30 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் துர்க்கேஸ்வரம் மஹாகும்பாபிஷேகத்தின் பூர்வாங்க கிரியைகள் ஆரம்பிக்கின்றன. முக்கிய அம்சமாக ஏழுவகையான ஹோமங்களை நிகழ்த்தவுள்ளனர்.

| | | |
|---|---|---|
| 7-6-2023 | காலை | கணபதி ஹோமம் |
| 7-6-2023 | மாலை | மஹாலட்சுமி ஹோமம் |
| 8-6-2023 | காலை | நவக்கிரக ஹோமம் |
| 9-6-2023 | காலை | ஸ்கந்த ஹோமம் |
| 10-6-2023 | காலை | நவதுர்க்கா ஹோமம் |
| 10-6-2023 | மாலை | பிரத்தியங்கராதேவி ஹோமம் |
| 11-6-2023 | மாலை | ஸ்ரீவித்யா ஹோமம் |

ஒவ்வொரு ஹோமமும் ஒவ்வொரு தனிச்சிறப்பு உடையவை. அவற்றின் தரிசனமும் பங்கேற்பும் மகத்துவம் வாய்ந்தவை. அவற்றில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் முன்கூட்டியே ஆலயத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். ஒவ்வொரு ஹோமத்தினையும் பல குருமார்கள் இணைந்து செய்யவுள்ளனர். காலையில் நிகழும் ஹோமங்கள் காலை 8:30 மணிக்கு ஆரம்பமாகும். மாலையில் நிகழும் ஹோமங்கள் மாலை 6:00 மணிக்கு ஆரம்பமாகும்.

# கனடாவில் நிகழும்

## மஹாகும்பாபிஷேக மஹாவிழாவுக்கான சிறப்பிதழ்

# மஹாகும்பாபிஷேகம்

# காலை 6.00 மணி முதல்

## அம்பாள் தேவஸ்தானம்

# புதிதாய் புனர்நிர்மாணம்

## மஹாகும்பாபிஷேக யாகபூஜை

### யூன் 12ம் திகதி முதல் யூன் 18ம் திகதி வரை

துர்க்கேஸ்வரம் திருக்கோவிலின் மஹாகும்பாபிஷேக யாகபூஜைகள் 12-6-2023 திங்கட்கிழமை மாலை 5:00 மணிக்கு அங்குரார்ப்பணத்துடன் ஆரம்பமாகின்றது. அன்று மாலை முதல் 18-6-2023 ஞாயிற்றுக்கிழமை காலை வரை காலையும் மாலையுமாக 12 காலங்கள் யாகபூஜை தினமும் நடைபெற உள்ளது. ஒவ்வொரு யாகபூஜையின் போதும் விஷேட திரவ்விய ஹோமத்திலும் நவசக்தி அர்ச்சனையிலும் ஏராளமான பக்தர்கள் பங்கேற்று அருள்பெறவுள்ளனர். யாகபூஜைகளின் தரிசனம் மட்டுமன்றி ஹோமப்புகை சுவாசம், மற்றும் பங்கேற்புக்களும் மகத்துவம் வாயந்தவை.

## 18-6-2023 ஞாயிறு

**அதிகாலை 4:00 மணி முதல் காலை 6:00 மணி வரை**

12ம் கால யாக பூஜை, ஸ்பர்சாஹுதி, மஹாபூர்ணாகுதி, தீபாராதனை, நவசக்தி அர்ச்சனை, சதுர்வேத, ஸ்தோத்ர, திருமுறை பாராயணம், யாத்திராதானம், கும்பங்கள் (கடங்கள்) வீதிவலம் முதலியன

**காலை 6:30 மணிக்கு விமான (ஸ்தூபி) கும்பாபிஷேகம்**

**காலை 7:00 மணிக்கு ராஜகோபுர கும்பாபிஷேகம்**

**காலை 7:28 மணி முதல் காலை 7:40 மணிக்குள்**

**மஹாகணபதி, ஸ்ரீதுர்க்காதேவி மற்றும் அனைத்து மூர்த்திகளுக்கும்**

## மஹாகும்பாபிஷேகம்

தொடர்ந்து தசதர்சனை, யஜமானபிஷேகம், மஹாபிஷேகம் விஷேடபூஜை, தீபாராதனை, அர்ச்சனைகள் முதலியன

**பகல் 12:30 மணிமுதல் அன்னதானம் வழங்கப்படும்**

**மாலை 5:30 மணி முதல் இரவு 10:00 மணி வரை**

சாயரட்சை பூஜை, விஷேட இசை நிகழ்ச்சி, வசந்தமண்டப பூஜை, விநாயகர், ஸ்ரீதுர்க்காதேவி, மஹாலட்சுமி, சரஸ்வதிதேவி, முருகப்பெருமான் ஆகிய பஞ்சமூர்த்திகள் முறையே மூஷிகம், சிங்கம், யானை, அன்னம், மயில் ஆகிய வாகனங்களில் ஆரோகணித்து திருவீதிவலம் வந்து அருள்புரிவர்

# மாபெரும் வழிபாடு

## துர்க்கேஸ்வரத்தில் இரண்டு தினங்கள் எண்ணெய்க்காப்பு

### யூன் 16, 17ம் திகதிகளில்

மஹாகும்பாபிஷேகத்தில் நடைபெறுகின்ற ஒவ்வொரு கிரியையிலும் பெரும் அர்த்தங்களும், சிறப்புக்களும் உண்டு. அவற்றில், விஷேட மகத்துவம் கொண்ட ஒரு கிரியை "எண்ணெய்க்காப்பு" என்று அழைக்கப்படுகின்ற தைலாப்பியாங்கம். அடியார்கள் கர்ப்பக்கிரகத்தினுள் சென்று தம் கரங்களால் தர்ப்பைப் புல் எடுத்து எண்ணெய்யில் தொட்டு, இறைவனினின் திருவுருவங்களுக்கு சாத்தி வழிபடுதலையே எண்ணெய்க்காப்பு என அழைப்பர். பொதுவாக, சிவாச்சாரியார்களுக்கு மட்டுமே கர்ப்பக்கிரகத்தினுள் செல்லவோ, இறைஉருவங்களைத் தொடவோ, அபிஷேகிக்கவோ உரிமை உண்டு. ஆயினும், மூலஸ்தானத்துக்குள் செல்வதற்கோ அல்லது இறையுருங்களைத் தொடுவதற்கோ எந்தவொரு நாளிலும் கிடைக்காத பாக்கியம் பக்தர்களுக்கு கிடைக்கின்ற ஒரேயொரு சந்தர்ப்பம் மஹாகும்பாபிஷேகத்தில் நடைபெறும் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வாகும். இது பன்னிரண்டு ஆண்டுக்கு ஒரு முறையோ அல்லது புதிய ஆலயம் அமைக்கும்போதோ மட்டும் கிடைக்கும். அன்றைய தினம், பக்தர்கள் தர்ப்பையில் எண்ணெய்யைத் தொட்டு, இறைவனின் கண், மூக்கு, செவி, தொப்பிள், பாதம் முதலிய சகல அங்கங்களும் குளிரும்படி சாத்த வேண்டும்.

பக்தர்களின் வசதி கருதி, துர்க்கேஸ்வரம் மஹாகும்பாபிஷேகத்தில் இரு தினங்கள் எண்ணெய்க்காப்பு இடம்பெறும்.



# மரண அறிவித்தல்



**மண்ணில்:**

**10 - 02 - 1948**

**விண்ணில்:**

**28 - 05 - 2023**

# திரு. விஜயகுமார் முத்துகுமார்

முன்னாள் முல்லைத்தீவு மாவட்டத்தின் வீடமைப்புத் திட்டத்தின் முகாமையாளர்,
இளைப்பாறிய கனடா ஒன்ராறியோ மாநில வருமானவரி இலாகாவின் வருமானவரி பரிசோதகர்

யாழ். கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், கனடா Markham ஐ வதிவிடமாகவும் கொண்ட திரு. விஜயகுமார் முத்துகுமார் அவர்கள் 28-05-2023 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துக்குமார் கண்மணி தம்பதிகளின் பாசமிகு மூத்த புதல்வரும், பண்டிதர் பொன்னுத்துரை நாகரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகனும், தர்மலிங்கம் இரத்தினம் தம்பதிகளின் பாசமிகு பெறாமகனும்,

விமலாதேவி (ஆசிரியை) அவர்களின் அன்புக் கணவரும்,

சஞ்ஜித்குமார், கஜந்தகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், மாலினி சஞ்ஜித்குமார் அவர்களின் அன்பு மாமனாரும்,

செல்வகுமார், தர்மமூர்த்தி (பிரித்தானியா), பாஸ்கரமூர்த்தி, ஜெயலஷ்மி, டாக்டர் நவலஷ்மி, காலஞ்சென்றவர்களான ஜெயக்குமார், சுகுமார், மகாலஷ்மி ஆகியோரின் அன்புச் சகோதரரும், நாகேஸ்வரி திருநாவுக்கரசு, கலியாணசுந்தரம், காலஞ்சென்ற கமலாதேவி தர்மலிங்கம், பேராசிரியர் பாலசுந்தரம் பிள்ளை (முன்னாள் துணைவேந்தர் - யாழ் பல்கலைக்கழகம்), டாக்டர் விமலேந்திரன், பாலேந்திரன், யோகேந்திரன், ரவீந்திரன், புவனேந்திரன், நிர்மலாதேவி லோகராஜ், காலஞ்சென்ற வத்சலாதேவி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

***அன்னாரின் பூதவுடல் 03-06-2023 சனிக்கிழமை மதியம் 12 மணி தொடக்கம் பி.ப. 4 மணி வரை Chapel Ridge Funeral Home (8911 Woodbine Avenue, Markham) இல் பார்வைக்காக வைக்கப்பட்டு, மறுநாள் 04-06-2023 ஞாயிற்றுக்கிழமை அதே மண்டபத்தில் காலை 9 மணி தொடக்கம் மதியம் 12 மணி வரை ஈமைக்கிரியைகள் நடைபெற்று, பின்னார் பி.ப. 1 மணி அளவில் Forest Lawn Mausoleum & Cremation Centre (4570 Yonge Street, Toronto, ON M2N 5L6) இல் தகனம் செய்யப்படும்.***

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு: விமலாதேவி விஜயகுமார் - மனைவி: (416) 450-7589
சஞ்ஜித்குமார் விஜயகுமார் - மகன்: (416) 701-1763
கஜந்தகுமார் விஜயகுமார் - மகன்: (613) 292-4357

உ



கனடா மிஸிஸாகா பிரம்ரன்

# அருள்மிகு கற்பக விநாயகர் தேவஸ்தானம் பிறம்ரன் வருடாந்த கொடியேற்ற-மஹோற்சவப் பெருவிழா விஞ்ஞாபனம்-2023

குலம்தரும் செல்வம் தந்திடும் அடியார் படுதுயர் ஆயின எல்லாம்
நிலதரஞ்செய்யும் நீள் விசும்பருளும் அருளொடு பெரு நிலமளிக்கும்
வலம் தரும் மற்றும் தந்திடும் பெற்றதாயினும் ஆயின செய்யும்
நலம் தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன் நாராயணா என்னும் நாமம்.

சீர்மேவு மதி நதியுமரவும் சிறப்பும் சூழ்ந்த
பார்போற்றும் சிவனுமையின் மைந்தராகி
கார்மேவும் கனடாவின் களிறு நாயகனாகி
நேர்மேவு கற்பகத்து கணபதியே காப்பு.

அருவமும் உருவுமாகி அநாதியாய் பலவாய் ஒன்றாய்
பிரம்மமாய் நின்றசோதி பிளம்பதோர் மேனியாக
கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரெண்டும் கொண்டே
ஒரு திரு முருகன் வந்தாங்கு உதித்தனன் உலகமுய்ய

## ஸ்ரீ கற்பகவிநாயகப் பெருமானின் அடியார்களே!

சகல செல்வங்களும் நிறைந்து விளங்கும் கனடா மிஸிஸாகா பகுதியில் பிரம்ரன் மாநகரில் எழுந்தருளியிருந்து தம்மை பக்தியுடன் வந்து வழிபடும் மெய்யடியார்களின் இன்னல்களைப் போக்கி நல்லருள் பாலித்து ரட்சிப்பவராகிய ஸ்ரீ கற்பகவிநாயகப் பெருமானின் பெருங்கருணையினால் அழகிய திருமணமண்டபம் மணிமண்டபம் கொடிஸ்தம்பத்துடன் கூடிய புதிய திருக்கோவில் நிர்மாணிக்கப்பட்டு மஹா கும்பாபிஷேகம் நிகழ்ந்தேறிய பின்னர் பதினைந்தாவது முறையாக நிகழும் மங்களகரமான சோபகிருது வருஷம் சித்திரை மாதம் இருபத்தேழாம் நாள் (ஆங்கிலம்10-05-2023 புதன்கிழமை பகல் 11:30 மணிக்கு கொடியேற்று விழாவுடன் மஹோற்சவம் ஆரம்பமாகி வைகாசி மாதம் 19ம் நாள் ஆங்கிலம் 02-06-2023 வெள்ளிக்கிழமை வைகாசி விசாகத் தினத்தில் தேர்த்திருவிழாவும் 03-06-2023 சனிக்கிழமை தீர்த்தோற்சவம் கொடியிறக்கல் திருவிழா வரையில் வழமைபோல இருபத்தைந்து தினங்களுக்கு பகலும் இரவும் கொடிஸ்தம்ப பூஜை மஹாயாக பூஜை ஆகியவற்றுடன் வருடாந்தப் பெருவிழா மிகவும் சிறப்பாக நடைபெற ஸ்ரீ கற்பகவிநாயகர் நல்லருள் பாலித்துள்ளார். விரதகாரர்கள் உபயகாரர்கள் அனைவரும் கீழ்காணும் காலநேர அட்டவணைப்பிரகாரம் நிகழவிருக்கும் திருவிழாக்களை ஆசார நியமங்களுடன் தினமும் வந்து தரிசித்து கண்கண்ட தெய்வமாம் கற்பகவிநாயகரின் அருளால் வேண்டியவரங்களைக் குறையாது பெற்றுச் சகல செல்வயோகமிக்க பெருவாழ்வு வாழும் வண்ணம் அன்புடன் வேண்டுகிறோம். சுபம்

**மஹோற்சவ சிவாச்சாரியார்:**
பிரதிஷ்டா கிரியாரத்தினம்
சிவஸ்ரீ பாலசுந்தரக் குருக்கள்

**ஆலய குருமார்:**
சிவஸ்ரீ நீலகண்டன் அஹோரசாமி
(தமிழ்நாடு, இந்தியா)
சிவஸ்ரீ சண்முகம் ஜனார்த்தனன் (பாண்டிச்சேரி, இந்தியா)

கனடாவாழ் குருமார்கள் அனைவரையும் மஹோற்சவ விழாக்காலங்களில் வருகைதந்து சிறப்பிக்கும் வண்ணம் பணிவன்புடன் அழைக்கிறோம்.
**முக்கிய குறிப்பு:**
தேர்த்திருவிழாவன்று காவடி கற்பூரச்சட்டி, எடுக்க விரும்புவோர் தயவுசெய்து உங்கள் பெயர்களை முன்னரே பதிவு செய்து கொள்ளும்படி அன்புடன் வேண்டுகிறோம்.

09-05-2023 செவ்வாய் மாலை 5மணிக்கு கணபதி ஹோமம் தொடர்ந்து அனுக்ஞை கிராமசாந்தி வாஸ்துசாந்தி மிருத்சங்கிரஹணம் நடைபெறும்.

**கொடியேற்றத் திருவிழா காலை 11:30மணி தேர்த்திருவிழா காலை 11:30மணி தீர்த்தத் திருவிழா காலை 11:30 மணி**

**விழாக் கால நிகழ்வுகளின் நேர கால விபரங்கள்**

| | | | காலை உபயம் | மாலை உபயம் | திருவிழா அலங்காரங்கள் |
|---|---|---|---|---|---|
| 01 | 10-05-2023 | புதன் | கொடியேற்ற விழா திரு. கு.முத்துக்கிருஸ்ணன் குடும்பம் - சுழிபுரம் | திரு. பிரதீபன் சிவராஜா குடும்பம் | ஓங்கார வடிவம் |
| 02 | 11-05-2023 | வியாழன் | திரு. பொன்னம்பலம் சுகுனேந்திரன் குடும்பம் -புங்குடுதீவு | தம்பிஐயா-மனோன்மணி குடும்பம் சிவனேசன் சுசீலா குடும்பம் சந்திரகுமார் உதயலட்சுமி குடும்பம் | சூரியப்பிரபை |
| 03 | 12-05-2023 | வெள்ளி | திரு. கனகசபை பாலகாந்தன் குடும்பம் கரவெட்டி | திரு.அருட்பிரகாசம் ரெங்கநாதன் குடும்பம் சுளிபுரம் | சந்திரப்பிரபை |
| 04 | 13-05-2023 | சனி | திரு. தியாகராஜா அன்பழகன் குடும்பம் கிளிநொச்சி | திரு. சிவஞானம், திரு. பரமேஸ்வரன், திரு.பூலோகசிங்கம் திரு. செல்வரத்தினம் குடும்பம் -நயினாதீவு மக்கள் | நட்சத்திர வடிவம் |
| 05 | 14-05-2023 | ஞாயிறு | திரு. வாமதேவன் முகுந்தன் கணனி குடும்பம் ஏழாலை | திரு. கதிர்காமநாதன் குடும்பம் திரு. நாதன் குடும்பம் - சுழிபுரம் | திருத்தொங்கல் வடிவம் |
| 06 | 15-05-2023 | திங்கள் | Steve பாலசிங்கம் குடும்பம், மட்டுவில் ONGO LOGISTIC | திரு. ராமு சாந்தரூபன் குடும்பம் உரும்பிராய் | கப்பல் திருவிழா |
| 07 | 16-05-2023 | செவ்வாய் | திரு. கருணாகரன் சறோஜினி-கலா குடும்பம்-நல்லூர் | திரு. பகீரதன் துஷ்யந்தா குடும்பம் லக்சி சுப்பர் மார்க்கட் | சிவலிங்க வழிபாடு |
| 08 | 17-05-2023 | புதன் | திரு. நடராசா பிரதீபன் நிஷா குடும்பம் தச்சன்தோப்பு | திரு. இரத்தினவடிவேல் குடும்பம் சுழிபுரம்- தும்பளை | நாக வாகனம் |
| 09 | 18-05-2023 | வியாழன் | செந்தூரன் லாவன்யா குடும்பம் மட்டக்களப்பு | திரு. ஜெகதேவா சோமாஸ்கந்தன் குடும்பம் - கொக்குவில் | மூக்ஷிக வாகனம் |
| 10 | 19-05-2023 | வெள்ளி | ஓர் அன்பர் | திரு. சந்திரபோஸ் பிருந்தா குடும்பம் Plastform Countertops Ltd. | மஞ்சம் |
| 11 | 20-05-2023 | சனி | திரு. சின்னத்தம்பி குலேந்திரன் குடும்பம் கோப்பாய் | திரு. தியாகராஜா பரமநாதன் குடும்பம் தாவடி | மயில் வாகனம் |
| 12 | 21-05-2023 | ஞாயிறு | திரு சிவகுரு பத்மநாதன் குடும்பம் நுணாவில், சாவகச்சேரி | திரு. சிவலிங்கம் திருக்குமரன், தனுஷன், அனோயன், நிக்ஷன் குடும்பம் - இணுவில் | கற்பகதரு வடிவம் |
| 13 | 22-05-2023 | திங்கள் | ஓர் அன்பர் | திரு. ஜெய்கீதா குடும்பம் கேரளா-இந்தியா | குதிரை வாகனம் |
| 14 | 23-05-2023 | செவ்வாய் | திரு பத்மநாதன் குடும்பம் பிரம்ரன் - கனடா | திரு பசுபதிப்பிள்ளை குமரசற்குணன் குடும்பம் - குறிகட்டுவான் | மஞ்சள் அலங்காரம் |
| 15 | 24-05-2023 | புதன் | திரு. கஜதீபன் சுஜா குடும்பம் காங்கேசன் துறை | திரு. நிரஞ்சன் நிரு குடும்பம் பிரம்ரன் | கஜ அலங்காரம் |
| 16 | 25-05-2023 | வியாழன் | திரு. தவராசா சிவசோதி குடும்பம் -அனலைதீவு | திரு. இ. வேணுகோபாலன் குடும்பம் புன்னாலைக்கட்டுவன் | கருட வாகனம் |
| 17 | 26-05-2023 | வெள்ளி | திரு. பரஞ்சோதி-ரஜனி குடும்பம் (கனடா) | திரு. ரத்னபாலன் சோபா ராஜ் குடும்பம் -மானிப்பாய் | பக்தி முக்தி பாபநாசம் |
| 18 | 27-05-2023 | சனி | திரு. பொன்னையா கனகலிங்கம் குடும்பம் - அல்வாய் | திரு. ஆறுமுகம் ஞானச்சந்திரன் குடும்பம் கொடிகாமம் | நர்த்தன வடிவம் |
| 19 | 28-05-2023 | ஞாயிறு | திரு. சந்திரமோகன் சுகிர்தா குடும்பம்-துன்னாலை | திரு. நிரஞ்சன் அருணாசலம் குடும்பம் Top Quality Plastic Ltd. | கைலாச வாகனம் |
| 20 | 29-05-2023 | திங்கள் | ஓர் அன்பர் | திரு. யோகி முருகேசு மஞ்சு குடும்பம் அனலைதீவு | காமதேனு வாகனம் |
| 21 | 30-05-2023 | செவ்வாய் | திரு. பிரபாகரன் குமாரசாமி குடும்பம் சங்கரத்தை, வட்டுக்கோட்டை | திரு. பொன்னம்பலம் சர்வேஸவரன் குடும்பம், சுழிபுரம் | மாம்பழத் திருவிழா |
| 22 | 31-05-2023 | புதன் | காரைநகர் மக்கள் - வேட்டைத் திருவிழா | ஓர் அன்பர் | வேட்டைத் திருவிழா |
| 23 | 01-06-2023 | வியாழன் | திரு.சுப்பையா கிருஷ்ணபகவான் குடும்பம் -கைதடி | திரு. வரன் நாதன் குடும்பம் VIA REALTY INC | சப்பறத் திருவிழா |
| 24 | 02-06-2023 | வெள்ளி | தேர்த் திருவிழா DYNEVOR EXPRESS அழகரெட்ணம் குமார் குடும்பம் கனடா | ஓர் அன்பர் | வைகாசி விசாக முருகன் விழா தேரடி உற்சவம் |
| 25 | 03-06-2023 | சனி | தீர்த்தத் திருவிழா - ஓர் அன்பர் | திரு. கிருபானந்தராஜா றமணி குடும்பம் தொல்புரம் | கொடியிறக்கல் விழா சண்டேஸ்வரர் விழா ஆச்சார்ய உற்சவம் |
| 26 | 04-06-2023 | ஞாயிறு | கற்பக விநாயகர் ஆலய அந்தணர்கள் | | காலை: பிராயச்சித்தம் |
| 27 | 09-06-2023 | வெள்ளி | சிவகுமார் குடும்பம் - இராஜேஸ்வரன் குடும்பம் A1 Florist - Brampton | | மாலை: வைரவர் மடை |
| 28 | 10-06-2023 | சனி | திருவருள் கனகசபை குடும்பம் - அனலைதீவு | | பூங்காவனம் |


**முக்கிய குறிப்பு: ஆடிவேல் திருவிழா இருபத்தி இரண்டாவது தடவையாக ஆகஸ்ட் மாதம் 10, 11, 12ம் திகதிகளில் வெகு சிறப்பாக நடைபெற்று 13ந் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆடிவேல் இசைமாலையும் சிறப்பாக நடைபெறும்**

**திருவிழாக்கால நிகழச்சிகள் நேரகால அட்டவணை**

**காலை திருவிழா**
6:30 மணி காலை பூஜை
7:30 மணி காலை சந்தி பூஜை
09:00 மணி ஸ்நபனகும்ப அபிஷேகம்
10:30 மணி உச்சிகால பூஜை- யாகபூஜை கொடிஸ்தம்ப பூஜை
11:30 மணி வசந்தமண்டப பூஜை சுவாமி வீதியுலா மஹாயாக தரிசனம்
01:00 விபூதி, பிரசாதம் வழங்கப்படும்

**மாலை திருவிழா**
05:00 மணி ஸ்நபன கும்ப அபிஷேகம்
06:30 மணி மூலஸ்தான பூஜை பஞ்சமுகார்சனை யாக பூஜை கொடிஸ்தம்ப பூஜை
07:30 சமய கலை நிகழ்ச்சிகள்
07:45 மணி வசந்தமண்டப பூஜை சுவாமி வீதியுலா மஹாயாக தரிசனம் பிரசாதம் வழங்கல்.
10:00 மணி அர்த்தஜாமப் பூஜை

**தேவஸ்தான மங்கள இசை: கற்பக விநாயகர் தேவஸ்தான இசைக் கலைஞர்கள்**
குருமூர்த்தி ரெங்கநாதன் - சிவவடிவேல் முனுசாமி
செந்தில்நாதன் ஆனந்தன் - பழனிவேல் நாகராஜன்
ஜெகநாதன் கோபாலகிருஷ்ணன் - தேவேந்திரன் - ரெங்கராஜன்
மணிகண்டன் மாரிமுத்து - முனிராஜ் முனிரத்தினம்
**விசேடமங்கள இசை: கனடா, இலங்கை, இந்தியா கலைஞர்கள்**
புஷ்பமாலைகள், புஷ்ப அலங்காரங்கள்: M, குமார் Mark Florist
(விசேஷ திருவிழாத் தினங்களில் நிகழ்ச்சிகளின் காலநேர மாற்றம் அறிவிக்கப்படும்)




**ARULMIGU KATPAGAVINAYAGAR HINDU TEMPLE BRAMPTON**
200 Advance Blvd, Unit 1, Brampton, (Dixie & Advance Blvd) L6T 4V4
Tel: 905-458-9701 / 905-458-0623 / 416-471-0255 Fax: 905-458-0326
www.srikatpagavinayagar.ca

இங்ஙனம்
என்றும் இறைபணியில் நிற்கும்
கணகுக சிவத்தொண்டர்,
திரு. இரா. விஜயநாதன்
(தேவஸ்தான தர்மகர்த்தா)

VIVEKA

# சீமான் உள்ளிட்ட 20க்கும் மேற்பட்டோர் ட்விட்டர் கணக்குகள் திடீர் முடக்கம் : முதல்வர் மு.க. ஸ்டாலின் கண்டனம்

நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் உட்பட 20க்கும் மேற்பட்ட நிர்வாகிகளின் ட்விட்டர் கணக்குகள் முடக்கப்பட்டுள்ளன. இதற்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம் தெரிவித்துள்ளார்.நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் மற்றும் அக்கட்சியினர், ட்விட்டர் உள்ளிட்ட சமூக வலைதளங்களில் தீவிரமாக இயங்கி வருகின்றனர்.இந்நிலையில் சீமான் மற்றும் நிர்வாகிகள் இடும்பாவனம் கார்த்தி, பாக்கியராஜன், விக்கி பார்கவ் உட்பட நாம் தமிழர் கட்சியின் 20 க்கும் மேற்பட்ட நிர்வாகிகள் மற்றும் மே 17 இயக்க ஒருங்கிணைப்பாளர் திருமுருகன் காந்தி மற்றும் நிர்வாகிகளின் ட்விட்டர் கணக்குகளை இந்தியாவில் தற்காலிகமாக தடை செய்வதாக ட்விட்டர் நிறுவனம் அறிவித்துள்ளது.

சட்டப்பூர்வ கோரிக்கையை ஏற்று, சீமான், திருமுருகன் காந்தி உள்ளிட்டோரின் ட்விட்டர் கணக்குகள் முடக்கப்பட்டுள்ளதாக ட்விட்டர் நிறுவனம் விளக்கம் அளித்துள்ளது. இதனால் அதிர்ச்சியடைந்துள்ள சீமான் மற்றும் திருமுருகன் காந்தியின் ஆதரவாளர்கள், ட்விட்டர் நிறுவனத்துக்கு எதிராக கண்டனங்களை தெரிவித்து வருகின்றனர்.இதுகுறித்து சீமான் கூறுகையில்,



'டெல்லியில் மல்யுத்த வீராங்கனைகள் போராட்டத்தை ஆதரித்து ட்விட்டரில் பதிவிட்டதால் என்னுடன் தொடர்புடைய 20 பேரின் ட்விட்டர் கணக்குகள் முடக்கப்பட்டுள்ளன. ட்விட்டர் கணக்கை முடக்கியது எனக்கு மகிழ்ச்சி. ஆனால் என்னுடைய குரலை யாராலும் முடக்க முடியாது' என தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சென்னை காவல்துறை அளித்துள்ள விளக்கத்தில், 'நாம் தமிழர் கட்சி மற்றும் மே 17 இயக்க நிர்வாகிகளின் சமூக ஊடக தளங்களை முடக்க வேண்டும் என சென்னை காவல்துறை சார்பில் மத்திய அரசுக்கு எவ்வித கோரிக்கையும் விடுக்கப்படவில்லை. எனவே இவ்விவகாரத்தில் சென்னை காவல்துறையை தொடர்புபடுத்தி தவறான செய்திகள் பரப்புவதை தவிர்த்திடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. இவ்வாறு தவறான தகவல் பரப்புபவர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்' என கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில், சீமான், திருமுருகன் காந்தி உள்ளிட்டோரின் ட்விட்டர் கணக்குகள் முடக்கப்பட்டதற்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம் தெரிவித்துள்ளார்.இது குறித்து முதல்வர் தனது ட்விட்டர் பக்கத்தில் கூறியிருப்பதாவது: சீமான், திருமுருகன் காந்தி உள்ளிட்டோரது ட்விட்டர் கணக்குகள் இந்தியாவில் முடக்கப்பட்டிருப்பது கண்டனத்துக்குரியது. கருத்துகளை கருத்துகளால் எதிர்கொள்வதே அறம். கழுத்தை நெரிப்பது அல்ல. ட்விட்டர் முடக்கத்தை விலக்கி சமூக வலைத்தளத்தை அதற்கான தரத்துடன் செயல்பட அனுமதிக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

இதற்கிடையில் மீண்டும் ட்விட்டரில் புதிய கணக்கை தொடங்கிய சீமான், முதல்வருக்கு நன்றி தெரிவித்துள்ளார். இதுகுறித்து சீமான் தனது புதிய ட்விட்டர் பக்கத்தில், 'புதிய நாடாளுமன்றத்தை செங்கோல் நாட்டி திறந்து வைத்துவிட்டு, எதிர்த்து எழுதும் எழுதுகோல்களை முறித்து, குரல் வளையை நெறிப்பது தவறானது' என தெரிவித்துள்ளார்.

# தமிழகத்தை உலக அளவில் உயர்த்துவதே லட்சியம்: சிங்கப்பூர், ஜப்பான் பயணம் குறித்து முதல்வர் ஸ்டாலின் கடிதம்



தமிழகத்தை உலக அளவில் உயர்ந்த இடத்துக்கு கொண்டுசெல்வதே லட்சியம் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.இது தொடர்பாக திமுக தொண்டர்களுக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது: தமிழகத்தில் பத்தாண்டுகால இருட்டை விரட்டி, விடியலைத் தந்து கொண்டிருக்கிறது திராவிடமாடல் அரசு. தொழில்வளம் பெருகி,வேலைவாய்ப்பும், உற்பத்தியும் அதிகரித்தால்தான் பொருளாதாரம் முன்னேறும். அதற்காகத்தான் சிங்கப்பூர், ஜப்பான் நாடுகளுக்குச் சென்றேன்.

பயணத்தை வெற்றிகரமாக முடித்து, தமிழகம் திரும்புகிறேன்.சிங்கப்பூரில் முக்கிய நிறுவனங்களின் தலைமைப் பொறுப்பாளர்கள், தொழில் அமைச்சர் ஈஸ்வரன், சட்டத் துறை அமைச்சர் சண்முகம் உள்ளிட்டோரை சந்தித்து, தமிழகஅரசின் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களையும், தொழில் வாய்ப்புகளையும் விளக்கி, தொழில் முதலீடு செய்ய வலியுறுத்தினேன். அங்கிருந்து ஜப்பானின் ஒசாகாவுக்குச் சென்றேன். அங்கு டைசல்நிறுவனத்துடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. முதலீட்டாளர் கருத்தரங்கில், தமிழகத்தில் உள்கட்டமைப்புத் துறைகளில் முதலீடுசெய்யுமாறு ஜப்பானிய நிறுவனங்களுக்கு அழைப்பு விடுத்தேன். ஒசாகாவில் கோமாட்சு தொழிற்சாலைக்குச் சென்று, ஒரகடத்தில் உள்ள அந்நிறுவன இயந்திர உற்பத்தி ஆலையை விரிவாக்கம் செய்யுமாறு அழைப்பு விடுத்தேன்.ஒசாகாவிலிருந்து புல்லட் ரயில் பயணத்தில், இரண்டரை மணி நேரத்தில் 500 கிலோமீட்டரைக் கடந்து டோக்கியோ சென்றோம். ஜப்பானில் பொதுப் போக்குவரத்தில் ரயில் முக்கியப் பங்காற்றுகிறது.இந்தியாவில் நிறைவேற்றப்படாத ரயில்வே திட்டங்கள் நிறையஉள்ளன. குறிப்பாக, தமிழகத்துக்கான ரயில்வே திட்டங்கள் புறக்கணிக்கப்படுகின்றன. அறிவிக்கப்பட்ட திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடும் குறைவாக உள்ளதை மத்திய ஆட்சியாளர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.டோக்கியோவில் ஜெட்ரோ தலைவருடன் சந்திப்பு, 250 தொழில் நிறுவன தலைமை பொறுப்பாளர்கள் கலந்துகொண்ட கருத்தரங்கம் உள்ளிட்டவற்றில் பங்கேற்று, முதலீட்டாளர்களுக்கு அழைப்பு விடுத்தேன். பின்னர், ஜப்பான் நிறுவனங்களுடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.பின்னர், டோக்கியோவில் உள்ளஉலகின் 3வது உயரமான `ஸ்கைட்ரீ' கட்டிடத்துக்குச் சென்றபோது, தமிழகத்தை உலக அளவில் உயர்ந்த இடத்துக்கு கொண்டுசெல்ல வேண்டும் என்ற லட்சியம் மனதில் தோன்றியது. கடல் கடந்த பயணத்தால், தமிழகத்தின் நிலை உயரும் என்ற நம்பிக்கை உள்ளது.கடந்த 10 ஆண்டுகால அதிமுக ஆட்சிபோல இல்லாமல், தமிழகம் மாறியிருக்கிறது. தமிழக அரசு வெளிப்படைத் தன்மையுடன் செயல்படுகிறது என்ற நம்பிக்கையை, முதலீட்டாளர்கள் மனதில்ஏற்படுத்தியுள்ளது. கருணாநிதி உருவாக்கிய நவீனத் தமிழகத்தை, நாட்டின் முதன்மை மாநிலமாக உயர்த்திக் காட்டுவோம். இவ்வாறுமுதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

# புதிய நாடாளுமன்றம் திறப்பு விழாவில் பங்கேற்றது திருமுறைக்கு கிடைத்த பெருமை: உடுமலை மாணவி உமா நந்தினி நெகிழ்ச்சி



புதிய நாடாளுமன்றம் திறப்பு விழாவில் அரசு விருந்தினராக கலந்து கொண்டது திருமுறைக்கு கிடைத்தபெருமையாக கருதுவதாக உடுமலையைச் சேர்ந்த கல்லூரி மாணவி உமா நந்தினி தெரிவித்தார். திருப்பூர் மாவட்டம், உடுமலையைச் சேர்ந்தவர் உமா நந்தினி(19). தனியார் கல்லூரியில் 2ம் ஆண்டு தமிழ் இலக்கியம் படித்து வருகிறார்.

இவரது தந்தை பாலகிருஷ்ணன் அரசு பள்ளி ஆசியராகவும், தாயார் கண்ணம்மாள் அரசு உதவி பெறும் பள்ளியில் ஆசிரியையாகவும் உள்ளனர்.பள்ளி மாணவியாக இருந்த போதே தமிழ் இலக்கியத்தில் ஆர்வம் கொண்ட உமா நந்தினி, பக்தி இலக்கிய நூல்களை வாசிக்க தொடங்கினார். கடந்த 2020ல் தேவாரத்தில் உள்ள 795 பதிகங்களில் 8,239 பாடல்களை 239 நாட்கள் பாடி இந்திய சாதனை புத்தகத்தில் (இண்டியா புக் ஆப் ரெக்கார்ட்ஸ்) இடம்பெற்றார். இதன் மூலம் திருவாவடுதுறை ஆதீனத்திடம் அறிமுகமானார். உடுமலை காந்திநகரில் உள்ளவிநாயகர் கோயிலில் தினமும்தேவார பாடல்களை பாடியும், மாணவர்களுக்கு கற்றுக்கொடுத்தும் வருகிறார்.

இந்நிலையில், டெல்லியில் புதிய நாடாளுமன்றம் திறப்பு விழாவில் அரசு விருந்தினராக கலந்துகொண்டார். இதுகுறித்து அவர் 'இந்து தமிழ் திசை' செய்தியாளரிடம் கூறும்போது, "வரலாற்று சிறப்பு மிக்க நிகழ்வில் பங்கேற்க வாய்ப்பு கிடைத்தது மகிழ்ச்சி. விழாவில் பங்கேற்ற முக்கிய தலைவர்களையும் காணும் வாய்ப்பு கிடைத்தது. திருமுறையினால் இந்த வாய்ப்பு கிடைத்ததாகவே கருதுகிறேன். திருமுறையில் உள்ள பாடல்களை பாடிய பின் தற்போது திருப்புகழ் பாடல்களை பாடி வருகிறேன். தொடர்ந்து பக்தி இலக்கியத்தை பரப்புவதற்கு இது ஊக்கத்தை அளித்துள்ளது" என்றார்.

# உலக பட்டினி தினத்தை முன்னிட்டு தமிழகம் முழுவதும் விஜய் மக்கள் இயக்கம் சார்பில் ஒருவேளை இலவச மதிய உணவு

உலக பட்டினி தினத்தை முன்னிட்டு தமிழகம் முழுவதும் விஜய் மக்கள் இயக்கம் சார்பில் ஏழை மக்களுக்கு ஒருவேளை இலவச மதிய உணவு வழங்கப்பட்டது. உலக பட்டினி தினத்தை முன்னிட்டு விஜய் மக்கள் இயக்கம் சார்பில் மே 28ம் தேதிதமிழகத்தில் உள்ள 234 தொகுதிகளிலும் நகரம், ஒன்றியம் மற்றும் பகுதிகளில் உள்ள ஏழை மக்களுக்கு ஒருவேளை மதிய உணவு வழங்க ஏற்பாடுசெய்யப்பட்டது.

இது தொடர்பான அறிவிப்பை விஜய் மக்கள் இயக்க பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த், கடந்த 25ம்தேதி வெளியிட்டிருந்தார். 'தளபதி விஜய் ஒருநாள்மதிய உணவு சேவையகம்' திட்டம் மூலம்



பசியால் வாடும்மக்களுக்கு இயன்ற வரை உணவளித்து பசியைப்போக்கும் விழிப்புணர்வை சமுதாயத்தில் ஏற்படுத்தும் நோக்கத்துடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட போவதாக விஜய் மக்கள் இயக்கம் தெரிவித்திருந்தது.

234 தொகுதிகளில்.. அந்த வகையில், உலக பட்டினி தினமான நேற்று தமிழகத்தின் 234 தொகுதிகளிலும் விஜய் மக்கள்இயக்க நிர்வாகிகள் ஏழை மக்களுக்கு ஒருவேளை மதிய உணவை வழங்கினர். சென்னையில் உள்ள அனைத்து சட்டப்பேரவை தொகுதிகளிலும் ஒருவேளை மதிய உணவை விஜய் மக்கள் இயக்கத்தினர் வழங்கினர். விஜய் மக்கள் இயக்க பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்த், கோவையில் உள்ள சட்டப்பேரவை தொகுதிகளில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு மதிய உணவை வழங்கினார்.

# SJV Father of Tamil Nationalism

## Expansion of the speech by V. Thangavelu, President Canada TNA at the 125th birth anniversary of SJV held in Toronto

*Continued from last week…*

H. N. G. Fernando, C.J.

The earlier of the two decisions (Jansz v. Tranckell) was in a case in which the question arose whether the salary of a public servant could be seized in execution of a decree against him. The Court there stated that it is certain, and that the Queen's Advocate admitted, that the salary of a public officer, when his service has been properly performed, is due to him as a debt. The Court proceeded to consider the Roman Dutch Law regarding the liability to seizure of the salary of a public servant, and held that the salary was sizeable, but only if other assets of the debt or were not available to satisfy the decree, and if a Court in its discretion regarded the seizure as not being contrary to the public interest in the circumstances of a particular case. The order ultimately made was that the salary of the public servant concerned was not, in the circumstances, liable to seizure. Thus, the Roman-Dutch Law was held applicable to the question whether the salary is sizeable. But it is not clear from the Judgment on what basis the Court thought it certain that the salary is a debt due1 Ramanathan's Reports (1863-68) p. 160.

There is no statement that this is a principle of Roman-Dutch Law or else of English Law. Nevertheless, it is a fair implication that the Crown did not in this case contend that no action lies for the recovery of a public servant's salary.

The later decision in Fraser's case 1 was in a suit against the Queen's Advocate, for the recovery of balance salary due to the plaintiff as Postmaster of Galle and as a packet agent, on the ground that he had been wrongfully dismissed from those offices. The first of these offices was held under the Ceylon Government, and the second under the Imperial (British) Government. The action was dismissed by the Supreme Court on the ground that the plaintiff held his offices during pleasure, and that he had no right of action at all, so far as the (Ceylon) Postmaster ship was concerned, as to anything that happened after the date of his dismissal, because it had been shown that he had in fact been paid his salary up to that date.
Nevertheless, in considering the plaintiff's claim for his salary as the holder of an office under the Imperial Government, the Court drew a distinction between the respective rights of such an officer and of unemployed under the Ceylon Government. The Court was of opinion that whereas an action would not lie at all in the former case, an action for earned salary would lie against the Queen's Advocate in the latter case. The entire relevant passage in the Judgment has to be cited here: — "We humbly consider that Her Majesty's predecessors and Her Majesty have been graciously pleased to lay aside, as to this island, part of the prerogative of the Crown as to immunity from being sued. By proclamation of the 23rd September 1799, it was amongst other things published and declared that the administration of ' justice and police in the settlements and territories in the Island of Ceylon with their dependencies, shall be henceforth and during Her Majesty's pleasure exercised by all courts of jurisdiction, civil and criminal, magistrates and ministerial officers, according to the laws and institutions that subsisted under the ancient Government of the United Provinces, subject to such deviations and alterations by any of the respective powers and authorities hereinbefore mentioned, and to such other deviations and alterations as shall by these present or by any future proclamation and in pursuance of the authorities confided to us, deem it proper and beneficial for the purposes of justice, to ordain and publish, or which shall or may hereafter be by lawful authority ordained and published.'"

Afterwards, the Ordinance No. 5 of 1835, (which was allowed and confirmed by Her Majesty) repealed parts of the said proclamation, but expressly reserved and retained so much of it as doth publish and declare that ' the administration of justice and police within the settlements then under the British dominion and known by the designation of the maritime provinces should be exercised by all the courts of judicature, civil and criminal, according to the laws and institutions that subsisted under the ancient Government of the United Provinces.'1 Bam. p. 316.

Thus, the Roman - Dutch Law was held applicable to the question whether the salary is sizable. But it is not clear from the Judgment on what basis the Court thought it certain that the salary is a debt due to a public servant. There is no statement that this is a principle of Roman - Dutch Law or else of English Law. Nevertheless, it is a fair implication that the Crown did not in this case contend that no action lies for the recovery of a public servant's salary.

The later decision in Fraser's case 1 was in a suit against the Queen's Advocate, for the recovery of balance salary due to the plaintiff as Postmaster of Galle and as a packet agent, on the ground that he had been wrongfully dismissed from those offices. The first of these offices was held under the Ceylon Government, and the second under the Imperial (British) Government. The action was dismissed by the Supreme Court on the ground that the plaintiff held his offices during pleasure, and that he had no right of action at all, so far as the (Ceylon) Post master ship was concerned, as to anything that happened after the date of his dismissal, because it had been shown that he had in fact been paid his salary up to that date.

Nevertheless, in considering the plaintiff's claim for his salary as the holder of an office under the Imperial Government, the Court drew a distinction between the respective rights of such an officer and of one employed under the Ceylon Government. The Court was of opinion that whereas an action would not lie at all in the former case, an action for earned salary would lie against the Queen's Advocate in the latter case.

"We humbly consider that Her Majesty's predecessors and Her Majesty have been graciously pleased to lay aside, as to this island, part of the prerogative of the Crown as to immunity from being sued. By proclamation of the 23rd September 1799, it was amongst other things published and declared that the administration of ' justice and police in the settlements and territories in the Island of Ceylon with their dependencies, shall be henceforth and during Her Majesty's pleasure exercised by all courts of jurisdiction, civil and criminal, magistrates and ministerial officers, according to the laws and institutions that subsisted under the ancient Government of the United Provinces, subject to such deviations and alterations by any of the respective powers and authorities hereinbefore mentioned, and to such other deviations and alterations as shall by these present or by any future proclamation and in pursuance of the authorities confided to us, deem it proper and beneficial for the purposes of justice, to ordain and publish, or which shall or may hereafter be by lawful authority ordained and published.'
(To be continued …)





Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
30
வருட சேவைகள்
வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு
இணங்க புதிய கிளை உதயம்!
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...
Pawn Bank Inc.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198

சினிமா

# "அடித்தட்டு மக்களின் கதைகளைக் கொண்ட திரைப்படங்கள் ஒருபோதும் தோல்வியைத் தழுவுவதில்லை"



## கனடா ஆரபி படைப்பகத்தின் தயாரிப்பாக வெளிவரவுள்ள 'FINDER' திரைப்படத்தின் இயக்குனரிடம் பகிர்ந்து கொண்ட கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள்

**- சென்னையிலிருந்து செய்தியாளர் சத்தியன்**

"அடித்தட்டு மக்களின் கதைகளைக் கொண்ட திரைப்படங்கள் ஒருபோதும் தோல்வியைத் தழுவுவதில்லை. எனவே தங்கள் திரைப்படம் அவ்வாறான திரைக் கதையைக் கொண்டிருப்பதால் நீங்கள் நம்பிக்கையுடன் உங்கள் FINDER திரைப்படத் தயாரிப்பு வேலைகளைத் தொடருங்கள். அதற்கு எனது நண்பர்கள் சுவிற்சலாந்து வாழ் சதீஷ் மற்றும் கனடா வாழ் லோகேந்திரலிங்கம் ஆகியோரின் வேண்டுகோளின்பேரில் பாடல்களை எழுதுவதற்கு மனமுவந்து ஏற்றுக் கொண்டுள்ளேன்".

இவ்வாறு கனடா ஆரபி படைப்பகத்தின் நிறுவனர் ரஜீவ் சுப்பிரமணியம் அவர்களின் தயாரிப்பில் வெளிவரவுள்ள 'FINDER' திரைப்படத்தின் இயக்குனரான வினோத் ராஜேந்திரன் அவர்களிடம் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்ட போது தெரிவித்தார் கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள்.

கனடா ஆரபி படைப்பகத்தின் நிறுவனர் ரஜீவ் சுப்பிரமணியம் அவர்களின் தயாரிப்பில் தற்பொழுது தமிழ்நாட்டின் பல பகுதிகளில் FINDER படப்பிடிப்பு நடைபெற்று வருகின்றது, இறுதிக் கட்டத்தை அடைந்துள்ள இந்த தயாரிப்பில் படத்திற்கான மூன்று பாடல்களை எழுதுவதற்கு கவிப்பேரசு அவர்களையே தயாரிப்பாளர் ரஜீவ் சுப்பிரமணியம் அவர்களும் இயக்குனர் வினோத் ராஜேந்திரன் அவர்களும் விரும்பினார்கள்.

சில நாட்கள் நடைபெற்ற கலந்துரையாடல்களின் பின்னர் பாடல்களை எழுதுவதற்கு சம்மதம் தெரிவித்த கவிப்பேரரசு அவர்கள் FINDER படக்குழுவினரை நேற்று சென்னையில் தனது அலுவலகத்தில் சந்தித்தார்.

அந்த சந்திப்பில் FINDER இயக்குனர் வினோத் ராஜேந்திரன், இசையமைப்பாளர் சூரியபிரசாத் மற்றும்இணை இயக்குனர் சாம் சூரியா ஆகியோர் கவிப்பேரரசு அவர்களைச் சந்தித்தனர்.

சந்திப்பின்போது கவிப்பேரரசு FINDER படக் குழுவினரிடம் மிகவும் உற்சாகமாக உரையாடினார். அவர் தொடர்ந்து கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டபோது "புலம் பெயர் தமிழர்கள் தென்னிந்திய தமிழ்த் திரைப் படத்துறையில் முதலிடும்போது எமது ரசிகர்கள் அவர்கள் இலாபமடைய வேண்டும் என்று உற்சாகப்படுத்த வேண்டும். அதைப் போன்று புலம் பெயர் தமிழ் மக்களின் இந்த முயற்சிகளுக்கு என்றும் நான் துணையாக இருப்பேன். FINDER திரைப்படக்குழுவிற்கு எனது வாழ்த்துக்கள்" எனத் தெரிவித்தார்.

இங்கே காணப்படும் படங்கள் சந்திப்பின்போது எடுக்கப்பெற்றவையாகும்.

# நடிகர் விஜய் ஏழை மக்களுக்கு வழங்கிய மதிய உணவு



பட்டினியால் வாடும் மக்களைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஒவ்வொரு மே 28 ஆம் தேதி உலக பட்டினி தினம் அனுசரிக்கப்படுகிறது. இந்நிலையில், உலக பட்டினி தினத்தை முன்னிட்டு விஜய் மக்கள் இயக்கம் சார்பில் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஏழை மக்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது. இது தொடர்பாக விஜய் மக்கள் இயக்க நிர்வாகி கூறுகையில், "உலக பட்டினி தினத்தை முன்னிட்டு தளபதி விஜய் அவர்களின் சொல்லுக்கிணங்க தமிழ்நாட்டில் உள்ள 234 தொகுதிகளில், நகரம், ஒன்றியம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் மதிய உணவு வழங்கப்பட்டது, அதுமட்டுமில்லாமல் புதுச்சேரி, கேரளா, ஆந்திரா, கர்நாடகா, மகாராஷ்டிரா உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலும் மதிய உணவு வழங்கப்படுகிறது" என்று அவர் தெரிவித்தார்.


MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

ALL DEBT SOLUTIONS CR PLAN

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

**நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்**

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

**நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்**

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.




தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோண்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலம் சேவை உண்டு

**MISSISSAUGA OFFICE**
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

**SCAROBOROUGH OFFICE**
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

**HEAD OFFICE - TORONTO**
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

**RICHMONDHILL OFFICE**
10255 Yonge St. Suite # 204
Richmondhill

**NORTH YORK OFFICE**
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

உ
சிவமயம்

கனடா ஒஷாவா
ஸ்ரீ சொர்ணாகர்ஷண ஞானவைரவசுவாமி
திருக்கோவில்

# அஷ்டபந்தன

## நூதன மஹாகும்பாபிஷேக விஞ்ஞாபனம்



### இறை வணக்கம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை
பொன்னம்பலவன் ஞானகுரு வாணி
பதம் நாடு



### உலக மாதா பிதா துதி

வாகர்தாவிவசம்பிறுக்தௌவாகர்தப்
பிரதிபக்தயெ ஜகதப்பிதரௌ
வந்தெ பார்வதீ பரமேஸ்வரௌ

### ஞானவைரவர் துதி

பரமனைமதித்திடாப்பங்கயாசனன்
ஒருதலைகிள்ளியேயொழிந்தவானவர்
குருதியுமகந்தையுங் கொண்டுதண்டமுன் புரிதரு வடுகனைப்
போற்றிசெய்குவாம்

சகலவளங்களும் நிரம்பியதும் பல்லினமக்கள் நலமாகவும் ஒற்றுமையாகவும்
தத்தமது கலைகலாசாரங்களை பேணிப் பாதுகாத்து வாழும் நாடாகிய
கனடாநாட்டில் நமது சைவசமயத்தை பின்பற்றிவாழுவதற்கு ஏற்றவகையில்
ஸ்ரீ ஞானவைரவபெருமானின் பக்தர்கள் அனேகரின் வேண்டுகோளுக்கு இணங்க கனடாநாட்டில் முதன்முதலாக
ஸ்ரீ ஞானவைரவபெருமானை மூலமூர்த்தியாகப் பிரதிஷ்டை செய்யதிருவருள் கைகூடியுள்ளது.
காவல்தெய்வமான வைரவரை பாரம்பரியமாக வழிபட்டு வந்த அடியார்கள் பலரின் வேண்டுகோளிற்கு இணங்க
விநாயகர் முதலானபரிவார மூர்த்திகளுடன் கூடிய ஸ்ரீ சொர்ணாகர்ஷன ஞானவைரவபெருமானுக்கு புதிய
ஆலயத்தில் நிகழும் மங்களகரமான சோபகிருதுவருஷம் வைகாசிமாதம் 24 ஆம் நாள் (07-06-023) புதன்கிழமையும்
கிருஷ்ணசதுர்த்தி திதியும் உத்தராடநட்சத்திரமும் அமிர்தசித்த யோகமும் கூடிய சுபதினத்தில் அதிகாலை 05.00
மணிமுதல் 05.40 மணிக்குள் வரும் ரிஷப லக்கின (கோதூளிகா) சுபமுகூர்த்தத்தில் மஹா கும்பாபிஷேகம்
நிகழவிருப்பதினால் அடியார்கள் வந்து தரிசித்து அருள்பெற்று உய்யுமாறு வேண்டுகிறோம்.
சுபம்.

இவ்வண்ணம் சிவப்பணியில் நிற்கும்
ச. சர்வசொருபன் ச.ஈஸ்வரூபன்

**The Sanatana Dharma Society of Gnana Bhairavar**
450 Taunton Rd E, Oshawa, ON, L1K 1A8
Phone - 647-351-6757/ 416-520-2056 | www.gnanabhairavar.ca| Email: gnanabhairavar@outlook.com

உ
சிவமயம்

பிரதிஷ்டா குரு
சிவாகமஞானசாகரம் வாழ்நாள் சாதனையாளர்
டாக்டர் சிவஸ்ரீ நா.சோமாஸ்கந்த சிவாச்சாரியார்
(Founder Modern Hindu Culture Org)
(சிவாகம ஆலோசகர், ரொறன்ரோ ஸ்ரீ வரசித்திவிநாயகர் தேவஸ்தானம்)

ஆலய பிரதமகுரு
ஆலயபிரதமகுரு "சிவாச்சார்ய மாமணி" "சகலகலா வித்தகர்"
சிவஸ்ரீ வைத்தியநாத சர்வேஸ்வரகுருக்கள்

கும்பாபிஷேக சிவாச்சாரியார்கள்

| | | | |
|---|---|---|---|
| சாதக சிவாச்சார்யார் பிரதிஸ்டா மகோற்சவ பூஷணம் சிவாகம ரத்னா | சிவாகம ரத்தினம் சிவாகம பூஷணம் | சிவாச்சார்ய ரத்தினம் "சிவாச்சார்யமணி" | ஆலய உதவிக் குரு "சிவாச்சார்யமணி" |
| சிவஸ்ரீ கிருஷ்ண பங்குசக்குருக்கள் | சிவஸ்ரீ வைத்தியநாத உதயகுமாரகுருக்கள் | சிவஸ்ரீ பரமானந்த வாசுதேவக்குருக்கள் | சிவஸ்ரீ வைத்தியநாத ஜெனார்த்தன சர்மா |
| (பிரதமகுரு ஸ்ரீகனடா கந்தசாமி தேவஸ்தானம்) | (கல்கரி ஸ்ரீதேவி கருமாரி அம்மன் கோவில்) | (B.A.Hons) | |

கும்பாபிஷேகம் நனிசிறக்க நல்லாசி வழங்குபவர்கள்

நல்லை ஸ்ரீ திருஞான சம்பந்தர் ஆதீனமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிகஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் (2-ஆவது குருமஹா சன்னிதானம்)
மஹா கும்பாபிஷேக சர்வபோதகம் சர்வசாதக பூஷணம் சிவாகமக்கிரியாசிரோரத்தினம் ஸஹஸ்ர சந்திர தர்சனர் சிவஸ்ரீ சிவ நிர்த்தனராஜ சிவாச்சாரியார்
மஹா கும்பாபிஷேகத்திற்கு பூரண ஆதரவு நல்குவோர் ரொறன்ரோ கனடா கந்தசுவாமி கோவில் நிர்வாகசபையினர்
கனடாவில் உள்ள அனைத்து சிவாச்சார்யார்களும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்

### கிரியா நிகழ்வுகள் விபரம்

02-06-2023 வெள்ளி
காலை 05.00 மணி - விநாயகர் வழிபாடு, அனுக்ஞை முகூர்த்தக்கால்நாட்டல். தனபூஜை திரவிய விபாகம்வாஞ்சாகல்ப
கணபதி ஹோமம், மஹாலக்ஷ்மி ஹோமம், கிராம சாந்தி-பிரவேச பலி வாஸ்த்து சாந்தி சிற்பாசாரியார் உபசாரம்
சிலாவிக்கிரகங்களுக்கு கண்திறத்தல்-தான்யாதிவாசம் ஜலாதிவாசம்
மாலை 04.00 மணி - சயனாரோஹணம் தூபி, தீப, யந்திர, நவர்த்தின ஸ்தாபனம் - பிம்பஸ்தாபனம் அஷ்டபந்தனம்

03-06-2023 சனி
காலை 06.00 மணி - பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்துதல் ரட்சோக்ன ஹோமம், திசாஹோமம், நவக்கிரஹ யாகம்
மாலை 05.00 மணி - ஸ்ரீ ஸ்ரீனிவாசகப்பெருமாள் - ஸ்ரீ ஆஞ்ஜனேயர் யாகம் ஸ்ரீ சுதர்சன ஹோமம்

04-06-2023 ஞாயிறு
காலை 07.00 மணி பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்துதல் ஸ்ரீ தட்சிணா மூர்த்தி ஸ்ரீ நாகதம்பிரான் யாகம்
மாலை 05.00 மணி ஸ்ரீ சொர்ணாம்பிகா தேவி சிவசக்தி யாகம்

05-06-2023 திங்கள்
காலை 07.00 மணி - சூரிய பூஜை அக்னி ஸங்கிரஹணம் மிருத்ஸங்கிரஹணம் ஸ்ரீ மயிலைக் கந்தசுவாமி யாகம்
மாலை 04.00 மணி - அங்குரார்பணம் ரட்சாபந்தனம் கடஸ்தாபனம் யாகாரம்பம் ஹோமம் காலம்
1 தீபாராதனை வேத திருமுறை உபசாரங்கள்

06-06-2023 செவ்வாய்
காலை 07.00 மணி - விசேஷசந்தி யாகபூஜை ஹோமம் காலம் - 2 வேத திருமுறை உபசாரங்கள் பிம்பசுத்தி
கௌதுகபந்தனம் ஷடத்துவ நியாசம்
மாலை 04.00 மணி - திருவிளக்கு வழிபாடு யாக பூஜை ஹோமம் - காலம் 3 திரிகண்ட ஸ்பர்சாகுதி வேத திருமுறை உபசாரங்கள்

07-06-2023 புதன் அதிகாலை 04.00 மணி முதல்
யாக பூஜை ஹோமம் காலம் - 4 மஹாபூர்ணாகுதி தீபாராதனை வேத திருமுறை உபசாரங்கள்
அந்தர்பலி பஹிர்பலி கும்பங்கள் வீதிப்பிரதட்சிணம்ஸ்தூபி அபிஷேகம் மூலமூர்த்திகள் மஹாகும்பாபிஷேகம் தசதர்சனம்
காலைப்பூஜை தீபாராதனை வேத கீத நிர்த்தன அஞ்சலிகள். ஆலயங்களின் சீர்வரிசை பக்தர்களின் அர்ச்சனை மகேஸ்வரபூஜை
மாலை 04.00 மணி முதல் மஹா அபிஷேகம் மாலைப் பூசை ஸ்ரீ கனகவர்ஷினி சமேத
ஸ்ரீ சொர்ணாகர்ஷண பைரவர் சுவாமி திருக்கல்யாண உற்சவம்

### மண்டலாபிஷேக பூஜை

08-06-2023 வியாழன் முதல் 25-07-2023 செவ்வாய் வரை 48 நாட்கள் தினமும் மாலை 06 மணிக்கு நடைபெறும்
மண்டலாபிஷேக உபயங்களை ஏற்று நடத்த விரும்புவோர்
ஆலய பிரதம குரு சர்வேஸ்வரக்குருக்களுடன் (மோகன் குருக்கள்) தொடர்புகொள்ளவும்
தொ. பேசி இலக்கம் - 416-520-2056 / 647-351-6757

ஆலயம் விமானம் அமைப்பு தலைமை ஸ்தபதி "ஆலய நிர்மாண சிற்பாச்சார்ய திலகம்"
விஸ்வ பிரம்மஸ்ரீ செல்வராசா குணாளன் குழுவினர்கள்
(அதிபர் கனகாலய சிற்பக் கலைக்கூடம் - யாழ் - திருநெல்வேலி/கனடா)
பைரவர் வழிபாடு கைமேற்பலன்

அனைவரும் வருக சுபம் திருவருள் பெறுக


IN SUPPORT OF
SHN
SCARBOROUGH HEALTH NETWORK FOUNDATION
SCARBOROUGH HEALTH NETWORK FOUNDATION
மற்றும் தாயகத்திலுள்ள சிவபூமி அறக்கட்டளைக்குமான
நிதி சேர்க்கும் மாபெரும் இசைநிகழ்வு
IN SUPPORT OF SENIORS HOME JAFFNA
SIVAPOOMI TRUST
சிவபூமி அறக்கட்டளை
ASIYANS Quality Forever
Men's Waer Women's Waer, Kids Wear
Utilities, Gift & Jewelry Items
Fashion, Apparel & Garments
# 23, 3601 Lawrence Ave E,
Scarborough, ON M1G 1P5
Tel: 416-438-6568
NEW OCEAN SUPERMARKET
5835 Finch Ave E,
Scarborough, ON M1B 5K9
Tel: 416-292-0122
Sharon BUS LINES
Call: PRIYAN
Tel: 416-897-3569 / 416-906-7575
E:sharonbuslines@gmail.com
www.sharonbuslines.ca
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife/GTA Realty Inc.
5215 Finch Ave E #20, Toronto, ON. M1S 0C2
Tel: 416-321-6969
இராகாலயா நுண்கலைக் கூடம் வழங்கும்
கானமாருதம் 2023
இராகாலயா நுண்கலைக் கூடம்
2300 Pharmacy Ave, Scarborough, ON M1W 1H8
JUNE 17, 2023 SATURDAY 5:30 PM
நூற்றுக்கும் மேற்பட்ட இன்னிசைக்
கச்சேரிகளை மேடையேற்றி,
புகழ்பெற்ற இராகாலயா அதிபர்,
சங்கீத கலா வித்தகர்,
இன்னிசை வாணி,
ஸ்ரீமதி. லசந்தி இராஜ்குமார்
மற்றும் பிரபல இந்திய முன்னணி
இசைக்கலைஞர்களுக்கு பின்னணி
இசை வழங்கிய பிரபலமான
Mega Tuners இசைக்குழுவினர்களும்
இராகாலயா மாணவர்களும்
இணைந்து வழங்கும்
மிகப் பிரமாண்டமான
இன்னிசை, வாத்திய விருந்து.
Mega Tuners
அனைவரும் வாருங்கள்! ஆதரவு தாருங்கள் !!
motorcycle insurance
Allstate
சிறப்புற வாழ்த்துகள் கானமாருதம் 2023
டேனிற்சன் குடும்பத்தினர்
SPRING FLORIST
3011 Markham Road,
Scarborough, ON M1X 1L7
RAJAH SATKUNAM
Tel: 416-903-5069
Pasumai Market
பசுமை
2-2002 Middlefield Rd,
Markham, ON L3S 1Y5
Tel: 905-472-5525
ACTA
Travel with us with the lowest fare, We'll give you the best service and care...
Ideal
Call me for
ALL YOUR REAL ESTATE NEEDS
• BUYING / SELLING / INVESTING
• PRE-CONSTRUCTION
416.992.9243
ATHAVE PARAMESWARAN
HOMELIFE
Chapel Ridge
Funeral Home &
Cremation Centre
8911 Woodbine Ave,
Markham, ON L3R 5G1
Tel:905-305-8508
AKT
PREMIUM QUALITY WHOLESALE & RETAIL
416 291 2838
8-2002 Middlefield Rd, Markham, ON L3S 1Y5
HOMELIFE
YOUR INTEREST IS MY CAPITAL
THINKING OF SELLING YOUR HOME?
SRI SIVASUBRAMANIAM
416-884-3991
அனுமதிச் சீட்டுக்கள் : 50$ / 20$ மண்டப வாசலிலும் பெற்றுக் கொள்ளலாம்
தொடர்புகட்கு : 647.224.3546 / 905.943.9047



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள் 1050

## மாணிக்கப்பிள்ளையார் கோயில் அட்டன், மலையகம்

*“ வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்*
*நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு*
*துப்பார் திருமேனி தும்பிக்கையான் பாதம்*
*துப்பாமல் சார்வார் தமக்கு. ”*

இவ்வாறான அற்புதங்களோடு, ஆலயத்திருப்பணிகளும் சிறிது சிறிதாக நிறைவேறி, பாலஸ்தாபன கும்பாபிஷேகம் செய்ய நிர்ணயித்த நாளும் நெருங்கிக்கொண்டிருந்தது. மூலஸ்தான திருப்பணி, மற்றும் சிற்பங்களுக்கு வர்ணந் தீட்டும் பணி என யாவும் முடிவுற்றபின்னர், ஆலயத்தின் மகாகும்பாபிஷேகத்தை நடத்தி முடிப்பதற்கான ஏற்பாடுகளை ஆலய நிர்வாகம் மிக விரைவாச் செய்து வந்தது. தமிழ்நாடு திருவானைக்காலைச் சேர்ந்த பிரபல சிற்பியொருவரே ஆலய கோபுர சிற்பங்களைச் செதுக்கியவர். சிற்பியாருடன் கும்பாபிஷேகத்தை நடத்தி வைப்பதற்காக குருக்கள் ஒருவரையும் ஏற்பாடு செய்திருந்தனர். இவ்வேளையில் கும்பாபிஷேகத்தை நடத்திவைப்பதற்கு வரவேண்டிய குருக்களால் குறிப்பிட்ட நாளன்று சமூகமளிக்கமுடியாதென்ற செய்தி கிட்டியதும், கும்பாபிஷேகத்தை ஒத்திவைப்பதென ஆலய நிர்வாகம் தீர்மானித்தது. குறிப்பிட்ட தினத்தன்று கும்பாபிஷேகம் நடைபெறாவிட்டால் மீண்டும் இதே சுபநேரத்திற்காக இரண்டு வருடங்கள் பொறுத்திருக்க வேண்டும். இந்நிலையில் கும்பாபிஷேகத்திற்கு வரவேண்டிய சிற்பி விமானத்தில் புறப்பட்டு விட்டார் என்ற தொலைபேசி அழைப்புக் கிடைத்தது. சில மணிநேரத்தின் பின்னர் சிற்பிகள் அட்டன் ஆலயத்திற்கும் வந்து விட்டார். இவ்வேளையில் குருக்கள் ஒருவரும் யாரும் எதிர்பாராத விதமாக ஆலயத்திற்கு வந்திருந்தார்.

கும்பாபிஷேகத்தை ஒத்திவைக்காது நடத்துவதென ஆலயநிர்வாகத்தினர் தீர்மானித்தனர். இதனைத்தொடர்ந்து சகல ஆயத்தங்களும் நிறைவேற, தமிழ்நாட்டிலிருந்து வருகை தந்த ஸ்ரீலஸ்ரீ புரணானந்த சுவாமிகள் தலைமையில், மகாகும்பாபிஷேகம் மிக விமரிசையாக நிறைவேறியது. 1963 ஆம் ஆண்டு முதல் நிகழ்ந்த சகல திருப்பணிகளிலும், விக்னங்களைக் களைந்து அற்புதங்களைப் புரிந்த விநாயகப்பெருமானின் மகிமையை அவரின் பக்தர்கள் நன்குணர்வர். இவ்வாறு படிப்படியாகப் பல திருப்பணிகள் நிறைவேற்றப்பட்டபோதிலும், 1998 ஆம் ஆண்டு மேலும் பல திருப்பணிகள் நிறைவேற்றப்பட்டது. ஆலய திருப்பணிவேலைகள் யாவற்றையும் தமிழ்நாடு மாமல்லபுரம் சிற்பவல்லுனரான, ஆ. இரவிசங்கர் தலைமையின்கீழ், சுமார் இருபதுக்கும் மேற்பட்ட சிற்பாச்சாரியார்கள் செய்துமுடித்தனர்.

மூன்றுதள வானுயர்ந்த கோபுரத்துடன் கூடிய மூலஸ்தானம், அர்த்தமண்டபம், மகா மண்டபமும் மிக அழகாக அமைக்கப்பட்டது. உற்சவமூர்த்தியான பஞ்சமுக விநாயகருக்கு அழகிய கோயில், சபாமண்டபம், மூஷிகவாகனம், பலிபீடம், கொடித்தம்பம், நவக்கிரகஆலயம், சண்டேசுவரர் கோயில், மகாமண்டபம், மற்றும் வாயிலின் இருமருங்கிலும் கம்பீரமான தோற்றமுடைய துவாரபாலகர்கள் என்பன அமைக்கப்பட்டன. இத்திருப்பணிகள் நிறைவேறியதும் 1998 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11ஆம் நாள், சுபவேளையில் கொழும்பு சிவஸ்ரீ சர்வேஸ்வரக்குருக்கள் தலைமையில், பாலஸ்தாபன கிரியைகள் நிறைவேற்றப்பட்டு கும்பாபிஷேகமும் நிறைவேறியது.

இக்காலப்பகுதியிலேயே ஆலய மண்டபங்களின் மேலுள்ள கொங்கிரீட் கூரையைத் தாங்கி நிற்கும் கொங்கிரீட் தூண்கள், சிறந்த சிற்பவேலைப்பாடுகளுடன் அமைக்கப்பட்டது. இக் கோயிலின் சுற்றுப்பிரகாரத்தில் கஜலக்சுமி, சப்தகன்னியர்கள், சந்தானகோபாலர், லிங்கேஸ்வரர், சரஸ்வதி, இராஜஇராஜேஸ்வரி அம்பாள், வள்ளி தெய்வானை சமேத முருகப்பெருமான் ஆகிய பரிவாரமூர்த்திகளுக்கு அழகிய சிற்ப வேலைப்பாடுகளுடன் கோயில்களும் நிர்மாணிக்கப்பட்டது. அவற்றின் வாயில்கள் முன் காவல் தெய்வங்களாகிய துவாரபாலகி, துவாரபாலகர்கள் மிகவும் கம்பீரத் தோற்றத்துடன் அமைக்கப்பட்டனர். மாணிக்கப்பிள்ளையார் கோயிலின் சிறப்பம்சமாக விளங்குவது, சனீஸ்வர பகவானின் திருக்கோயிலாகும். சூரியன் முதலான ஒன்பது கிரகங்களில் அவரவர் ஜாதக அமைப்பின்படியும் பலன்களை அளிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட கிரகம் சனிபகவான். இவரை ஆயுட்காரகர் என்று சோதிடசாத்திரம் கூறுகின்றது. இவரே ஆரோக்கியகாரராகவும் விளங்குகின்றார். சனியைப்போலக் கொடுப்பவனும் இல்லை. கெடுப்பவனும் இல்லை என்ற கூற்று வழக்கத்திலே காணப்படுகின்றது. இவர் சர்வ வல்லமை படைத்த சர்வேஸ்வரனிடம் தணியாத பக்திகொண்டு, சனீஸ்வரன் என்ற பட்டத்தைப் பெற்றவர். நீதிக்குத் தேவரான சனீஸ்வரபகவானைப் போற்றி வணங்கினால், சகல நன்மையும் கிடைக்கும் என்பதைப் புராண வரலாறுகள் விளக்கியுள்ளன. இத்தகைய சனீஸ்வர பகவானுக்கு அழகிய கோபுரத்துடன் கூடிய தனியான கோவிலொன்று, மாணிக்கப்பிள்ளையார் கோயிலில் அமைக்கப்பட்டிருப்பது சிறப்பம்சமாகும்.

மிக அழகிய நடராஜர் மண்டபம், வசந்த மண்டபம் ஆகியனவும் இக்கோவிலில் அமைக்கப்பட்டுள்ளது. கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்பதற்கிணங்க 108 படிகளைக் கொண்ட ஆலயத்தின் பிரதான நுழைவாயிலில் அழகிய கோபுரம் காட்சி தருகின்றது. அதன் இருமருங்கிலும் கம்பீரமாகக் காட்சி தரும் துவாரபாலகர்கள் இருவர் காணப்படுகின்றனர். அருகிலேயே வழிப்பிள்ளையார் ஆலயமும் அமைந்துள்ளது இவ்வாலயத்திலேபுனர்நிர்மாணப்பணிகள் பல அவ்வப்போதுநிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும் பல திருப்பணிகளும், சமூகப்பணிகளும் இவ்வாலயத்தினால் தொடர்ந்தும் நிறைவேற்றப்பட்டு வருகின்றது. இவ்வாறானநிலையில், அருளும், எழிலும் மிக்க ஆலயமாக அட்டன் மாணிக்கப் பிள்ளையார் ஆலயம் திகழ்கின்றது. மிகக் குறுகிய காலப்பகுதியில் இவ்வாலயம் இத்தகைய சிறப்புக்களைப்பெற, மலையுச்சியில் அமர்ந்து, ஈழத்தின் உச்சிப்பிள்ளையாராக விளங்கி அருள்புரியும், மாணிக்கப்பிள்ளையாரின் கருணையேயன்றி வேறேதுமில்லை எனப் பக்தர்கள் மனமுருகிக் கூறுகின்றனர்.

*“ பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை*
*நாலும் கலந்துனக்கு நான் தருவேன் கோலம்செய்*
*துங்கக் கரிமுகத்தத் தூமணியே நீயெனக்குச்*
*சுங்கத் தமிழ் மூன்றுந் தா. ”*

**- வளரும்...**



# காசு மேல் காசு கேட்டு வழக்கு மேல் வழக்கு போடும் மோகன் ஷான் அடியோடு மண்டியிட்டார்

## மலேசிய இந்து சங்கத்தில் சலசலப்பும் சச்சரவும் இத்துடன் முற்றுபெறட்டும் சிவநெறிச் செல்வன் தங்க கணேசன் மீண்டும் அபார வெற்றி



நக்கீரன்



**ஜோ**கூர் பாரு, மே 28:

மலேசிய இந்து சங்கத் தேசியத் தலைவராக "சிவநெறிச் செல்வர்" தங்க கணேசன், தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளார் அதிரடி படைத்துள்ளார்.

இந்து சங்கத்தின் 46-ஆவது தேசிய ஆண்டுக் கூட்டம் நாட்டின் தென்புலத்தில், ஜோகூர் பாரு, தாமான் புக்கிட் இண்டா-2-இல் இன்று நடைபெற்றது. இதில், தங்க கணேசனை ஆதரித்து களம் கண்ட அழகேந்திரன் சிவசாமி (1,195 வாக்குகள்), எஸ். ஜெயபாலன் (1,185வாக்குகள்), அ. கிருஷ்ணன் (1,178), இந்து சங்க பொதுச் செயலர் மாணிக்கவாசகம் (1,192), நாகேசுவரராவ் (1,165), காயத்ரி (1,161), ஆர். இராஜேந்திரன் வி.ராஜு (1,147), சிவம் பழனிசாமி (1,135), விஜய பாஸ்கர் (1,141) ஆகிய ஒன்பது பேரும் அபார வெற்றி பெற்று தங்க கணேசன் கரங்களை வலுப்படுத்தி உள்ளனர்.

இதன்மூலம், கடந்த ஓராண்டு காலமாக இந்து சங்க தலைமையகத்திலும் ஒருசில மாநிலப் பேரவைகளின் நிருவாக மட்டத்திலும் நிலவிவந்த தலைமைத்துவ சிக்கலும் ஊசலாட்டமும் முற்றுபெறும் என்று மலேசிய இந்து சமுதாயமும் சமுதாய ஆர்வலர்களும் எதிர்பார்க்கின்றனர்.

கடந்த 45-ஆவது ஆண்டுக் கூட்டத்தில் டத்தோ மோகன் ஷான் சந்தித்த தோல்வியைவிட மோசமான தோல்வியை இந்த முறை இந்து சங்க உறுப்பினர்கள் அளித்துள்ளனர்.

தான் தலைவர் பதவியை இழந்ததை இதுவரை சீரணித்துக் கொள்ள முடியாத மோகன் ஷாண், காலம் உள்ளவரை தான் மட்டுமே இந்து சங்கத் தலைவராக நீடிக்க வேண்டும் என்று கருதுகிறார் போலும்.

கடந்த ஓராண்டு காலமாகவே வழக்கு மேல் வழக்கைப் போட்டு, தங்க கணேசன் ஆக்ககரமாக செயல்பட முடியாமலும் சமய-சமூகப் பணியை ஆற்ற விடாமலும் அவரை முடக்கும் விதமாக வழக்குகளைத் தொடர்ந்து வருகிறார்.

தேர்தலில் பகிரங்கமாக தோற்ற பின்னும் நானே இன்னமும் தலைவர் என்று ஒரு வழக்கு, இந்து சங்கம் தனக்கு ஊக்கத் தொகையையும் போக்குவரவு செலவுத்தொகையையும் கொடுக்க வேண்டும் என்று இன்னொரு வழக்கும் மேலும் கடன் தொகையைத் திருப்பித் தரவேண்டும் அச்சக செலவுத் தொகையைக் கொடுக்க வேண்டும் என்றெல்லாம் வழக்கு மன்னனாக உருவெடுத்து, இந்து சங்கத்தை நீதிமன்ற வாசலிலேயே நிற்கும்படி செய்ததுடன், இந்து சங்க நிதியை மலேசியவாழ் இந்து மக்களுக்கான சமய-சமுதாயப் பணிகளுக்காக செலவழிப்பதற்குப் பதிலாக, வழக்கு செலவிலேயே அழிக்கும்படியான நெருக்கடியை தெரிந்தோ தெரியாமலோ மோகன்





செய்து வருகிறார்.

ஒரு பொது அமைப்பில் 13 ஆண்டு காலம் தலைமைப் பதவியை அலங்கரித்து, ஒரு கட்டத்தில் தோல்வி அடைந்துவிட்டால், மற்றவர்களாக இருந்தால் அந்தமட்டில் கண்ணியமாக ஒதுங்கிக் கொள்வர் அல்லது மக்களும் சமயமும்தான் முக்கியம் என்று கருதி ஒருங்கிணைந்து செயல்பட முன்வருவர். இந்த இரண்டும் இல்லாமல், புதிய நிருவாகம் நிம்மதியாக செயல்பட முடியாமல் அதற்கு இடையூறு செவதுடன், காசு மேல் காசு கேட்டு, வழக்கு மேல் வழக்கு போடும் மோகன் ஷான், சமுதாயம் தன்னைப் பற்றி என்ன நினைக்கும்? பொதுவான மனிதர்களும் நடுநிலையான கல்வியாளர்கள், சமூக ஆரவலர்கள் உள்ளிட்டவர்கள் தன்னைப் எப்படி எடைபோடுவார்கள் என்ற எண்ணெமெல்லாம் மோகன் ஷானுக்கு அறவே இல்லைபோலும்!

*இதைத் தான் ஆசை வெட்கம் அறியாது* என்பார்களோ?






எது எப்படியோ, இன்றைய ஆண்டுக் கூட்டத்தில் மத்திய செயலவைக்கு புதிதாக தேர்வுபெற்ற ஒன்பது பேராளர்களை உள்ளடக்கி, மண்டப அரங்கத்திலேயே 2023-24 தவணைக்கான முதல் மத்தியப் பேரவைக் கூட்டம் நடைபெறுகிறது. இதில், புதிய நிருவாகக் குழுவினர் தேர்ந்தெடுக்கப் படும் அதேவேளை, சிவநெறிச் செல்வர் தங்க கணேசன், 27 பேர் கொண்ட மத்திய பேரவையில் ஒருமனதான ஆதரவைப் பெற்று, மலேசிய இந்து சங்க தேசியத் தலைவராக தன்னை வலுவாக நிலைநிறுத்திக் கொள்வார் என்றும் தெரிகிறது.

தங்க கணேசன் அணியைச் சேர்ந்த அனைவரும் ஆயிரத்து நாற்றுக்கு மேற்பட்டும் ஆயிரத்து இருநூற்றுக்கு நெருக்கமாகவும் வாக்குகளைப் பெற்று அபார வெற்றிபெற்றுள்ள வேளையில், தங்க கணேசன் அணியைச் சேர்ந்த அணைவரும் வெறும் அறுநூற்று சொச்சம் என்ற அளவில் மட்டும் பெற்று தோல்வியடைந்தனர்.

மோகன் ஷான் அணி சார்ந்து போட்டியிட்ட பாலகிருஷ்ணன் (633 வாக்குகள்), வி. என் ராதா (661), டத்தோ வீரன் (653), டத்தோ மோகன் ஷான் (671), பத்மா தேவி (661), கே.எல். ரவி (624), ஏ. ரவிச்சந்திரன் (645), ஏ. சுகுமாறன் (636), பொன். விக்ரமன் (616) ஆகிய ஒன்பது பேரும் பெரும்பான்மை வாக்கு வேறுபாட்டில் தோல்வி அடைந்தனர்.

இந்தக் கூட்டத்தை மஇகா தேசிய துணைத் தலைவரும் தாப்பா நாடாளுமன்ற உறுப்பினருமான டத்தோஸ்ரீ மு. சரவணன் தொடக்கிவைத்து உரையாற்றினார்.

**நக்கீரன்** - Nakkeeran 013-244 36 24

# வாழ்நாள் சாதனையாளர் விருது வென்ற கமல்



இந்த ஆண்டுக்கான சர்வதேச இந்திய திரைப்பட அகாடமி விருது வழங்கும் விழா அபுதாபியில் நடைபெற்றது.

இந்த விழாவில் இந்திய திரையுலகை சேர்ந்த முன்னணி நடிகர், நடிகைகள் மற்றும் பல்வேறு திரை பிரபலங்கள் பங்கேற்றனர். இந்த பிரமாண்ட விழாவில், தமிழ் சினிமாவில் 60 ஆண்டுகளுக்கும் மேலாக தனது அசாத்திய திறமையால் மக்களை மகிழ்வித்து வரும் நடிகர் கமல்ஹாசனின் சாதனையை பாராட்டும் விதமாக சர்வதேச இந்திய திரைப்பட அகாடமி, நடிகர் கமலுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கவுரவித்துள்ளது.

நடிகர் கமலுக்கு இந்த விருதை இசையமைப்பாளர் ஏ.ஆர். ரகுமான் வழங்கினார். கமல் விருதை பெற்றவுடன் அரங்கத்தில் இருந்த நடிகர் சல்மான் கான் உட்பட அனைவரும் எழுந்து நின்று கரகோஷம் எழுப்பி ஆரவாரப்படுத்தினர்.

# இவ்வார ராசிபலன்

**02-06-2023 வெள்ளி தொடக்கம் 09-06-2023 வியாழன் வரையும்**

**மேஷம்:** மனதில் மகிழ்ச்சி பெருகும் வாரம். தனவரவு பெருகும். புதிய நட்பை தவிர்க்கவும். புத்திரர் வழியில் கவலை ஏற்படும். போட்டிகள் நீடிக்கும். புதிய முதலீடு தவிர்க்கவும். இனிப்பான செய்திகள் வரும். ஏற்றமான தருணம் அமையும். நினைத்த காரியம் நடக்கும். காதல் விவகாரத்தில் நன்மை பயக்கும். நினைத்த தொழில் அமையும். மற்றவர்கள் ஆலோசனை தவிர்க்கவும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். சோதனைகள் நீங்கும். விளையாட்டுச் சிந்தனைகள் மேலோங்கும். செலவுகளை குறைத்துக் கொள்வது நல்லது. பொறுமையை கையாள வேண்டும். உறவினரால் பாதகம் உண்டு. திடீர் கடன் உருவாகும். உத்தியோக அலைச்சல் உண்டு. காரிய தாமதம் ஏற்படும். இடமாற்றம் ஏற்படும். திடீர் கடன் உருவாகும். மனைவி உடல்நலம் பாதிக்கும். பொறுப்புக்கள் கூடும். பொருளாதாரம் சிறப்பு தரும். பிள்ளைகளால் மதிப்பு உயரும். பிரயாணம் ஏற்படும். பிணிகள் அகலும். உணவு விடுதி லாபம் தரும். புதிய வாய்ப்பு தேடி வரும். அரசுவழி ஆதாயம் உண்டு. மாணவர்கள் பாராட்டு பெறுவர். சந்தோசம் பெருகும். ஆபரணச் சேர்க்கையுண்டு. விரும்பிய பொருள் சேரும். வாழ்வில் வளம் கூடும். முடிவுகள் சாதகமாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பல்லவ கணபதி, அதிர்ஷ்ட எண்: 7,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: பொன்நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,J

**ரிஷபம்:** பெற்றோர்களால் பாராட்டு பெறும் வாரம். வெகுமதி கூடும். உணவு பிரியம் அதிகரிக்கும். ஆதலால் கவனம் தேவை. மனநிம்மதி தரும். பணவரவு தாமதமாகும். உடல்சோர்வு ஏற்படும். புதிய தொழில் அமையும். இனிய தகவல் வந்து சேரும். நண்பர் சந்திப்பு கிட்டும். இனிய காதல் உருவாகும். வேலையில் இடமாற்றம் ஏற்படும். எளிமையை விரும்புவீர்கள். வேலை பளு அதிகரிக்கும். புகழ் கூடும். எதிர்பார்ப்புக்கள் குறையும். இன்னல்கள் அகலும். குடும்ப அன்யோன்யம் அதிகமாகும். பிள்ளைகளின் கல்வி மேம்படும். தோல்விகள் விலகும். தொல்லைகள் அகலும். கட்டிடத் தொழில் லாபம் தரும். பெரிய மனிதர்களை சந்திப்பீர்கள். தன்னம்பிக்கை துளிர்விடும். சிறிய இடையூறு ஏற்படும். வாகன அபிவிருத்தி உண்டு. தொழிலில் போட்டிகள் மறையும். மனை வாங்கும் யோகம் உண்டு. ஸ்தல பயணம் ஏற்படும். மன உற்சாகம் கூடும். உடல் உபாதை தோன்றி மறையும். ஆயுள்விருத்தி அதிகரிக்கும். அன்பினால் எதையும் வெல்வீர். விருந்தினர் வருகை உண்டு. மாணவர்கள் கல்வியில் கவனம் தேவை. வீண் பழி அகலும். வாய்பேச்சில் நிதானம் தேவை. நோயிலிருந்து பூரண குணமடைவீர்கள். சேய் நலம் கூடும். சண்டைகள் முற்றிலும் அகன்று விடும்.
வழிபட வேண்டிய தெய்வம்: வான் தேவதை, அதிர்ஷ்டஎண்: 5,4,2,3
அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,P

**மிதுனம்:** உதவிகள் கிடைக்கும் வாரம். குதூகலம் அதிகமாகும். குழப்பங்கள் அகன்று போகும். செலவுகள் குறையும். இனிய செய்தியால் மனம் மகிழும். செல்வாக்கு உயரும். புகழும், பொருளும் பெருகும். கனவு தொல்லை உண்டு. கைப்பொருள் களவுப்போகும். உறவினரால் உற்சாகம் கூடும். பூர்வீகச் சொத்து சேரும். பழிச்சொல்லில் இருந்து விடுபடுவீர்கள். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். திருப்தி ஏற்படும். விவசாயம் லாபம் தரும். விவாத முயற்சி வெற்றி தரும். நிதி நிலைமை சீராகும். குடும்ப ஒற்றுமைக் கூடும். சுபச்செய்தி கூடி வரும். தொழில் வளர்ச்சி கூடும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். கலைஞர்களுக்கு வாய்ப்புகள் கூடும். ஏஜென்ஸி தொழில் ஏற்றம் தரும். வாழ்வில் முன்னேற்ற நிலையை அடைவீர். திருமண முடிவுகள் நல்லதாக அமையும். எதிர்மறை எண்ணம் உருவாகும். நினைத்த காரியங்கள் கைகூடும். மனதில் சஞ்சலம் ஏற்படும். வாகனத்தில் கவனம் தேவை. தொழிலில் லாபம் உண்டு. கடன் கொடுப்பவராக இருப்பீர்கள். உங்களால் நிறைய ஆத்மாக்கள் வாழ வேண்டி வரும். சமுதாய பிரச்சனைகள் அகலும். வீட்டில் சந்தோஷம் நிலவும். மனஅமைதி உண்டாகும். மனதில் உள்ள பயம் நீங்கிவிடும். வாய்ப்புகள் தேடி வரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: மஹாகணபதி, அதிர்ஷ்ட எண்: 9,7,5,3
அதிர்ஷ்ட நிறம்: அரக்குநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,K

**கடகம்:** சுப விரயம் ஏற்படும் வாரம். காரிய வெற்றி உண்டு. பெரியோர்களின் ஆலோசனை பலன் தரும். நட்பு பெருகும். ஆண்கள் அதிகாரம் உயரும். ஆடம்பரத்தை விரும்புவீர்கள். பணவரவு உண்டு. வராத கடன் வந்து சேரும். நன்மைகள் நாடி வரும். மாற்று இனத்தவர் வாழ்வு கிட்டும். மதிப்பு உயரும். மகான்களின் சந்திப்பு கிட்டும். பெற்றோர் உடல்நலம் கூடும். மாங்கல்ய நமஸ்காரம் மனோதைரியம் கொடுக்கும். எச்சரிக்கையோடு செயல்பட வேண்டும். கணவன், மனைவி கௌரவம் உயரும். மேலதிகாரியின் பாராட்டுக் கிட்டும். சுறுசுறுப்பு அதிகரிக்கும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். உத்தியோகத்தில் உற்சாகம் கூடும். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். கலைத்தொழில் திருப்பத்தை ஏற்படுத்தும். ஷேர் மார்க்கெட் லாபம் தரும். கட்டிட தொழில் கவனம் தேவை. கடன் வாங்க நேரிடும். தாயின் பிரார்த்தனையால் தகுதிகள் உயரும். கற்பனை வளம் அதிகரிக்கும். கௌரவம் உயரும். கடன் தொல்லைத் தீரும். பிள்ளைகளால் பெருமை சேரும். பகையாளிகளின் நிலை மாறும். பெண்வழிப் பிரச்சனை முடிவுக்கு வரும். முன்னேற்றம் அதிகரிக்கும். புத்தி சாதுர்யம் கூடும். பெற்றோரின் பாராட்டு கிட்டும். வினோதமான எண்ணம் விலகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: காமாட்சி அம்மன், அதிர்ஷ்ட எண்: 1,3,9,5
அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,G

**சிம்மம்:** புண்ணிய ஸ்தலம் செல்லும் வாய்ப்பு உருவாகும் வாரம். பழைய நண்பரால் பணவரவு உண்டு. சகோதர வகையில் சச்சரவு ஏற்படும். சட்டம் சாதகமாகும். நட்டம் இல்லாத நன்மை ஏற்படும். பட்டம் பதவி வந்து சேரும். எதார்த்தமாக செயல்படுவீர்கள். கலைத்தொழில் கவனம் தேவை. மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். மனை வாங்கும் சிந்தனை உதயமாகும். பாதகமான சூழ்நிலைகள் அகலும். பக்குவமான பேச்சு பயன் தரும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். நீண்ட நாளைய பிரச்சனை முடிவுக்கு வரும். அயல்நாட்டுப் பயணம் உண்டு. தொழில் முதலீடு லாபம் தரும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். புதிய நண்பர்களால் தகுதிகள் மேம்படும். வரவு திருப்தி தரும். காரிய தாமதம் ஏற்படும். தாய்வழி உறவில் கவனம் தேவை. அணிகலன் சேரும். இரும்புத்தொழில் ஏற்றம் தரும். விளையாட்டுத் துறை லாபம் தரும். வீண் வம்பு உருவாகும். எதிர்ப்புகள் குறையும். விரயங்கள் அதிகமாகும்.



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068 / 9940431377


பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டு. மனச் சஞ்சலம் ஏற்படும். பகையாளியிடம் எச்சரிக்கை தேவை. பழையக்கடன் பஞ்சாயத்து மூலம் தீர்வுக்கு வரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமாள்,அதிர்ஷ்ட எண்: 2,9,8,6
அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,F

**கன்னி:** மங்கையர் சிலர்க்கு மகப்பேறு கிடைக்கும் வாரம். சந்தோஷம் அலைமோதும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். வெளிவட்டாரப் பழக்கம் அதிகமாகும். வேலையாட்களிடம் கவனம் தேவை. வெளிநாட்டுப் பயணம் உருவாகும். மாற்று இனத்தவரால் ஆறுதல் அதிகரிக்கும். சாதனையான எண்ணங்கள் உதயமாகும். எதிர்கால எண்ணம் நிறைவேறும். பூமி வாங்கும் யோகம் உண்டு. நண்பர்களால் நன்மை உண்டு. கட்டிடத் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு கிடைக்கும். எள் தானம் ஏற்றம் தரும். உள்ளம் மகிழும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். உத்தியோகத்தில் பாராட்டுக் கிட்டும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். பிள்ளைகளின் கல்விச்செலவு அதிகரிக்கும். உறவினர் வருகை உற்சாகம் தரும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். தொல்லைகள் ஒழியும். நினைத்த காரியம் நிறைவேறும். சுபச்செய்தி வரும். கன்னிப் பெண்களுக்கு திருமணத் தகவல் வரும். வியாபாரிகளுக்கு லாபம் அதிகரிக்கும். பிரார்த்தனையால் பலன் உண்டு. நலம் விளையும் வாரமாகும். கால்நடைகளால் பலன் உண்டு. ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். குடும்ப ஒற்றுமை பலப்படும். உதவிகள் கிடைக்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீரங்கநாதர், அதிர்ஷ்ட எண்: 6,9,8,1
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,P

**துலாம்:** பிள்ளைகளால் செலவு அதிகரிக்கும் வாரம். தொழில் லாபம் பெருகும். பணியில் கண்டிப்பு அவசியம். பழைய நண்பரை சந்திக்க நேரிடும். புதிய சிந்தனை உருவாகும். வேலை பளு அதிகரிக்கும். உற்சாகம் களைகட்டும். நல்லவர் நட்பு கிட்டும். உடல்நலத்தில் அக்கறை தேவை. தோற்றப்பொலிவு கூடும். பணத்தட்டுப்பாடு ஏற்படும். மனக்கட்டுப்பாடு அவசியம். மனைவியால் சச்சரவு ஏற்படும். அரசு வாய்ப்பு தடைப்படும். செயல்திறமை அதிகரிக்கும். ஆடை, அணிகலன் சேரும். சகோதர உதவி கிட்டும். பேச்சுத்திறமை அதிகரிக்கும். ஏற்றுமதி தொழிலில் கவனம் தேவை. பொறியியல் துறை லாபம் தரும். மாணவர்கள் திறமை பளிச்சிடும். திருமண வாய்ப்புகள் கூடி வரும். மனஅமைதி குறையும். பொருளாதார நிலை உயரும். வழக்குகள் சாதகமாகும். வாகன மாற்றம் உண்டு. பருப்பு தானம் பாவம் போக்கும். வாழ்த்துச் செய்திகள் வரும். காதலர்கள் தம்பதியாவார்கள். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். இடமாற்றம் நன்மை தரும். கலையில் ஆர்வம் ஏற்படும். குடும்பத்தினரின் அனுசரிப்பு கிட்டும். மதிப்பும், மரியாதையும் உயரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ பொன்காளியம்மன், அதிர்ஷ்ட எண்: 8,9,4,3
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,E

**விருச்சிகம்:** தடைகள் விலகும் வாரம். வாகனங்களில் முதலீடு உண்டாகும். குடும்பத்தில் அமைதி நிலவும். சொந்த பந்தங்களால் உதவி உண்டு. சேமிப்பு வளரும். மனநிறைவு உண்டு. தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு உண்டு. கலைஞர்களுக்கு புகழ் கூடும். மாணவர்களுக்கு சாதகமான காலம். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். வியாபாரம் வெற்றி தரும். உத்தியோகத்தில் உயர்வு உண்டு. வீண் பேச்சுக்கள் தவிர்ப்பது நல்லது. சொத்துக்கள் சேரும். தன லாபம் பெருகும். மனக்குழப்பம் தீரும். பொருளாதார நிலை உயரும். உடல்நலனில் அக்கறை தேவை. தொட்ட காரியம் ஜெயமாகும். செயல்பாட்டில் தீவிரம் கூடும். உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். புதிய முதலீடுகளில் கவனம் தேவை. ஞாபகத்திறன் அதிகரிக்கும். சுபகாரியம் கைகூடும். பிரியமானவர்களை சந்திப்பீர்கள். ஆபரணச் சேர்க்கையுண்டு. பறவைகளுக்கு உணவளித்து பலன் பெறலாம். மதிநுட்பம் தேவை. நியாயம் ஜெயிக்கப் போராடுவீர். எதிர்பார்த்த பதவி உயர்வு கிட்டும். மாணவர்களுக்கு மகிழ்ச்சி கூடும். புதிய கடன் வாங்க நேரிடும். பிள்ளைகளால் தொல்லைகள் அகலும். மேலதிகாரியின் பாராட்டுக்கள் கிட்டும். சாதனை புரியும் நாளாக அமையும். சொத்து சேர்க்கையுண்டு.
வழிபட வேண்டிய தெய்வம்: பத்ரகாளியம்மன், அதிர்ஷ்ட எண்: 5,9,7,3
அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,M

**தனுசு:** தொழில் ஒப்பந்தம் குவியும் வாரம். அரசியல்வாதிகளுக்கு அற்புதமான காலம். வழக்குகள் சாதகமாகும். வரவுகள் பெருகும். அன்னிய தேசப்பயணம் உண்டு. காதலர் ஒற்றுமை அதிகரிக்கும். கடன் வாங்க நேரிடும். சிக்கனம் தேவை. விரக்திகள் மறையும். வீடு, மனை யோகம் உண்டு. வெகுமதி கூடும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். ஊக்கம் அதிகரிக்கும். வியாபாரத்தில் கவனம் தேவை. மற்றவர்களால் அனுகூலம் உண்டு. உடல் ஆரோக்கியம் கூடும். வியாபாரம் லாபம் தரும். உறவினர்களால் உதவி கிட்டும். உயர்கல்வி ஆர்வம் ஏற்படும். மாணவர்களுக்கு உற்சாகம் கூடும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மங்கள செய்தி வரும். வார்த்தைகளில் நிதானம் தேவை. சாதகமான வாய்ப்பு உருவாகும். இல்லத்தில் ஆனந்தம் குடிக்கொள்ளும். எதிரிகள் விலகி செல்வார்கள். ஏற்றம் தரும் நாளாக அமையும். பிள்ளைகளால் பெருமை சேரும். பயணத்தால் லாபம் உண்டு. கூட்டுத்தொழில் கவனம் தேவை. குடும்ப கௌரவம் உயரும். கமிஷன் தொழில் லாபம் தரும். பொருள் சேதம் தரும். கல்வி மேன்மை தரும். இனிய எண்ணம் உதயமாகும். பழைய கடன் ஒழியும். வாழ்க்கை வசதி பெருகும். அந்தஸ்து அதிகமாகும். நினைத்தது நிறைவேறும்.
வழிபட வேண்டிய தெய்வம்: கர்ப்பரக்ஷாம்பிகை, அதிர்ஷ்ட எண்: 7,9,1,5
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,J

(தொடர்ச்சி 30 பக்கம்)

மலேசிய மடல்

# வெறுங்கோல் செங்கோல்மூலம் பச்சை மோடித்தனம்

## தமிழர்-தமிழ் மொழி-தமிழ் நிலத்திற்கு தொடர் வஞ்சகம்: மோடி அமைச்சரவையில் 9 ஆண்டுகளாக தமிழ் நாட்டு தமிழர் இல்லை



**கோ**லாலம்பூர், மே 29:

கனியன் பூங்குன்றனார், திருவள்ளுவர், ஔவை உள்ளிட்ட பழந்தமிழ் இலக்கிய ஆளுமைகளை வாய்ப்பு கிடைக்கும்பொழுதெல்லாம் திருடப் பார்த்து ஓய்ந்துவிட்ட நிலையில், தமிழர்தம் சித்த மருத்துவத்துடன் இணைந்த மூச்சுப் பயிற்சியை மட்டும் "யோகா" என்ற பெயரில் மொத்தமாக அபகரித்துவிட்டார் மோடி!

இப்பொழுது, அடுத்த ஆண்டில் நடைபெற இருக்கும் நாடாளுமன்ற பொது தேர்தலை இலக்கு வைத்து, தமிழ் நாட்டில் ஓரிரு இடங்களிலாவது வென்றுவிட வேண்டும் என்ற அரசியல் தகிடுதத்தத்தை உள்ளீடாக வைத்து, தமிழரை வசப்படுத்தும் நோக்கில், சீந்துவார் இன்றி எங்கோக் கிடந்த வெறுங்கோலான செங்கோலை எடுத்துவந்து, கழுவி எடுத்து, நகாசு வேலை பார்த்து, அதை பளபளப்பாக்கி அதை நெடுஞ்சான் கிடையாக வணங்கி இன்னொரு அரசியல் நகாசுவேலையைப் புரிந்திருக்கிறார் மோடி.

காந்தியைக் கொன்ற ராஷ்டிரீய சுயசேவை சங்கத்திற்கு (ஆர்.எஸ்.எஸ்.) அடித்தளமிட்ட சாவர்க்கரின் பிறந்த நாளில்தான், செங்கோல் நாடகம் அரங்கேற்றப்பட்டுள்ளது. இந்த இயக்கத்தின் நூற்றாண்டு விழா, அடுத்த ஆண்டில் வருவதால், எப்படியாவது அதிக இடங்களை வென்று இந்தியாவில் பார்ப்பன ஆதிக்கத்தை முழுதாக நிலைநிறுத்த வேண்டும் தமிழ் நாட்டிலும் வெற்றிக் கொடி நாட்ட வேண்டும் என்ற பார்ப்பனியக் குறிக்கோளை நிலைநாட்டவே, பார்ப்பனியத்தின் அடிமையும் ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தில் புடம்பெற்றவருமான மோடி தலைகீழாக நின்று தண்ணீர் குடித்துப் பார்க்கிறார்.

2014-இல் முதன் முதலில் நாடாளுமன்றக் கட்டடத்திற்குள் நுழைந்த பொழுது, நாடாளுமன்ற படிக்கட்டுகளில் தலைசாய்த்து வணங்கினார். ஆனால், இவரைப் போன்று நாடாளுமன்றத்தை அவமதித்த பிரதமர் ஒருவருமில்லை.

நாடாளுமன்றத்தில் விவாதமின்றியே சட்டத்தை நிறைவேற்றும் அரசியல் படுகொலையை கூச்சமின்றி நிறைவேற்றிவரும் மோடி, இப்பொழுது செங்கோலை கட்டி அழுவதுடன் சோழர் பெருமை குறித்தும் பேசி வருகிறார்.

அரச நிருவாகத்திலும் ஆன்மிக எல்லையிலும் பார்ப்பனர்களை மட்டுப்படுத்த விரும்பிய இளஞ்சிங்கமான ஆதித்த கரிகால சோழனை நான்கு பார்ப்பனர்கள் வஞ்சகமாகக் கொன்ற சதியை வகையாக மறைத்துக் கொண்டு, சோழர் பெருமையை கொண்டாடுவதாகக் காட்டிக் கொள்கின்றனர்.



பொதுவாக பார்ப்பனர்கள், நமக்கு எதிராக நம்மையே ஏவிவிட்டு காரியம் சாதிப்பார்கள் எல்லை மீறினால் அவர்களே களத்தில் குதிப்பார்கள். அதுவரை, அடிமைகளை விட்டு, தங்களுக்கான காரியத்தை கச்சிதமாக நிறைவேற்றி வருவார்கள். அத்தகைய அடிமை ஊழியத்தைதான் மோடி, கணக்காக ஆற்றி வருகிறார்.


மன்னராட்சி முதல் இன்றைய மக்களாட்சி காலம் வரை, அரசியல் அடிமைகளுக்கு வரலாற்றில் என்றுமே இடம் இருந்ததில்லை இருக்கப் போவதுமில்லை.

அலாவுதீன் கில்ஜிக்கு வாய்த்த மாலிக் காபூர், சோனியா காந்தி அடையாளங்-கண்ட மன் மோகன் சிங், ஜெயலலிதா-சசிகலா காலில் விழுந்துகிடந்த ஓ.பன்னீர் செல்வம் - இடைப்பாடி பழனிசாமி ஆகியோர் மாசற்ற நல்ல அடிமையர்!

இதே வரிசையில் பார்ப்பனியத்திற்கு தன்னை முழு அடிமையாக்கிக் கொண்ட மோடி, கொஞ்சமும் மனம் கூசாமல் தமிழர்களை சிறுமைப்படுத்தி வருகிறார். மோடியின் இன்றைய அலங்கார உலா, காலம் உள்ளளவும் கார் உள்ளளவும் நிரந்தரம் என்றெண்ணி அடித்து ஆடுகிறார்.

மோடி அதிகார பவனிவரும் புது டில்லி கொத்தளப் பகுதியில், மாலிக் காபூர் என்ன ஆனார் என்ற வரலாற்றையும் பொருளாதார வல்லுநர் முனைவர் மன்மோகன் சிங் இப்பொழுது எப்படி இருக்கிறார் என்பதையும் சற்றே எண்ணிப் பார்க்க வேண்டும்.

நாமே அடிமை நமக்கும்கூட தமிழ் நாட்டில் இரு அடிமைகள் இருக்கின்றனரே எண்றெண்ணி அகமகிழ்ந்த மோடி, அந்த அடிமைகளின் இன்றைய நிலையை எண்ணிப்பார்த்தாவது தன்னை சற்று நிதானப்படுத்திக் கொள்ள வேண்டும்.



தமிழர்களை அழித்து ஒழிக்கும் இலங்கை அமைச்சரவையில்கூட தமிழருக்கு இடம் உள்ளது 728.6 சதுர கிலோமீட்டர் பரப்பளவுடன் 55 இலட்ச மக்களைக் கொண்ட சிங்கப்பூரிலும் அசலும் கலப்புமாக மூன்று தமிழர்கள் அமைச்சர்களாக உள்ளனர்.

இலங்கைக்கு அடுத்து தமிழர்கள் அதிக அளவில் புலம்பெயர்ந்து வாழும் மலேசியத் திருநாட்டில் இந்த முறை ஒரு தமிழர் அமைச்சராக இல்லாவிடினும் இந்திய வழித்தோன்றலைச் சேர்ந்தவர் அமைச்சராக உள்ளார். ஆனால், ஒரு இலட்சத்து 30ஆயிரத்து 60 சதுர கிலோமீட்டர் பரப்பில் ஏறக்குறைய 8லட்சத் தமிழர்கள் வாழும் சூழலில் தமிழர்தம் தலைநிலமாம் தமிழ்நாட்டையும் மதிக்கவில்லை அந்த நிலத்தேவாழும் தமிழர்களையும் புதுடில்லி பார்ப்பன அரசு மதிப்பதில்லை ஆனாலும், இதில் மோடியை குறைசொல்லி ஒன்றும் ஆகப்போவதில்லை அவர் வெறும் அம்புதான் பார்ப்பனர்தான் வில்.

எல். முருகன் என ஒருவர் இருக்கிறாரே என்று யாரேனும் கருதலாம் அது ஒரு தொத்தைத் சொத்தைத் காரணம் அந்த ஆரிய அடிமை வகிப்பது கேபினட் தகுதி கொண்டதல்ல்

ஒரு சில மாதங்களுக்கு முன் மலேசிய இந்து சங்க மேநாள் தலைவர் டத்தோ அ. வைத்திலிங்கம், "இப்பொழுதெல்லாம் ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தைப் பற்றி அடிக்கடி எழுதுகிறீர்களே" என்றார். அவர்தான் தொலைபேசிவழி அழைத்தார்.

ஆமாம், கைத்தடியுடன் ஊர்வலம் நடத்தும் அவர்கள், மத ஆதிக்கத்தை குறியாகக் கொண்டவர்கள் என்று நான் சொல்லி முடிப்பதற்குள், "அதெல்லாம் ஒண்ணுமில்லீங்க் போலீஸ்காரர்கள் கையில் தடியை வைத்திருப்பதில்லையா? அதைப்போன்றதுதான் இதுவும் மற்றபடி அவர்கள் நிறைய சமூகப் பணி ஆற்றுகின்றனர்" என்று தற்காத்தார்.

காவலரின் கையில் இருக்கும் தடி என்ன முத்தமா கொடுக்கும்? தேவையான பொழுது ஆளை அடிப்பதற்காகத்தான் அவர்களில் கையில் அது இருக்கிறது. இந்த உண்மையைக் கூட மறைத்து அவர் என்னிடம் உரையாடினார்.

உடல் நலம் பாதித்த நிலையில் இருந்த அவரிடம் அதிகமாக விவாதிக்கவோ கருத்தாடவோ விரும்பாத நான், பார்ப்பனர்களின் ஆதிக்கம் மிக்க ஆட்சி மோடி தலைமையில் அமைந்துள்ள இந்த ஒன்பது ஆண்டுகளில், ஒரேயொரு தமிழருக்குக்கூட அமைச்சர் பதவி கொடுக்காமல், தமிழினத்தை சிறுமைப் படுத்துவதைப் பற்றி நீங்கள் எண்ணிப்பார்க்க மாட்டீர்களா என்று கேட்டதும்.

ஏங்க, நிர்மலா சீத்தாராமன், ஜெய்சங்கர் இருவரும் அமைச்சர்கள்தானே என்று அவர் சொல்லி முடிப்பதற்குள், அந்த இருவரும் பார்ப்பனர்கள் தமிழர்கள் அல்லர் என்று நான் பட்டென வெடித்தேன்.



நீங்கள் இப்படி யெல்லாம் சிந்திக்கவும் கூடாது பேசவும் கூடாது அவர்கள் தமிழ்தானே பேசுகிறார்கள் அதனால் அவர்களும் தமிழர்கள்தான் என்று வைத்திலிங்கம் வாதிட்டதை பொறுக்காத நான்,

நீங்கள் மலாய் மொழி பேசுகிறீர்கள் அதனால் உங்களை மாலாய்க்காரர் என்று அச்சமூகம் ஏற்றுக் கொள்ளுமா? சீன மொழியை கற்றுக் கொண்டால் உங்களை சீனர் என ஏற்றுக்கொள்வார்களா என்று கேள்விகளையே நான் பதிலாக முன்வைத்தபொழுது, அவர் உடனே பொங்கிவிட்டார். "இப்படி யெல்லாம் சிந்திப்பதால்தான் நீங்கள் முன்னேறவில்லை" என்று நஞ்சைக் கக்கினார். அதாவது நான் பணம்படைத்தவனாக இல்லையென்பதை சுட்டிக் காட்டினார்.

நான் நிதானம் இழக்காமல் அந்தப் பெரிய மனிதரிடம் தொடர்ந்து நல்லபடி பேசியதையும் அவர் தொடர்ந்து தெரிவித்த கருத்தையும் இங்கேப் பதிவிட விரும்பவில்லை. இந்தியப் பிரதமர் மோடியின் ஆஸ்தான வழக்கறிஞரைப் போல ஒரு கட்டத்தில் அவர் என்னிடம் வாதிட்டார்.

ஆனாலும், நான் சிந்தனையில் வளமாகத்தான் இருக்கிறேன். நம் ஔவை மூதாட்டி குறிப்பிட்டதைப் போல, கூன்-குருடு-செவிடு-பேடு இன்றி இந்த மண்ணில் நல்லவண்ணம் வாழ்வதே பெரும்பேறுதான் என்ற கருத்து என் மனதிற்குள் எல்லைகொண்டு நிற்க, அந்தக் கருத்தாடலின் மற்ற பகுதியை இங்கே பதிவிட விரும்பவில்லை.

நாட்டில் உள்ள சிறந்த கல்வியாளர்களில் ஒருவரும் சமூகப் பற்றாளரும் நன்னெறிசார் ஆன்மிக சிந்தனையில் திளைத்தவருமான பேராசிரியர் டத்தோ என்.எஸ். இராஜேந்திரன் இப்பொழுது என்முன் வந்து நிற்பதைப் போல உணர்கிறேன்.

டத்தோ வைத்திலிங்கத்துடனான உரையாடல் குறித்து மனம் வருந்தி அவருடன்



செங்கோல் முன் விழுந்து வணங்கிய பிரதமர் நரேந்திர மோடி

பகிர்ந்து கொண்டபொழுது, தயவு செய்து இதைப்பற்றியெல்லாம் எதுவும் எழுதவேண்டாம் அவர் உடல் நலம் பாதிக்கப்பட்டுள்ளார் என்று என்னிடம் கேட்டுக் கொண்டதால், இந்த மட்டில் நிறுத்திக் கொள்கிறேன்.

இதுகூட, இந்த வேளையில் தேவையென்பதால் தவிர்க்க முடியாமல் குறிப்பிடும்படி நேர்ந்துவிட்டது பொதுவாக, ஆரிய அடிமைப் புத்தி கொண்டவர்களுக்கு, சொந்த இனத்தாரைப் பற்றிகூட அக்கறையின்றிப் போவதற்கு இது தக்க சான்றெனக் கருதுகிறேன்.

மதுரையில் பிரம்மாண்ட அளவில் அடிக்கல் நாட்டப்பட்ட எய்ம்ஸ்ட் பல்கலைக்கழகம் அப்படியே கிடப்பில் உள்ளது இதற்குப் பின் வட இந்தியாவில் மோடி அடிக்கல் நாட்டிய மருத்துவமனை யெல்லாம் மளமளவென கட்டி முடிக்கப்பட்டுவிட்டன.

உலகம் முழுவது ஏறக்குறைய 28ஆயிரம் பேர் மட்டும் பேசக்கூடிய சமஸ்கிருத மொழிக்காக ஆண்டுதோறும் 500கோடி, 600 கோடி ரூபாய் என நிதி ஒதுக்கும் மோடி, தமிழ் வளர்ச்சிக்காக அவர் ஆற்றிய பங்கு குறித்து எவரேனும் குறிப்பிட முடியுமா?

தமிழ் நாட்டில் மாணவர்கள், விவசாயிகள், மீனவர்கள், பொதுத் துறை ஊழியர்கள் என அனைத்துத் தரப்பினரின் வாழ்வுக்கும் முட்டுக்கட்டை போடும் மோடி, விவசாய நிலங்களையும் இயற்கை எரிவாயு-எண்ணய் துரப்பன மேடைகளை அமைப்பதன் மூலம் கெடுக்கப்பார்க்கிறார்.

இப்படி யெல்லாம், அனைத்து வகையாலும் தமிழர் வாழ்வு, தமிழர்தம் வாழ்விடம், அவர்களின் உயிரணைய மொழி உள்ளிட்ட அனைத்தையும் கெடுப்பது தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்க, பிள்ளைப் பிடிப்பவன் கிளுகிளுப்பை, இணிப்பு தடவிய மயக்க மாத்திரையுடன் அலைவதைப்போல வாக்குகளைப் பொறுக்க வள்ளுவர், ஔவை, வேல், இப்பொழுது கோல் எனத் திரிவதை சிந்தனைத் தெளிவுள்ள தமிழர்கள் உலகளாவிய நிலையில் உணராமல் இல்லை.

எல்லாவற்றுக்கும் காலமகள் ஒரு கணக்கு வைத்திருப்பாள் பொறுத்திருப்போம்.

**நக்கீரன் - Nakkeeran 013-244 36 24**

# இவ்வார ராசிபலன்

(28 பக்கத் தொடர்ச்சி)




**மகரம்:** இன்னல்கள் அகலும் வாரம். ஆக்கம் அதிகரிக்கும் கடன் சுமை குறையும். குடும்ப அன்யோன்யம் அதிகமாகும். பிள்ளைகள் கல்வி மேம்படும். தொல்லைகள் குறையும். கால்நடைகளால் பலன் உண்டு. காதலில் மோதல் உண்டு. எதிலும் கவனம் தேவை. உணவுபிரியம் அதிகரிக்கும். பாராட்டுப் பெருகும். புதிய தொழில் அமையும். உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும். திறமைகள் அதிகமாகும். புத்துணர்ச்சியோடு செயல்படுவீர்கள். அரசியலில் புகழ் கூடும். வீண் பழி அகலும். சஞ்சலம் மறையும். மனையின் அன்பு அதிகரிக்கும். மற்றவர் தொல்லை குறையும். ஜவுளித்தொழில் உயர்வு தரும். உ ணம் அதிகரிக்கும். காரியம் இழுபறியாகும். பொருளாதார உயர்வு ஏற்படும். அரசு வழியில் கவனம் தேவை. பழிச்சொல் தேடி வரும். முயற்சி பலன் தரும். துன்பங்கள் விலகும். கடன் சுமையிலிருந்து விடுபடுவீர்கள். கல்விச்செலவு உண்டு. உறவினர் வருகை உண்டு. உலோகத் தொழில் உயர்வு தரும். குடும்ப பாசம் அதிகரிக்கும். முடிவுகள் சாதகமாகும். புகழ் கூடும். அரசு வழி ஆதாயம் உண்டு. உணவு விடுதி லாபம் தரும். கலைஞர்களுக்கு வாய்ப்புகள் கூடும். மாலை நேரப் பிரார்த்தனை மன அமைதி தரும். வசந்தம் தேடி வரும். பிள்ளைகளால் மதிப்பு உயரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பச்சையம்மன், அதிர்ஷ்ட எண்: 5,2,3,1
அதிர்ஷ்ட நிறம்: காவி நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,C




**கும்பம்:** முன்னேற்றம் தரும் வாரம். தொழில் அபிவிருத்தி உண்டாகும். பொருளாதார மேன்மை உண்டு. குடும்பத்தில் அமைதி பெருகும். சந்தர்ப்ப சாதகம் உண்டு. ஆரோக்கியம் அதிகரிக்கும். உத்தியோக உயர்வு தரும். வாழ்வில் வளம் உண்டு. வியாபார மேன்மையுண்டு. விரும்பிய பொருள் சேரும். சுபகாரியம் கைகூடும். ஆபரணச் சேர்க்கையுண்டு. எண்ணங்கள் கைகூடும். பொதுப்பிரச்சனைகளில் தலையிடுவது தவிர்க்கவும். மாணவர்கள் பாராட்டுப் பெறுவர். நிர்வாகச் செலவுகள் கூடும். வாய்ப்புக்கள் வந்து சேரும். வழக்குகள் சாதகமாகும். உத்தியோகத்தில் ஒற்றுமை நிலவும். உடல் உஷ்ணம் வந்து போகும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். உடன் பிறப்புக்களால் நன்மை உண்டு. தேக ஆரோக்கியம் மிளிரும். பிள்ளைகளால் சந்தோஷம் கூடும். போட்டிகள் அதிகமாகும். பெண்களுக்கு நாவடக்கம் தேவை. பொறுமையை கையாள வேண்டும். மனைவி உறவு சீராகும். கருத்து வேறுபாடுகள் அகலும். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். கலைஞர்களுக்கு வாய்ப்பு வரும். பழைய பாக்கி வசூலாகும். திடீர் பயணம் உற்சாகம் தரும். பங்குச்சந்தையில் லாபம் கிடைக்கும். வயிறு சம்மந்தமான நோய் வந்து நீங்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: செல்லாண்டியம்மன், அதிர்ஷ்ட எண்: 5,2,3,1
அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,P




**மீனம்:** வாய்ப்புக்கள் தேடி வரும் வாரம். வேலை பளு அதிகரிக்கும். நல்லோர்களின் பாராட்டு கிடைக்கும். மனக்கசப்பு நீங்கும். புதிய தொழில் வாய்ப்புகள் பெருகும். இடமாற்றம் ஏற்படும். அன்பு அதிகரிக்கும். பழைய கடன் அடையும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். எண்ணங்கள் பூர்த்தியாகும். ஆசைகள் நிறைவேறும். பெற்றோர் உடல்நிலையில் கவனம் தேவை. திருமண முயற்சி பலன் தரும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். பொது விஷயங்களில் நாட்டம் ஏற்படும். விளையாட்டுத்துறையில் வெகுமதி கூடும். பங்குச்சந்தையில் பணம் புரளும். பொதுப்பணியில் ஆர்வம் கூடும். பழைய பகை தீரும். வீண் செலவுகள் அதிகரிக்கும். பெரியோர்களின் வாழ்த்துக்கள் கிடைக்கும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். முயற்சிகள் பலன் தரும். மங்களச் செய்தி வரும். கமிஷன் தொழில் லாபம் தரும். மருத்துவச் செலவு உண்டு. பொன், பொருள் சேரும். மாற்று யோசனை பலன் தரும். வேலை வாய்ப்புக் கூடும். பிரார்த்தனைகள் பலன் கொடுக்கும். வியாபாரம் செழிக்கும். மன அமைதி கூடும். பயணத்தடை ஏற்படும். திருத்தமான முடிவு ஏற்படும். வருத்தங்கள் மறையும். தடுமாற்றம் ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அம்மன், அதிர்ஷ்ட எண்: 4,2,1,7
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,A

# கடந்தவையும் கடப்பவையும் (59)

***தொடர்ந்த அப்பாதையிலே உள்ளதுதான் இன்று - வாசல்வரை***
***வளர்ந்த அப்பாடசாலை கொற்றாவத்தை அமெரிக்கன் மிஷன் - முன்னர்***

***வெள்ளை மணல்தரை வெட்டையில் வாகைமரம் - அதை***
***மெள்ளக் கடந்து போனால்***
***வகுப்பறைகள்***

***நாற்சதுர வீடுபோல் நான்கு பெரும் கட்டடங்கள் - நடுவில்***
***கூட்டுப் பிரார்த்தனைக்கு ஏற்றவொரு முத்தமொன்றும்***

***உபதலைவர் பெரியதந்தை அவர் மடியில்***
***இருந்தபடி எழுதியது 'அ' - பின்பு***

***காலங்கள் பல கடக்க தொண்டர் ஆசிரியராய் - ஆசிரியக்***
***கோலத்தில் திரிந்த நாட்கள் பெருமழகு***

***பல்கலைக்குப் போகுமுன்பும் பட்டங்கள் பெறமுன்பும்***
***'நல்லாசிரியர்' என்ற பெயர் தந்ததுவும்***

***பெரிய தந்தையுடனேயே பிரியாவிடை கூட - நல்***
***மரியாதையுடன் செய்து அனுப்பியதும் அப்பள்ளியே***

***அப்பள்ளியிலே இருந்த காலம் இரண்டுமே***
***எத் தொல்லையும் இல்லாக் காலம் - ஆனால்***

***இடைப்பட்ட காலமும் அதற்குப் பிற்பட்ட காலமும்***
***தடைப்பட்டுத் தடைப்பட்டு அக்கால மாணவர்கள் - கரைசேர***

***கனக்க எல்லாம் பட்டுவந்தோம் - கொஞ்சம்***
***மினக்கெட்டாலும் சொல்லியே ஆகவேண்டும்***

(தொடரும்)

**-- உமா மோகன் -- மொன்றியால் - கனடா --**

# அன்பின் தொனி - 692

**பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)**

**ஜெபம்**

**ஜெபத்திற்கான சந்தற்பம், நோக்கம், உதாரணங்கள் -** Occasions, Objects, Examples of Prayer

அவன் தேவனை நோக்கி விண்ணப்பம்பண்ணும்போது, அவன் அவருடைய சமுகத்தைக் கெம்பீரத்தோடே பார்க்கும்படி அவர் அவன்மேல் பிரியமாகி, அந்த மனுஷனுக்கு அவனுடைய நீதியின் பலனைக் கொடுப்பார். **- யோபு 33: 26**

எருசலேமின் சமாதானத்துக்காக வேண்டிக்கொள்ளுங்கள், உன்னை நேசிக்கிறவர்கள் சுகித்திருப்பார்களாக. **- சங்கீதம் 122: 6**

நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள், உங்களைச் சபிக்கிறவர்களைச் ஆசீர் வதியுங்கள், உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள், உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களை துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம்பண்ணுங்கள். **- மத்தேயு 5: 44**

அவர் திரளான ஜனங்களைக் கண்டபொழுது, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போலத் தொய்ந்துபோனவர்களும் சிதறப்பட்டவர்களுமாய் இருந்தபடியால், அவர்கள்மேல் மனதுருகி, தம்முடைய சீஷர்களை நோக்கி: அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம், ஆதலால், அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும் படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள் என்றார். **- மத்தேயு 9: 36-38**

பின்பு, அவர் சீஷர்களிடத்தில் வந்து, அவர்கள் நித்திரைபண்ணுகிறதைக் கண்டு, பேதுருவை நோக்கி: நீங்கள் ஒரு மணி நேரமாவது என்னோடேகூட விழித்திருக்கக்கூடாதா? நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள், ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது என்றார். **- மத்தேயு 26: 40-41**

பின்பு அவர் எரிகோவுக்குச் சமீபமாய் வரும்போது, ஒரு குருடன் வழியருகே உட்கார்ந்து பிச்சைகேட்டுக் கொண்டிருந் தான். ஜனங்கள் நடக்கிற சத்தத்தை அவன் கேட்டு, இதென்ன என்று விசாரித்தான். இயேசு போகிறார் என்று அவனுக்கு அறிவித்தார்கள். அப்பொழுது அவன்: இயேசுவே, தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும் என்று கூப்பிட்டான். முன் நடப்பவர்கள் அவன் பேசாமலிருக்கும்படி அவனை அதட்டினார்கள். அவனோ: தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும் என்று மிகவும் அதிகமாய்க் கூப்பிட்டான்.
**- லூக்கா 18: 35-38**

மேலும் சகோதரரே, தேவசித்தத்தினாலே நான் சந்தோஷத்துடனே உங்களிடத்தில் வந்து உங்களோடு இளைப்பாறும் படியாக, யூதேயாவிலிருக்கிற அவிசுவாசிகளுக்கு நான் தப்புவிக்கப்படும்படிக்கும், நான் எருசலேமிலுள்ள பரிசுத்த வான்களுக்குச் செய்யப்போகிற தர்மசகாயம் அவர்களால் அங்கிகரிக்கப்படும்படிக்கும், நீங்கள் தேவனை நோக்கிச் செய்யும் ஜெபங்களில், நான் போராடுவதுபோல நீங்களும் என்னோடுகூடப் போராடவேண்டுமென்று நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிமித்தமும், ஆவியானவருடைய அன்பினிமித்தமும், உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்.
**- ரோமர் 15: 30-32**

உபவாசத்திற்கும் ஜெபத்திற்கும் தடையிராதபடிக்கு இருவரும் சிலகாலம் பிரிந்திருக்கவேண்டுமென்று சம்மதித்தாலன்றி, ஒருவரைவிட்டு ஒருவர் பிரியாதிருங்கள், உங்களுக்கு விரதத்துவம் இல்லாமையால் சாத்தான் உங்களைத் தூாண் டிவிடாதபடிக்கு, மறுபடியும் கூடிவாழுங்கள்.
**- 1 கொரிந்தியர் 7: 5**

உங்களில் ஒருவன் துன்பப்பட்டால் ஜெபம்பண்ணக்கடவன், ஒருவன் மகிழ்ச்சியாயிருந்தால் சங்கீதம் பாடக்கடவன். உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால், அவன் சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக, அவர்கள் கர்த்தருடைய நாமத் தினாலே அவனுக்கு எண்ணெய்பூசி, அவனுக்காக ஜெபம்பண்ணக்கடவர்கள். அப்பொழுது விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும், கர்த்தர் அவனை எழுப்புவார், அவன் பாவஞ்செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக் கப்படும். **- யாக்கோபு 5: 13-15**

அந்தப்படியே புருஷர்களே, மனைவியானவள் பெலவீன பாண்டமாயிருக்கிறபடியினால், உங்கள் ஜெபங்களுக்குத் தடை வராதபடிக்கு, நீங்கள் விவேகத்தோடு அவர்களுடனே வாழ்ந்து, உங்களுடனேகூட அவர்களும் நித்திய ஜீவனாகிய கிருபையைச் சுதந்தரித்துக்கொள்ளுகிறவர்களானபடியினால், அவர்களுக்குச் செய்யவேண்டிய கனத்தைச் செய்யுங்கள்.
**- 1 பேதுரு 3: 7**

எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று, ஆகையால் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து, ஜெபம்பண்ணுவதற்கு ஜாக்கிரதையுள்ளவர்களாயிருங்கள். **- 1 பேதுரு 4: 7**

**தொடரும்...**

# MORTGAGE FINANCIAL

RESIDENTIAL · COMMERCIAL · INDUSTRIAL
VACANT LAND · CONSTRUCTION




| 1st & 2nd Mortgages | Purchase | Refinance
| Renewal | Switches | Equity line of Credit
| Pre-approvals | Self-employed | Multi-rental properties
| New immigrants

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

1585 Markham Rd, Unit #406,
Toronto, ON. M1B 2W1
canada

www.subra.com

**WE DEAL WITH ALL BANKS**

Powered By
MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Brokeerage #10330 / Licence # M15001465

Scotiabank · TD Canada Trust · RFA · FIRST NATIONAL FINANCIAL LP

MCAP · HOME TRUST · EQUITABLE BANK · radius financial · RMG mortgages

மொன்றியல் நகரில்
உதயன் UTHAYAN
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள்,
பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும்
அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பழமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS! Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas
Broker
Sun Sanmugathas
Broker of Record
PROPERTY MAX
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

Lanka Salon & Spa
லங்கா சலூன்
Haircut | Hair Styling | Shaving
- Men's Hair Cut
- Beard Lineup
- Kid's Hair Cut
- Hair Oil Massage
- Baby Shave
- Hair Colouring
- Facial
BARBER SHOP
905-808-9930
5 MCMURCHY AVE N, UNIT 12 BRAMPTON, ON L6X 2R6
905-783-1895
3470 PLATINUM DRIVE, UNIT 35 MISSISSAUGA, ON L5M 2S4

உதயம் 1417 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday June 2, 2023

# உதயன் சர்வதேச விருதுகள் வழங்கும் விழா — 2023

நமது கனடா உதயன் பத்திரிகை நிறுவனம் 17வது ஆண்டாக நடத்தும் "உதயன் சர்வதேச விருதுகள் வழங்கும் விழா-2023. எதிர்வரும் யூன் 18ம் திகதி ஸ்காபுறோவில் நடைபெறுகின்றது
இரண்டு வெளிநாட்டு விருதாளர்களோடு ஐந்து கனடா வாழ் விருதாளர்களும் கௌரவிக்கப்பெறுகின்றார்கள்.
"இளையோர்களுக்கான அடையாளம்" விருதுகளை ஒன்றாரியோ மற்றும் கியுபெக் மாகாணங்களிலிருந்து தெரிவு செய்யப்பெற்ற இரண்டு இளம் வெற்றியாளர்கள் பெறுகின்றார்கள்.
**uthayannews@yahoo.com or www.uthayannews.ca**
**416 732 1608**



# FRONTLINE COMMUNITY CENTRE சேவை வழங்கும் நிறுவனத்தின் பணிகளைக் கௌரவித்து ஒன்றாரியோ அரசு வழங்கிய நிதி உதவி

ஸ்காபுறோ நகரில் பல வருடங்களாக இயங்கிவரும் **FRONTLINE COMMUNITY CENTRE** இலாப நோக்கமற்ற நிறுவனத்தின் அர்ப்பணிப்பான பணிகளையும் அவற்றால் பயன்பெறும் தமிழ் பேசும் மூத்தோரின் தேவைகள் கருதியும். ஒன்றாரியோ மாகாண அரசு நிதி உதவி வழங்கியுள்ளது,
கடந்த வெள்ளிக்கிழமையன்று **FRONTLINE COMMUNITY CENTRE** நிறுவன அலுவலகத்தில் நடைபெற்ற விசேட வைபவம் ஒன்றில் மேற்படி நிதி உதவி தொடர்பான அறிவித்தலை ஒன்றாரியோ மாகாண அமைச்சரும் மாகாண பாராளுமன்ற உறுப்பினருமான கௌரவ றேமண்ட் சோ அவர்கள் வெளியிட்டார்கள்.
(உள்ளே விபரமான செய்தி 11ம் பக்கத்தில்)

# பேராசிரியர் வேலுப்பிள்ளை இலகுப்பிள்ளை எழுதிய "அணுவைத் துளைத்து" வெளியீட்டு விழா

கனடா வாழ் தமிழ் பேசும் அணு விஞ்ஞானி. பேராசிரியர் வேலுப்பிள்ளை இலகுப்பிள்ளை எழுதிய "அணுவைத் துளைத்து" என்னும் நூலின் வெளியீட்டு விழா ஸ்காபுறோவில் கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று சிறப்பாக நடைபெற்றது. விழாவிற்கு முன்னாள் அதிபர் சின்னையா சிவனேசன் தலைமை தாங்கினார். பேராசிரியர்கள் இ. பாலசுந்தரம். ஜோசப் சந்திரகாந்தன் மற்றும் சாமி அப்பாத்துரை. பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி. "உதயன்" லோகேந்திரலிங்கம்"யுகம் வானொலி" கணபதி ரவீந்திரன் ஒலிபரப்பாளர் இளையபாரதி உட்பட பலர் உரையாற்றினார்கள்.
சிறப்புப் பிரதிகளை வர்த்தகப் பிரமுகர் சங்கர் நல்லதம்பி. ரஜீவ் சுப்பிரமணியம் மற்றும் சமூக ஆர்வலர்கள் சசிகலா நரேந்திரா மற்றும் விசு கணபதிப்பிள்ளை உட்பட பலர் பெற்றுக்கொண்டனர். நூலாசிரியர் பேராசிரியர் வேலுப்பிள்ளை இலகுப்பிள்ளை ஏற்புரை வழங்கினார்.







# """அடித்தட்டு மக்களின் கதைகளைக் கொண்ட திரைப்படங்கள் ஒருபோதும் தோல்வியைத் தழுவுவதில்லை"

## கனடா ஆரபி படைப்பகத்தின் தயாரிப்பான "FINDER" திரைப்படத்தின் இயக்குனரிடம் பகிர்ந்து கொண்ட கவிப்பேரரசு வைரமுத்து

(சென்னையிலிருந்து செய்தியாளர் சத்தியன்)



"""அடித்தட்டு மக்களின் கதைகளைக் கொண்ட திரைப்படங்கள் ஒருபோதும் தோல்வியைத் தழுவுவதில்லை .எனவே தங்கள் திரைப்படம் அவ்வாறான திரைக் கதையைக் கொண்டிருப்பதால் நீங்கள் நம்பிக்கையுடன் உங்கள் **FINDER** திரைப்படத் தயாரிப்பு வேலைகளைத் தொடருங்கள். அதற்கு எனது நண்பர்கள் சுவிற்சலாந்து வாழ் சதீஷ் மற்றும் கனடா வாழ் லோகேந்திரலிங்கம் ஆகியோரின் வேண்டுகோளின்பேரில் பாடல்களை எழுதுவதற்கு மனமுவந்து ஏற்றுக் கொண்டுள்ளேன்"""
இவ்வாறு கனடா ஆரபி படைப்பகத்தின் நிறுவனர் ரஜீவ் சுப்பிரமணியத்தின் தயாரிப்பில் வெளிவரவுள்ள " **FINDER**" திரைப்படத்தின் இயக்குனரான வினோத் ராஜேந்திரனிடம் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்ட போது தெரிவித்தார் கவிப்பேரரசு வைரமுத்து.

(உள்ளே விபரமான செய்தி 23ம் பக்கத்தில்)

# யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்:

# பொது நினைவுச் சின்னம்



அரசாங்கம் போரில் உயிர்நீத்த அனைவருக்குமாக ஒரு பொதுவான நினைவுச் சின்னத்தை உருவாக்கப் போவதாக அறிவித்திருக்கிறது.தமிழ்க் கட்சிகளில் சில அதை எதிர்க்கின்றன்சில அதை ஆதரிப்பதாகத் தெரிகின்றது.
போரில் உயிர் நீத்த எல்லாருக்குமான நினைவுச் சின்னம் என்பது உலகில் ஏற்கனவே பல நாடுகளில் உண்டு. குறிப்பிட்ட நாட்டில் அல்லது குறிப்பிட்ட பிரதேசத்தில் போரில் உயிர்நீத்த அனைவருக்குமானதாக அது அமையும். அதற்கு முகம் இருக்காது.ஆளடையாளம் இருக்காது.அது போர் வெற்றியையும் பிரதிபலிக்காதுதோல்வியையும் பிரதிபலிக்காது.குறிப்பாக,நிலைமாறுகால நீதியின் ஒரு பிரிவாகிய இழப்பீட்டு நீதியின் கீழ் அவ்வாறு நினைவுச் சின்னங்களை உருவாக்குவதற்கு பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிமை உண்டு.
(உள்ளே விபரமான செய்தி 10ம் பக்கத்தில்)

தமது நற்சேவையினால் தமிழ் மக்களின்
உள்ளங்களை வெற்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Realty Inc., Brokerage
Siva Shanmuganathan Broker
Joy H. Selvanayagam Broker